தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூல்நிலையம்

# திருவேங்கடநாதன் வண்டுவிடு தூது

உ. வே. சாமிநாதையர்
நூலகச் சுவடி


பதிப்பாசிரியர்

மு. சண்முகம் பிள்ளை

பொறுப்பாசிரியர்

டாக்டர் இரா. நாகசாமி



வெளியிட்டோர்

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை

1981

First Edition 1981
T. N. D. A. Publication No. 80

TAMIL NADU STATE DEPT. OF ARCHAEOLOGY MADRAS
10978

© Tamilnadu State Department of Archaeology

**Thiruvenkatanathan Vandu Vidu Thudu**

Editor
**M. Shanmugam Pillai**

General Editor
DR. R. NAGASWAMY

Price: Rs. 4-50.

Printed at the Departmental Press and Published
by the State Department of Archaeology
on behalf of the Government Oriental Manuscript Lribray

செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர், தமிழ்நாடு அரசு

செயின்ட்ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600009.

தமிழ்நாடு அரசு இதுகாறும் அச்சில் வெளிவராத பழம் ஓலைச்சுவடிகளைப் படி எடுத்து அச்சிட்டுப் பதிப்பிக்க ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது. அதற்கு உரிய பண ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டிலும், மற்றும் நாட்டின் பிற பகுதிகளிலும், பல்வேறு சுவடி நூலகங்களில் தமிழக மருத்துவம், கணக்கு, இசை, நாட்டியம், சிற்றிலக்கியங்கள், பேரிலக்கியங்கள் இன்னபிற நூல்கள் அச்சிடாமல் இருப்பது கணக்கிடப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பல்வேறு சுவடி நூலகங்களையும், அந்நிறுவனங்களில் உள்ள அச்சில் வராத நூல்களை அச்சிடும் பணிக்கு உதவுமாறு அரசு கேட்டுள்ளது. பல்வேறு நூலகத்தார்களும் தேவையான வசதிகளை அளிக்க மனமுவந்து முன் வந்துள்ளனர். தமிழ்த் துறையில் வல்லுநர்கள் இந்நூல்களை ஆராய்ச்சிக் குறிப்புடனும், முன்னுரையுடனும் பதிப்பித்துத்தர முன்வந்துள்ளனர். இந்த நூல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் அடிக்குறிப்புக்களுடன் வெளியிடப்படும். ஓலைச்சுவடிகளைத் தேர்ந்தெடுத்துப் படி எடுத்துப் பதிப்பிக்கும் பணியைத் தொல்பொருள் ஆய்வுத்துறை, மேற்கொண்டுள்ளது.

இதுகாறும் 75 நூல்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல அச்சாகி இந்நூல் வரிசையில் வெளி வருகின்றன. அரசின் இந்தப் பணியில் ஒத்துழைக்க முன்வந்துள்ள ஆராய்ச்சி வல்லுநர்களையும், தமிழ்ப் பெரியோர்களையும், சுவடி நூலகங்களையும் நான் வாழ்த்துகின்றேன். இதுபோன்று விரைவில் அச்சில் வராத அனைத்து நூல்களும் ஆராய்ச்சியாளர்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் மற்றும் பொது நூலகங்களுக்கும் கிடைக்கும் வகையில் வெளிவரும் என்பதில் ஐயம் இல்லை. இதன் பயனாய் காலந்தோறும் தமிழில் தோன்றிய பல்வேறு கருத்துக்களையும் பண்பாட்டையும் முழுமையாக அறிந்து கொள்ள இயலும் என்பதில் ஐயம் இல்லை.

செ. அரங்கநாயகம்
27-12-1980

**C. ARANGANAAYGAM**
Minister for Education
Government of Tamilnadu

Fort St. George
Madras-600009.
27-12-80

The Government of Tamilnadu, under a special scheme of publication of unpublished Tamil Manuscripts have come forward to undertake the printing and publishing of all the available unpublished Tamil Manuscripts in the State. Necessary funds towards the publication have been provided for the purpose. It is estimated that several hundred unpublished Tamil manuscripts dealing with native medicines, mathematics, music, fine arts, and literary compositions of various nature, are lying unpublished in different Manuscripts Libraries of this State and also in other parts of the country. Various Manuscript Libraries in the State, have been approached to make available their unpublished texts for publication. The authorities of these Manuscripts Libraries have come forward with interest and enthusiasm to afford necessary facilities for the same. Eminent Tamil Scholars, well-versed in the art of editing have been requested to take up the work of editing. Under the scheme the texts will be critically edited with suitable foot-notes and brief introductory analysis both in English and Tamil for the benefit of researchers and scholars. The selection of manuscripts, copying and editing have been entrusted to the Tamilnadu State Department of Archaeology.

So far the texts of 75 manuscripts have been copied and a number of them edited and are made available in printed form in this series. I am thankful to all the institutions and scholars who have come forward to join the Government in this venture. It is only a beginning and I do hope that all the available texts will be in the hands of scholars, educational institutions and public Libraries, so that the contribution of the Tamils through the centuries in different fields will be available for the proper understanding and comprehension of the Tamil Language, Literature and Culture.

C. ARANGANAYAGAM
27-12-80.

# INTRODUCTION

The work "*Thiruvenkatanāthan Vaṇḍu Viḍu Dūdu*" is on a chieftain Thiruvenkatanātha of Thiruk-Kurugur (now called Alwar Thirunagari), in south Pāndi Nādu. He seems to be a Vellala by caste and a great follower of Ramanuja's Visishtadvaita system. He was deeply devoted to Nammālvār and Rāmānuja, and was greatly attached to the Vaishnava Mutt of Vanamamalai. He used to offer worship daily to Lord Vishnu (Achyta) Thiruvenkata-nāthān was a great scholar and was called on '*Astāvadhāni*'.

The chieftain was the son of Durai Subramanya, and had two brothers Minakshinātha and Swaminātha. One Sankaranārāyana was the brother of Thiruvenkatanātha's elder brother. Sankaranārāyana's sons Duraimalai Pillai, Deivanayaka and Peria Thiruvadivibegan are mentioned as his cousins. His uncles Sankaranārāyana, Taiyalbagan Subramanyan and Srinivasan are also mentioned. Besides, Sankaramurthi, Vaikuntanatha, and his brothers-in-law are also mentioned in this text.

In addition to this Dūdu, there is also a '*Pillai Tamil*' work on this patron. A few stray verses on this Patron are also available which give some biographical notes on his work. He is said to have made and gifted a *garuda vāhana* to the Thiru-Kurugur temple. A verse giving this information, states that the *Garuda Vāhana* was conseated in the Kollam year 965 (1790 A. D.) Thus the date of this chieftain is well attested.

The name of the author of this work is not known. The original manuscript a solitary manuscript was collected by the great Tamil savant Dr. U. V. Swaminatha Iyer and is

now preserved in the U.V. Swaminatha Iyer Library, Thiruvanmiyur. (R. N 1754)

*Tūdu* is a special type of literary composition, the antiquity of which goes back to the Sangam age. Tolkappiyar the grammarian, calls this type of literary compositions as "*Vāyil*" (*Porul*- Karpiyal - 52) One of the *Puranānuru* verses (67) refers to a bird being sent as a messenger to the Chola ruler Ko-Perumchola by the poet Pisirāndaiyār. Later devotional literature has many such compositions, making use of various birds like Swan, Nārai, Bee, etc. as messengers. The work generally describes the love lorn condition of either the hero or the heroine, who sends a messenger to communicate his or her plight. The present work is an example of the 18th century 'messenger poems' in Tamil.

At the end of the work, a few stray verses sung on the patron are also included.

The work has been ably edited by Thiru M. Shanmugam Pillai, an acknowledged authority in the field. I am thankful to him for having critically edited this text. I am thankful to the Director of the Dr. U. V. Swaminatha Iyer Library, Thiruvanmiyur, for very kindly making available this text for publication.

**R. Nagaswamy**

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முகவுரை | 1 |
| பொருளடைவு | 19 |
| நூல் | 27 |
| திருவேங்கடநாதன் மேல் தனிப்பாடல்கள் | 76 |
| திருவேங்கடநாதன் கொடிவழி | 79 |
| சிறப்புப்பெயர் அகராதி | 80 |

# திருவேங்கடநாதன் வண்டுவிடு தூது

# முகவுரை

*தூது என்பதன் விளக்கம்-அரசனும் தூதனும்-காதல் தூதும் பிறவும்-தூது இலக்கியம்-தூது இலக்கியத்தின் இலக்கணம்-உலாவும் தூதும்-அஃறிணைப் பொருள்களைத் தூது விடல்-தூது இலக்கியம் பழமையானது-தூது சொல்லி விடுத்தற்குரிய பொருள்கள்-வசைத் தூதும் நெஞ்சுவிடு தூதும்-தூது இலக்கியப் பெயரும் தனிச்சிறப்பும் - இருவகைத் தூதுகள் - திருவேங்கட நாதன் வண்டுவிடுதூது - திருவேங்கடநாதன் - நூல் ஆசிரியர்-பதிப்புக்கு உதவிய சுவடி-சுவடியை முறைப் படஅமைத்து எழுதுகை-*

## தூது என்பதன் விளக்கம்

ஒருவர் தம்முடைய கருத்தை மற்றொருவருக்கு ஓர் ஆள் வாயிலாகச் சொல்லி விடுப்பது தூது எனப்படும். தூது என்பது சொல்லியனுப்பப்படும் செய்தியையும் குறிக்கும்; சென்று செய்தி சொல்லுவோனையும் குறிக்கும். தூது சென்று உரைப்போன் தூதன் எனப்படுவான்.

மகளிர் தம் காதலர்க்குத் தோழிப்பெண்ணின் வாயிலாகச் செய்தி சொல்லியனுப்புவதும் உண்டு. பிரிவு நிலையில் தலைவியின் மனமாற்றத்தையும், சீற்றத்தையும் போக்குவதற்குத் தலைவன் தோழி முதலியோரைத் தூதாக விடுத்தலும் உண்டு. இங்ஙனம் தலைவன் - தலைவியர் பொருட்டுத் தூது செல்பவளைத் 'தூதி' என்பர்.

காதலர் பொருட்டுச் செல்லும் தூதினை 'வாயில்' என்னும் பெயரால் தொல்காப்பியர் குறிப்பிடுவர்.

'தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப'

—தொல் - பொருள் - கற்பியல். 52.

என்னும் நூற்பாவழி அகவாழ்க்கையில் வாயிலாக அமைபவர் எவரெவர் என்பதனைத் தொல்காப்பியர் தொகுத்துத் தந்துள்ளார்.

புறவாழ்க்கையில் ஆண்பாலரும் அகவாழ்க்கையில் மகளிரும் தூதாகச் சிறப்பிடம் பெறுகின்றனர். சிறுபான்மையாய் ஒளவையார், அதிகமான் நெடுமானஞ்சியிடம் அரசியல் தூது சென்றது போன்ற நிகழ்ச்சிகளும் உண்டு (புறநானூறு-95).

## அரசனும் தூதனும்

அரசனுக்கு உரிய ஆறு அங்கங்களைப் போலவே செய்தி கொண்டு செல்லும் தூதனும் சிறப்பிடம் பெறுகிறான். அரசனுக்கு நாட்டாட்சியில் அமைச்சன் எவ்வளவு இன்றியமையாதவனோ அவனைப் போன்றே தூதனும் முதன்மை இடம் பெறுகிறான். திருவள்ளுவப் பெருந்தகை அமைச்சியலில் தூதுரைப்பான் பண்புகளை விளக்கும் 'தூது' என்னும் ஓர் அதிகாரத்தை அமைத்துள்ளார். திருக்குறளுக்குப் பேருரை வழங்கிய பரிமேலழகர் தூதனை, 'தான் வகுத்துக் கூறுவான், கூறியது கூறுவான்' என இருவகையர் என்றும், இவ்விருவருள் தான் வகுத்துக் கூறும் ஆற்றல் படைத்தவன், அமைச்சனோடு ஒப்பாக வைத்து எண்ணத்தக்கான் என்றும் தெரிவித்துள்ளார்.

சிலப்பதிகாரம் முதலிய காவியங்களில் அரசியல் சார்பான தூது நிகழ்ச்சிகள் பேசப்பட்டுள்ளன. இராமாயணத்தில் அனுமன் தூது, அங்கதன் தூது நிகழ்ச்சிகளும், பாரதத்தில் உலூகன் தூது, சஞ்சயன் தூது, கிருட்டிணன் தூது பற்றிய பகுதிகளும் உள. கந்த புராணத்தில் வீரபாகு தேவர் தூது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. இந்த இதிகாச - காவியத் தூதுகள் போர் நிகழ்ச்சிகள் தொடங்குவதற்கு முன்னர் மாற்றரசர்களுக்கு விடுத்தனவாகும்.

## காதல் தூதும் பிறவும்

காவியங்களில் காதலி காதலனுக்கு விடுத்த தூதுநிகழ்ச்சிகள் சிற்சில இடம் பெற்றுள்ளன. சீவகசிந்தாமணியில் குணமாலை சீவகனுக்குக் கிளியைத் தூது விடுத்த செய்தி உள்ளது (சீவக. 1000-1002). நளனுடைய சரித்திரத்தில் நளன்

அன்னத்தைத் தமயந்தியிடம் தூது போக்கிய வரலாறு உள்ளது.

பிசிராந்தையார் என்னும் பண்டைப் புலவர் தம் ஆருயிர்த்-தோழனாகிய கோப்பெருஞ்சோழனுக்கு அன்னச் சேவலை நோக்கிச் செய்தி சொல்லியனுப்பியதைப்புறநானூற்றுப் பாடல் ஒன்று (67) தெரிவிக்கிறது.

தலைவனின் மணப்பொருட்டாகத் தூது விடும் நிகழ்ச்சி கோவை நூல்களில் இடம் பெறுகிறது. தலைவியின் ஊடலைத் தீர்ப்பதற்காகத் தூது அனுப்புவதும் உண்டு. சுந்தரமூர்த்தி-நாயனார் சிவபெருமானைத் தூது விட்டது ஊடல் நீக்கத்தின் பொருட்டேயாம்.

பக்தி நெறி தழைத்தோங்கிய காலத்தில் இறைவனிடம் பக்திக்காதல் கொண்ட அடியார்கள் தம்மை ஒரு பெண் பாலாகப் பாவித்துப் பரம்பொருளாகிய தலைவனுக்கு நாரை, கிளி முதலியவற்றைத் தூது விடுப்பதாக அமைந்த பாடல்கள் பலவாக உள்ளன. தேவார - திவ்வியப் பிரபந்தங்களில் இடம் பெற்ற தூதுவிடும் பதிகங்களும் பாடல்களும் அந்த அடியார்களின் ஆழ்ந்த பக்திப் பெருங்காதலை வெளிப்படுத்து வனவாயுள்ளன. திருஞானசம்பந்தர் திருத்தோணியப்பரிடம் வண்டு, வாரணம், நாரை, அன்னம் முதலிய பறவைகளைத் தூதுவிடுவதாக அமைந்த 'வண்தரங்கப் புனற்கமல மதுமாந்தி' எனத் தொடங்கும் பதிகமும் (முதல் திருமுறை - 60:1-10), இவ்வாறே நாரை, குயில், அன்னம் முதலியவற்றைத் தூது விடுவதாக அமைந்த சடகோபரின் 'அஞ்சிறைய மடநாராய்' எனத்தொடங்கும் திருமொழியும் (திருவாய்மொழி : 1:4) சிறப்பாகக் குறிப்பிடத் தக்கனவாம்.

'வண்தரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்தரங்க இசைபாடு மளியரசே! ஒளிமதியத்
துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்நிலைமை பரிந்தொருகால் பேசாயே !

—திருஞானசம்பந்தர் தேவாரம் 1:60:1

'அருளாத நீர்அருளி அவர்ஆவி துவராமுன்
அருள் - ஆழிப் புட்கடவீர் அவர்வீதி ஒருநாள்என்று
அருள் - ஆழி அம்மானைக் கண்டக்கால் இதுசொல்லி
அருள்; ஆழி வரிவண்டே! யாமும்என் பிழைத்தோமே?

—சடகோபர் திருவாய்மொழி : 1:4:6

இவை இரண்டும் வண்டை நோக்கி அமைந்த தூதுப்பாடல்கள் ஆகும்.

## தூது இலக்கியம்

கலம்பக இலக்கியங்களில் மகளிர் தூது விடுப்பதாக அமையும் பாடல் அந்நூலின் ஓர் அங்கமாகவே அமைந்து விளங்கக் காணலாம். இக்கலம்பக உறுப்பின் வளர்ச்சி போலக் காணப்படுகிறது தூது இலக்கியம். இது உலா, மடல் முதலிய அகப்பொருள் இலக்கியங்களைப் போலத் தனி இலக்கியமாக வளம் பெறலாயிற்று. கலிவெண்பாவினால் அமையும் தூது பிரபந்தங்கள் உலா நூல்களின் சாயலில் வளர்ந்த ஒன்று என்னலாம்.

## தூது இலக்கியத்தின் இலக்கணம்

பிரபந்த இலக்கிய வகைகளுள் தூது இலக்கியங்கள் காலந்தோறும் பிறந்து வளம் பெற்றுள்ளன. தலைவி ஒருத்தி தான் காதலித்த தலைவனிடம் ஏதேனும் ஒரு பொருளைத் தூது விடுவதாகக் கலிவெண்பாவினால் பாடப்படும் பிரபந்த வகையே தூது. தலைவன் தலைவிபால் தூது விடுத்ததாக இயற்றப்படுதலும் சிறுபான்மை உண்டு. காளிதாச மகாகவி இயற்றிய 'மேகஸந்தேசம்'; அதாவது 'மேகவிடுதூது' தலைவன் விடுத்த தூதாகும். சத்திமுற்றப் புலவர் பாண்டியன் தலைநகராம் கூடலில் குளிரால் நடுங்கித் தம்மனைவிக்கு நாரையை விளித்துத் தூதுவிட்ட 'நாராய் நாராய் செங்கால் நாராய் என்று தொடங்கும் தனிப்பாடலும் நாடறிந்த ஒன்றாகும்' வேதாந்த தேசிகர் பாடிய ஹம்ஸ சந்தேசமும் இவ்வகையினதே.

'பயில் தரும் கலிவெண் பாவினாலே
உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்
சந்தியின் விடுத்தல் முந்துறு தூதுஎனப்
பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே.'

என்னும் இலக்கண விளக்க நூற்பா (874) தூது இலக்கிய மரபுகளை எடுத்தோதுவதாகும்.

## உலாவும் தூதும்

கலிவெண்பாவினால் அமைந்த பிரபந்தங்களுள் பெரியனவும் பெரிதும் ஒப்புடையனவுமானவை உலா, தூது, மடல் என்பனவாம். இவை மூன்றும் காதற்பிரபந்தங்கள். இவற்றுள் காமம் கைகூடா நிலையில் நேரும் மடல் ஏற்றத்தைத் தனியாக வைத்தால் உலாவும் தூதுமே இணைந்துவரும். தூதின் ஓர் அங்கமாகவும் உலா நிகழ்ச்சி அமைகிறது.

உலாக் கொள்ளுதற்குரியோர் கடவுள், அரசன், அறிவுடையோர் முதலியவர்கள் எனப் பன்னிருபாட்டியல் வரையறை செய்கிறது. (235 - 236). தூதும் இம்மூவர் மேல் பாடப்படுவதேயாகும்.

உலாத் தொடக்கத்தில் பெரும்பான்மையும் கவிஞன் தான் வழிபடுகடவுளையோ எடுத்துக் கொண்ட நூலிற்கு ஏற்புடைய கடவுளையோ வணங்குவது உண்டு. தூது நூல்களின் முதலிலும் இம்மரபு உண்மை காணலாம்.

உலாவிலும் தூதிலும் பாட்டுடைத் தலைவனின் இயற்பெயர் சுட்டி அவனுடைய பெருமைகளைப் பலபடப் பேசுவர். ஆனால் காமுற்ற பெண்களின் இயற்பெயர் சுட்டபடுவதில்லை.

'பேசும் உலாவில் பெதும்மைப் புலி' என்பது போலத் தூதிலும் தூதுவிடத் தேர்ந்தெடுத்த பொருள் அல்லனவற்றைத் தூதுசெல்லத் தகுதி அற்றவை என விலக்கும் பகுதி புலவர்களுடைய அருந்திறமையை வெளிப்படுத்தும் பகுதியாம்.

உலாவில் தசாங்கம், அங்கமாலை, சிலேடை, மடக்கு, திரிபு முதலியன இடம் பெறுவ போலவே தூது நூல்களிலும் இவை கலந்து அமைகின்றன.

உலா நெடும்பாட்டாய் இயங்குவது போலவே தூதும் உள்ளது. உலாவைச் சிலர் தொடர்நிலைச் செய்யுளுள் ஒன்றாகவும் கருதுவர். இலக்கண விளக்கப் பாட்டியலுரைகாரர் தூது இலக்கியத்தையும் அகலக்கவியுள் ஒன்றாக வைத்துப் போற்றியுள்ளார்.

> "அகலக் கவியில் பயின்றுவரும் கலிவெண்பாவினாலே பாணன் முதலாகப் பாங்கன் ஈறாக விடுக்கும் உயர்திணைப்பொருளையும், கேளாமரபினவற்றைக் கேட்பனவாகக் கூறி விடுக்கும் அன்னமும் கிளியும் வண்டும் மயிலும் குயிலும் முதலாயின அஃறிணைப் பொருளையும் இளையகாலம் முதியகாலம்இவற்றின் துனி நீங்கற்கு வாயிலாக விடுத்தல் முன்னர் உடன் படுத்தும்தூது எனப் பாட்டிலக்கணத்தை உணர்ந்த புலவர் ஆராய்ந்து கூறினார். இத்துணையும் அகலக் கவி கூறினார்"

மேலே எடுத்துக் கூறியவற்றால் தூது இலக்கியத்தின் தன்மை தெளிவாகும்.

## அஃறிணைப் பொருள்களைத் தூதுவிடல்

அஃறிணைப் பொருள்கள் சொல்லும் திறம் இல்லாதனவா யிற்றே? அவை தூது சென்று ஒருவரிடம் செய்தி சொல்லி மீண்டு வந்து தெரிவிக்கும் அறிவுடையவனவும் அல்லவே? அவ்வாறாகவும் அவற்றை விளித்துத், தூது விடுவதன் காரணம் தலைவன் தலைவியர்க்கு உளதாகும் மன மயக்கமேயாம். அதோடு அவரவருடைய காதல் உள்ளக் கிடக்கையை வெளிப் படுத்துவதற்கு இஃது ஓர் வாயிலாகவும் அமைகிறது. இவ்வா றான பேச்சுகளை அகத்திணைத் துறையுள் 'காமம் மிக்க கழி படர் கிளவி' என்பர்.

> 'சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்
> செய்யா மரபின் தொழிற்படுத் தடக்கியும்'
>
> —தொல்-பொருள்; பொருளியல்: 2

என்னும் நூற்பாவினால் தொல்காப்பியர் இம் மரபினை விதி முறையால் விளக்கியுள்ளார்.

அஃறிணைப் பொருள்களை நோக்கித் தத்தம் எண்ணங்களைக் காதலர் வெளிப்படுத்துரைத்தலை ஓர் இலக்கிய மரபாகவே ஆன்றோர் கொண்டுள்ளனர்.

'ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் நுவலிய நெறியால்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்'

தொல். பொருள். செய்யுள். 201

என்று செய்யுளியலில் தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

'கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே'

—நன்னூல் 409

என நன்னூலில் பவணந்தி முனிவரும் அம் மரபினைப் போற்றியுள்ளார்.

## தூது இலக்கியம் பழமையானது

தூது பொருளாக அமைந்த பாடல்கள் சங்க இலக்கியங்களிலும் உள்ளன. அகநானூற்றுள், "கானலுங் கழறாது" என்னும் செய்யுளில்[1] (170) தலைவி ஒருத்தி நண்டு ஒன்றைத்

---

1. கானலும் கழறாது; கழியும் கூறாது'
தேன்இமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது
ஒருநின் அல்லது பிறிதுயாதும் இலனே;
இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தல்
கமழ்இதழ் நாற்றம் அமிழ்துஎன நசைஇத்,
தண்தாது ஊதிய வண்டினம் களிசிறந்து
பறைஇ தளரும் துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமால் அலவ! பல்கால்
கைதைஅம் படுசினை எவ்வமொடு அசாஅம்

தூதுவிட்ட செய்தி காணப்படுகிறது. ஐங்குறுநூற்றில், 'சூழ்கம் வம்மோ' என்னும் செய்யுளில்[2] (317) நெஞ்சைத் தூது விட்ட செய்தி உள்ளது. தூதேய வண்டின் தொழுதி என்னும் பரிபாடல் தொடர் வண்டைத் தூதுவிடும் மரபினைக் காட்டும். நற்றிணையில் வரும் சிறுவெள்ளாங்குருகே என்னும் பாடல்[3] (70) குருகைத் தூது விடுவதைத் தெரிவிக்கின்றது. அஃறிணைப் பொருள்களைத் தூதுவிடும் மரபு சங்கப்பாடல்களில் உள்ளமையினாலே தொல்காப்பியர் முதலியோரும் இதற்கு இலக்கணம் வகுப்பாராயினர்.

---

கடற்சிறு காக்கை காமர் பெடையொடு
கோட்டுமீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்
வெள்ளிறாக் கனவு நள்ளென் யாமத்து
'நின்னுறு விழுமம் களைந்தோள்
தன்னுறு விழுமம் நீந்துமோ'பு எனவே. —அகநானூறு 170

***நெய்தல் - தலைமகள் காமம் மிக்க கழிபடர் கிளவியாற் சொற்றது- மதுரைக் கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார்.***

2. சூழ்கம் வம்மோ தோழி! பாழ்பட்டுப்
பைதுஅற வெந்த பாலைவெங் காட்டு
அருஞ்சுரம் இறந்தோர் தேஎத்துச்
சென்ற நெஞ்சம் நீடியே பொருளே! —ஐங்குறுநூறு 317

***தலைமகன் பிரிந்து நீட்டித்துழி நெஞ்சினைத் தூதுவிட்ட தலைமகள் அது வராது தாழ்த்துழி, தோழிக்குச் சொல்லியது.***

3. சிறுவெள்ளாங் குருகே! சிறுவெள்ளாங் குருகே!
துறைபோகு அறுவைத் தூமடி அன்ன
நிறம்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே!
எம்ஊர் வந்து, எம்உண் துறைத் துழைஇச்
சினைக்கெளிற்று ஆர்கையை அவர்ஊர்ப் பெயர்தி;
அனைய அன்பினையோ, பெருமறவியையோ
ஆங்கண் தீம்புனல் ஈங்கண் பரக்கும்
கழனி நல்ஊர் மகிழ்நர்க்கு என்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே? —நற்றிணை 70

***காமம் மிக்க கழிபடர்கிளவி - வெள்ளிவீதியார்***

## தூது சொல்லி விடுத்தற்குரிய பொருள்கள்

தூது சொல்லி விடுத்தற்குரிய பொருள்கள் எவையெவை என்பதை இரத்தினச் சுருக்க நூல் செய்யுள் ஒன்று (7)தொகுத் துரைக்கிறது. அது வருமாறு:

'இயம்புகின்ற காலத்து எகினம்மயில் கிள்ளை
பயம்பெறு மேகம்பூவை பாங்கி - நயந்தகுயில்
பேதைநெஞ்சம் தென்றல் பிரமரம் ஈரைந்தும்
தூதுரைத்து வாங்கும் தொடை.

இச்செய்யுளிலிருந்து எகினம் (அன்னம்), மயில், கிள்ளை (கிளி), மேகம், பூவை (நாகணவாய்ப்புள்), பாங்கி, (தோழி), குயில், நெஞ்சம் (மனம்), தென்றல், பிரமரம் (வண்டு) என்னும் பத்துப் பொருள்கள் தூது விடுவதற்கு உரியன என்பது தெரியவரும். இப்பொருள்களைத் தூதனுப்பியதாக ஆன்றோர் களால் ஆக்கப்பெற்ற இலக்கியங்கள் ஒவ்வொரு துறையிலும் பல உண்டு.

காலப்போக்கில் புதியன புகுதலாக இரத்தினச் சுருக்கம் வரையறுத்த பத்துப்பொருள்களின் மேற்பட வெவ்வேறு பொருள்களைத் தூது விடுத்ததாகப் பாடிய நூல்களும் தமிழில் பல உள்ளன. வனசவிடுதூது (தாமரை), நெல்விடு தூது, பணவிடுதூது, விறலிவிடுதூது என்பன புதுமைப் பொருள்களைக் கொண்டவை. இவ்வகைப் பொருள்களின் வகையில் தமிழையும் தூது பொருளாக ஆக்கியுள்ளார் ஒரு புலவர். அன்றியும், 'அன்றில், இருள்வாசி (இருவாட்சி), குவளை சண்பகம், பாரிசாதம், பிச்சி முதலியவற்றின் மலர்களும், புறவு' பொன் முதலியனவும் தூதுக்குரியனவாகத் தத்தம் நூல்களில் கவிஞர்கள் புலப்படுத்தியிருக்கின்றனர். புகையிலை விடுதூது என்னும் ஒரு பிரபந்தம் பிற்காலத்ததாகக் காணப்படுகிறது என்று டாக்டர் உ. வே. சாமிநாதையர் தமிழ்விடுதூது முகவுரை யில் எழுதுவதும் காணத்தகும்.*

---

* டாக்டர் உ. வே. சாமிநாதையர் வெளியிட்ட தூது பிரபந்தங்கள் ஆறு. அவையாவன: 1. கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடு தூது (1888), 2. மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது (1930), 3. ஸ்ரீ பத்மகிரிநாதர்

## வசைத்தூதும் நெஞ்சுவிடு தூதும்

காதல் நிகழ்ச்சியான தூது பிரபந்தங்கள் இன்பமும் மகிழ்ச்சியும் தருபவை. இங்ஙனமன்றித் தம்முடன் பொருந்தாது பகைத்தவர்மேல் வசைமாரி பொழிவதற்கும் புலவர்கள் இத் தூதினைப் பயன்படுத்தியுள்ளனர். செருப்பு விடுதூது, கழுதை விடுதூது என்பன வசைத் தூதுகளாகும்.

காட்சிப் பொருளோடு கருத்துப் பொருளான நெஞ்சும் தூதுக்குரிய பொருளாகிறது. ஞானகுருவின்மீது நெஞ்சைத் தூது விடுவது பக்தனின் அளப்பரும் பாசத்தின் விளைவாகும். சிவஞானபாலைய சுவாமிகள் மீது சிவப்பிரகாசர் பாடிய நெஞ்சுவிடுதூது, கமலை ஞானப்பிரகாசர் மீது மாசிலாமணிதேசிகர் இயற்றிய நெஞ்சுவிடுதூது என்பன இவ்வகை நூலுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. இவற்றால் தூது இலக்கியம் பாடுவதில் புலவர் பெருவிருப்புக் காட்டினர் என்பது தெளிவாம்.

## தூது இலக்கியப் பெயரும் சிறப்பும்

தூது இலக்கியங்கள் தூது விடப்படும் பொருளின் பெயரைச் சார்ந்தே பெயர் பெறும். பாட்டுடைத் தலைவனுக்கு முதன்மை தருவது போலவே தூது இலக்கியங்களில் தூது விடப்படும் பொருள்களுக்கும் சிறப்பிடம் தந்து புலவர்கள் தம் புலமைத்திறம் விளங்கப் போற்றியுரைப்பது மரபாகும்.

எந்தவகையான பொருளைக் கவிஞன் தூதிற்குரிய பொருளாகத் தேர்ந்தெடுத்தாலும் அந்தப் பொருளைத் தாம் தேர்ந்தெடுத்ததற்குரிய சிறப்புகளை எடுத்தியம்பும் பகுதி அவருடைய அறிவாற்றல்களைப் புலப்படுத்தும் பகுதியாகும். தூது செல்லவிருக்கும் பொருளின் சிறப்புகளை எடுத்துப் பேசுவது ஒருபுறமாக, பிற பொருள்களைத் தூதுவிடின் அவை

---

தென்றல்விடு தூது (1932), 4. மான் விடுதூது (1936), 5. அழகர் கிள்ளை விடு தூது (1938), 6. புகையிலை விடுதூது (1939). இவ் வெளியீடுகளில் ஐயர் அவர்கள் தூது இலக்கிய மரபுகள் குறித்து எழுதிய செய்திகள் பலப்பல. அவை இக்கட்டுரை ஆக்கத்திற்கு வழிகாட்டியாய் அமைந்தன என்பதனை நன்றியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்,

திறம்பட எடுத்துச்செல்லும் ஆற்றல் இல்லன என அவற்றிற்குச் சில குறைகளைக் கற்பித்து விலக்கும் பாங்கும் கவிஞரின் திறனைக் காட்டுவதாகும்.

பாட்டுடைத் தலைவனின் வரலாறுகளையும் சிறப்புக்களையும் பலவகையாகப் புகழ்ந்து பேசுவதற்கும் இடம்தந்து விளங்குகிறது இந்த இலக்கியம். தலைவனுடைய பெருமை சொல்லும் பகுதியில் தசாங்கங்களைத் தனிப்பட எடுத்துரைக்கும் பகுதி இப்பெயருடன் இயங்கும் தனிப் பிரபந்தத்தை நினைவூட்டும். சொல்லணி பொருளணிகளையும் இப் பிரபந்தத்தில் இடம் நோக்கிக் கவிஞர்கள் போற்றி அமைத்துக் கூறுவர். சிலேடை நயம் வாய்ந்த பகுதிகளையும் அங்கங்கே அமைத்துத் தத்தம் திறமையைக் காட்டியுள்ளனர்.

காதலனோடு காதலி கூடி அனுபவிக்கும் இன்ப நிகழ்ச்சிகளும் இடமறிந்து நயமுறப் பேசும் பகுதிகளும் இவ்வகை இலக்கியங்களில் காணப்படுகின்றன. கலவிப் பூசலைக் கட்டுரைக்கும் பகுதிகள் காமநூல் போலக் காட்சியளிப்பதையும் காணலாம். வெளிப்பட விண்டுரைக்க இயலாத காதலர் சேர்க்கை இன்பங்களை அவர்தம் பேச்சின்வழி வெளிப்படுத்தும் பாங்கும் இவ்விலக்கியங்களில் காணலாகும். காமுகர் காம நன்னூல் என்று புகழ்ந்து போற்றத்தகும் நூல்களுள் தூது இலக்கியமும் சிறப்பிடம் பெற்று விளங்குகிறது.

தூது இலக்கியங்களை முடிக்கும் போது பெரும்பான்மையும் தலைவனுடைய மார்பில் இலங்கும் மாலையைப் பெற்றுவா என்று வேண்டுவதாகவே முடிப்பது மரபு. சிவபெருமானைக் குறித்த கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடு-தூது, பத்மகிரிநாதர் தென்றல்விடு தூது ஆகியவற்றில் அப்பெருமானுக்குரிய கொன்றைமாலையை வாங்கிக் கொண்டுவா என்று கூறுவதாக உள்ளது. தமிழ் விடுதூது,

'துறவாதே சேர்ந்து சுகாநந்த நல்க
மறவாதே தூது சொல்லிவா'

எனத் தனக்கு இன்பம் நல்குமாறு செய்தி சொல்ல வேண்டுகிறது.

'பூங்கொன்றை வாங்கியிங்குப் பொற்பக் கொணர்ந்
தென்றும்
ஓங்குபெரும் வாழ்க்கை யுதவு'

எனக் கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடு தூதின் தலைவி மாலை பெற்றுவந்து பெருவாழ்வுதர வேண்டுகிறாள். தலைவன் மாலையைப் பெறுவது அத்தலைவன் வந்து தலையளி செய்வதற்கு அறிகுறியாகும். இந்தத் திருவேங்கடநாதன் வண்டுவிடு தூதும் இம்மரபினையே போற்றி,

'கண்டேநான் கொண்டமயல் காதலெல்லாம்
சொல்லிமலர்
வண்டேபூந் தார்வாங்கி வா.'

என்று நிறைவு பெறுவது காணத்தகும்.

## இருவகைத் தூதுகள்

மக்கள்மேல் விடப்படும் தூது ஒன்று, போற்றும் தெய்வங்களின் மேல் விடும் தூது மற்றொன்று. மானிடக் காதலில் வரும் காதல் பேச்சுகள், நிகழ்ச்சிகள் முதலியன தெய்வக்காதலில் பக்தியை நிலைக்களமாகக் கொண்டு அமைகின்றன. தெய்வக் காதலை, 'கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்' என்பர். வரலாற்று நோக்கில் காணும்போது அரசர், வள்ளல்கள் முதலியோரைத் தலைவனாகக் கொண்டு அமையும் இலக்கியங்கள் சிறப்பிடம் பெறும். தலைவன் ஒருவனுடைய வாழ்க்கைச் சிறப்பும், அவன் வாழ்ந்த காலத்தில் ஆற்றிய நற்பணிகள்முதலியனவும் இவ்விலக்கியங்களால் வெளிப்படுகின்றன. தவிரவும் மானிடக்காதல் இயல்பான ஒன்றாயும் அமைவதனால் மக்கள்-தலைவர்களைக் குறித்த பிரபந்த நூல்கள் முற்பட வைத்து எண்ணத்தக்க ஒன்றாகும். இவ்வகையில் அமைந்த ஒரு பிரபந்தமே திருவேங்கடநாதன் மேல் பாடப் பெற்ற இந்த வண்டுவிடுதூது.

## திருவேங்கடநாதன் வண்டு விடு தூது

திருவேங்கடநாதன் என்னும் பெருந்தலைவனின் பவனியில் அவனைக் கண்டு காதல் கொண்ட பெண்ணொருத்தி வண்டு ஒன்றை அவனிடம் தூது விடுத்ததாக அமைந்தது.

இந்நூல். திருவேங்கடநாதன்மேல் விடுத்த வண்டுவிடுதூது என்பதாம்.

## திருவேங்கடநாதன்

தென்பாண்டி நாட்டின் ஒரு பகுதியான திருவழுதி வள நாட்டை ஆண்ட குறுநிலத் தலைவர் திருவேங்கட நாதன். இவருடைய தலைநகரம் திருக்குருகூர். திருக்குருகூர் சடகோப ராகிய நம்மாழ்வார் திருப்புளிக்கீழ் அமர்ந்து விளங்கும்திருப்பதி யாதலின், 'ஆழ்வார் திருநகரி' என்னுப் பெயர் பெற்று விளங்கு கிறது. இத்தலைவரின் பெருமை பேசும் தசாங்கப் பகுதியில் (59-66) இவருக்குப் பொதியமலையும், பொருநை நதியும் உரிமையாகச் சொல்லப்பட்டிருப்பதால் திருநெல்வேலிச் சீமை யில் ஒரு காலத்தில் சிறந்து விளங்கிய ஒரு சிற்றரசராய் இவர் விளங்கினார் என்பது தெரியவரும். இவருக்கு உரித்தான திருவழுதி வளநாடும் (66-70) திருக்குருகையூரும் (70-88) தூது நூலுள் சிறப்பிக்கப் பட்டுள்ளன. இத்தலைவருக்குக் குவளை மாலை கூறப்பட்டுள்ளமையால் இவர் வேளாளப் பிரபு என்பது வெளிப்படை.

தூதின் முதற்பகுதி 203 ஆம் கண்ணிவரை இத்தலைவனது கொடைச்சிறப்பு, வெற்றிச் சிறப்பு, குடிவழி, தசாங்கங்கள் முதலியவற்றை விளக்க, இவர் பவனி வரும் காட்சியை வருணிக்கும் பகுதியாகும்.

யதிராசராகிய இராமாநுஜர் வழங்கிய விசிட்டாத்துவிதம் எனப்படும் ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தில் திருவேங்கடநாதன் பேரீடுபாடு கொண்டிருந்தான் என்பதனை,

> 'யதிபதிசித் தாந்தம் முத்திக்கேது வென்றநூலே
> யதிக மென்று நம்பு நமதுஐயன்.'(41)

என்னும் கண்ணி புலப்படுத்துதல் காணலாம்.

இப்பிரபு திருமால் வழிபாட்டினர் என்பதையும் கவிஞர் அங்கங்கே புலப்படுத்தியுள்ளார். திருஞானதேசிகனாகிய நம்மாழ்வாரின் பாதம் பணியும் பக்தர் இவர். வானாசலமுனி இவருடைய ஆசிரியர் ஆவர். வானாசலம் என்பது வானமா

மலை; இப்பொழுது நாங்குனேரி என வழங்கும் தலமாகும். தோத்தாத்திரி என்றும் இதற்கு ஒரு பெயருண்டு. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இவ்வூரில் திருமாலடியாராகிய ஜீயர் வீற்றிருக்கும் திருமடம் உள்ளது. இம்மடத்தில் விளங்கிய ஆசாரியனிடத்து இவர் பெரும் பக்தி கொண்டிருந்தார்.

—அண்டர் தொழும்

வானாசலமுனியை வந்தித் திருபொழுதுந்
தேனார் மலரடியைச் சிந்திப்போன் - ஆனாத

கல்விக் கடலையருட் காரி தருங்கனியைச்
செல்வக் கொழுந்தை திரளமுதைச் - சொல்வித்தை

மோனத் திருவுருவை முத்திக்கு வித்தைமலர்த்
தேனைத் திருஞான தேசிகனை - வானவரும்

வேதாவும் காண விரும்பும் பரிபுரப்பொற்
பாதார விந்தம் பணிந்திடுவோன். (36 - 40)

தினமும் நீராடியபின் துருமாலைச் சிந்தையில் வைத்துப் பூசித்துத் திருஞான முத்திரைக்கைத் தேசிகனான சடகோபரைக் கும்பிட்டுத் தம் அரச காரியங்களைக் கவனித்து வந்தார் என்பதனையும் கவிஞர்,

சேவித்தா ரங்கே திருமஞ் சனம்பணிந்து
மேவித் திருத்துகிலான் மெய்புலர்த்தி - பூவிரிந்த
பீதாம் பரந்தரித்துப் பீடிகையில் வீற்றிருந்து
வேதாந்த மெய்ப்பொருளை விண்ணவருக் - காதார
மான பரம்பொருளை யச்சுதனைச் சிந்தைசெய்து
மோனத் திருஞான முத்திரைக்கைத் தானவனைக்
கும்பிட்டு நாமக் கொலுமுடித்த பின்னர்—(125-128)

என விவரித்துள்ளார்.

திருவேங்கடநாதன் கல்விநிறைந்த விற்பன்னராகவும் விளங்கினார். "அட்டாவதானி திருவேங்கடநாதன்" எனத் தனிப்பாடல் இவரைக் குறிப்பிடுகிறது. மேலும், படித்தவன், கல்வி கவியானவையும்" என்றும், "யாவுங்கற்ற திருவேங்கடநாதா' என்றும் தனிப்பாடல்களில் இவர் போற்றப்பட்டுள்ளார்.

'கல்விப்புலவர் புகழ் நன்னாகரித்துரை' என்பதனால் இவர் புலவர் பெருமக்கள் போற்ற வாழ்ந்த பெரும் புகழினர் என்பதும் தெரியவரும். இத்தூது பிரபந்தம் தவிரப் பிள்ளைத் தமிழும் சதகமும் இவர் கொண்டுள்ளார்.

## திருவேங்கடநாதனின் குடிவழி

திருவேங்கடநாதனின் குடிவழிச் செய்திகளைத் தூதின் 41 ஆம் கண்ணிமுதல் 59 ஆம் கண்ணிவரையுள்ள பகுதி தெரிவிக்கிறது. இத் தூதுநூலின்வழித் தெரியவரும் வமிசாவளி யாவது. இவர் துரை சுப்பிரமணிய மன்னனின் புதல்வர் (42-44). மீனாட்சிநாதன் என்பது இவருடைய தமையனார் பெயர் (46-46). இவருக்குச் சுவாமிநாதன் என்னும் தம்பி ஒருவரும் இருந்தார் (47). சங்கர நாராயணன் என்பது இவருடைய பெரிய தந்தையின் பெயர் (52). இப்பெரிய தந்தையின் வழி உரிமைச் சகோதரராகத் துரைமாலைப்பிள்ளை, தெய்வநாயக மகீபன், பெரிய திருவடிவிபேகன் என மூவர் குறிப்பிடப் பட்டுள்ளனர் (53-54). சங்கரநாராயணன், தையல்பாகன், சுப்பிரமணியன், சீனிவாசன் என்னும் நால்வரும் இவருக்கு மாமன்மார் ஆவர் (55-57). சங்கரமூர்த்தி என்பாரும் வைகுந்த நாதனும் இவருக்கு மைத்துனர்களாவர் (58). இவ்வாறாகத் திருவேங்கடநாதனின் உறவின் முறையாரையும் நாம் இத் தூது நூலின் வழி அறியலாகும்.

## காலம்

இத் தூது பிரபந்தமேயன்றித் திருவேங்கடநாதன் பிள்ளைத் தமிழ் என ஒரு நூலும் உள்ளது. இவர் பேரில் அமைந்த தனிப்பாடல்கள் 38 உள்ளமை தெரிய வருகிறது.* இவற்றுள் 35 பாடல்கள் நமக்குக் கிட்டியுள்ளன. இப்பாடல் களும் இவருடைய வெற்றிச் சிறப்பு, கொடைச் சிறப்பு, ஆட்சி மேன்மை, இவர் ஆற்றிய பல அறச்செயல்கள் முதலியவற்றைத் தெரிவிக்கின்றன. அவற்றுள் ஒன்று திருவேங்கடநாதன் திருக் குருகூர் ஆலயத்தில் கருடவாகனம் செய்தளித்ததமையைக் கூறுகிறது.

---

*இத்தனிப் பாடல்களைப் பின்னிணைப்பு 2-ல் காண்க.

'மன்னுதொளா யிரத்தறுபத் தய்யா மாண்டு
மாசிமதி மேவுபதி னோராந் தெய்தி
பன்னுசுக்கிர வாரமசு பதிநன் னாளிற்
(பங்கயக்) கண் மாயர்திரு வுளத்துக் கேற்கச்
சொன்னவடி வாற்கருடே சனைமிக் காகத்
தொல்லுல கினிற்பிரதிட்டை தோன்றச் செய்தான்
நன்னயவான் புகழ்வளஞ்சேர் குருகை மாறன்
நகர்த்திருவேங் கடநாத ராசன் மானே.'

கருடவாகனம் செய்தமைத்த ஆண்டு கொல்லமாண்டு 965 ஆகும் என்பதனை இப்பாடல் தெரிவிக்கிறது. கொல்லம் ஆண்டு 965 என்பது கி.பி. 1790 ஆம் ஆண்டாகும். இதனால் இவன் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசு புரிந்தவன் என்பது விளங்கும்.

## நூலாசிரியர்

இத்தூது நூலை ஆக்கிய ஆசிரியர் பெயர் பிரதிகளின் வழியாலும் பிறவற்றாலும் அறியக்கூடவில்லை. இப்புலவர் திருவேங்கடநாதனால் ஆதரிக்கப் பெற்றவராதல் வேண்டும். தம்மை ஆதரித்த வள்ளலுக்கு நன்றி செலுத்தும் வகையில் இப்பிரபந்தத்தை ஆக்கி அத்தலைவனின் புகழை உலகில் நிலவச் செய்தார். இப்புலவர் பாடிய பிரபந்தத்தின் வழியே தான் இத்தலைவனின் சிறப்புக்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்புப்பெற்றுள்ளோம். இத் தலைவனைக் குறித்த வரலாற்றை மெய்ப்பிக்கும் வகையில் வேறு தடயங்கள் உள்ளனவா என்பது குறித்து இப்பொழுது ஒன்றும் சொல்லக் கூடவில்லை. திருக்குருகூருக்குச் சென்று துருவிஆராய்ந்தால் ஒருசில சான்றுகள் கிட்டினாலும் கிட்டலாம் என்று தோன்றுகிறது.

தூது நூலாசிரியரின் வாக்கு வளமாயுள்ளது. தலைவனின் தகைமை, பவனிச் சிறப்பு, தலைவியின் காதல், அவள் கனவில் கண்ட இன்பக்காட்சி, கனவு கலைந்தநிலையில் அவள் விரக தாபத்தால் வருந்திப் பூஞ்சோலையில் தன்முன் எதிர்ப்பட்ட வண்டு ஒன்றைத் தூதாகச் செல்லுமாறு வேண்டும் பகுதி முதலிய எல்லாவற்றையும் நயமுற அமைத்துள்ளார்.

திருக்குறள் ஒன்றையும் (குறள்: 1216, கண்ணி: 246), நாலடியார் பாடலொன்றின் பின்னிரண்டடிகளையும் (நாலடி: 90, கண்ணி: 225) அப்படியே எடுத்தாண்டுள்ளார். இராமாயண-பாரத நிகழ்ச்சிகளையும் சீவக சிந்தாமணிச் செய்தியையும் வண்டின் பெருமை பேசுமிடத்துக் குறிப்பிட்டுள்ளார். (280-291). மதியூகி எனப் பெருங்கதையில் வரும் உதயணனின் உயிர் நண்பனைக் குறித்து இவர் கூறுதலால் பெருங்கதையையும் இவர் நன்கு படித்தவர் என்பது தெளிவு. ஆகவே இவர் பழந்தமிழ் நூல்கள் முதலியவற்றில் பெரும் பயிற்சியுடையார் என்பது விளங்கும். இவர் பாடிய பாட்டுடைத் தலைவன் திருவேங்கடநாதன் 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசு புரிந்தவனாதலின் இப்புலவரும் இக்காலத்தில் வாழ்ந்தவராகக் கொள்ளலாம்.

## பதிப்புக்கு உதவிய சுவடி

இத்தூதுக்குரிய மூலச்சுவடி தாக்ஷிணாத்திய கலாநிதி மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் தேடித் தொகுத்த கருவூலங்களுள் ஒன்றாகும். தூது நூலுக்கு மூலமாக ஐயரவர்களின் நூலகத்துள்ள சுவடி காகிதப் பிரதியே. இப்பிரதி மூலச்சுவடியைப் பார்த்து எழுதிச் சேமித்து வைக்கப் பெற்றது. மூலச்சுவடி மிகவும் ஓரம்ஒடிந்து நொறுங்கிப்போகும் நிலையில் இருப்பதால் இதனைப் பார்த்து வேறொரு பிரதியும் நூல் நிலையத்தார் அண்மையில் எழுதி வைத்துள்ளனர்.

## சுவடியை முறைப்பட அமைத்து எழுதுகை

ஒரே சுவடியைக் கொண்டு ஒரு நூலை வெளியிடுவது என்பது மிகவும் இடர்ப்பாடு தருவது. மிகவும் முயன்று மூலபாடத்தை நிச்சயிக்கவேண்டிய நிலையும் சிற்சில இடங்களில் நேர்ந்துள்ளது. இம்மூலப்பிரதி கலிவெண்பாவின் அமைப்பில் சீர் முறையில் தெளிவுற எழுதப்படாதது. ஆதலால், அதனை நோக்கிப் பதிப்புக்கு ஏற்ற வகையில் நான் ஒரு பிரதியை அமைத்துத் தட்டச்சு செய்து வைத்தேன். நூல் முழுவதும் முடித்த பின்னர் "திருவேங்கடநாதன் வண்டுவிடு தூதின்" மூலச்சுவடி ஒன்று அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் இருப்பது அறியப்பட்டது. அம்மூலச் சுவடியோடு

(ஆர். எண். 1754) இம்மூலபாடம் ஒப்பிட்டு நோக்கப்பட்டது. இரண்டுநூலகச் சுவடிகளும் வேறுபாடுஇன்றி இருந்தன. அரிதாகக் காணப்பட்ட ஒருசில வேறுபாடுகளும் திருத்தம் செய்யப்பட்டு நூல் நிறைவு செய்யப்பட்டுள்ளது,

இந்நூலைத் தக்க முதுபெரும் புலவர்களோடு இணைந்து ஆராய்ந்த பொழுது விளங்காப் பகுதிகள் பல விளக்கம் பெற்றன. அதன் பிறகே இதற்கு ஒரு குறிப்புரையும் அமைப்பது அவசியம் என்பதனை உணர்ந்தேன். நூலின் பொருள் விளங்கக் குறிப்புரையை எழுதி அடிக் குறிப்பாக அமைத்துத் தந்துள்ளேன். மேலே மூல பாடத்தை வாசிக்கும் பொழுதே உரிய விளக்கங்களைப் பெறுவதற்கு இக்குறிப்புரைப்பகுதியும் உதவும் என நம்புகிறேன்.

தூது நூலின் பொருளமைதியினைத் தேர்ந்து தெளியும் பொருட்டுப் 'பொருளடைவு' என்னும் ஒரு பகுதியும் சேர்த் துள்ளேன். நூலுள் காணும் சிறப்புப் பெயர் முதலியவற் றிற்கு ஓர் அகராதியும் அமைத்துள்ளேன்.

**மு. சண்முகம்பிள்ளை**
பதிப்பாசிரியர்.

# பொருளடைவு

## பாட்டுடைத் தலைவன் கீர்த்தி

பொதுவாக உலக முழுவதும் புகழ் பரவ வாழ்ந்த பெருந்தலைவன் என்பதையும், நாகரிகன், துங்கன், பதபாகன் என்று இவ்வாறு அவனுடைய குணச் செயல்களை வெளிப் படுத்தும் மொழிகளையும் எடுத்துரைக்கிறார்.

திருவேங்கடநாதனின் பண்புகளையும் செயல்களையும் இதிகாச காவியத் தலைவர்களுடன் ஒப்பிட்டுப் பேசுவதும் காணலாம்; விசயன்-2, இராமன்-3, கண்ணன்-4, கன்னன்-5, அரிச்சந்திரன்-6, மரியாதை ராமன் (6), யூகி-8, காமன்-8, கரிகாலன்-10, போசன்-11, விக்கிரமாதித்தன்-11, ஆதிசேடன்-14, சனகன்-15, விதுரன்-15, புருடோத்தமன்-18.

வேளாளப் பிரபு என்பதும் குறிப்பிடப் படுகிறது; கங்கா குலத்தான்-6.

தன்னை அடைந்தாரையும் அடையாரையும் அவன் நடத்திய முறை - 7, 9, 12.

**கொடைச் சிறப்பு :** செந்தமிழ்ப் பாவாணர் கலி ஆற்ற சூல்கொண்ட மேகம் எனத் தோன்றினான்-7.

புலிக்கைந்தாருவென வந்துதித்த தாட்டீகன்-10.

வேற்றரசர் பணிந்து திறையளக்கும் வண்ணம் வெற்றி படைத்தவன்-12, 13, 18, 25.

அறிவும் ஒழுக்கமும் - 14, 16, 17.

அழகிய திருவுருப் படைத்தவன்-8, 16.

**அங்கமாலை :** திருமுகம்-19, கண்-20, நெடுந்தோள்-21 கை-22, மார்பு-23, பாதம்-24.

*யாழ்ப்பாணர் இசை-25*

*கணக்கர் சேவை-26*

*மாகதர் ஏத்துரை-27-32*

*மறையோர் ஆசி-33*

**மாகதர் புகழுரையில் வரும் சிறப்பு விளிகள் :**

*ஆக்கினாசுக்கிரீபா - 27*

*மண்டலாதிபா - 27*

*சௌபாக்கியா - 27*

*திருக்குருகைப் பாண்டியா - 27*

*யோக்கியபரா - 27*

*கன்னா - 28*

*சமரரண கண்டீரவா - 28*

*கனசம்பன்னா - 28*

*புவனபரிபாலா - 28*

*மன்னவா - 28*

*கீர்த்திப் பிரதாபா - 29*

*கிரீடவர்த்தனா - 29*

*புயத்திலேர்த்த அவனிக்கொரு தெய்வேந்திரா - 29*

*பார்த்திபா - 29*

*கோதண்டதீட்சா குருராகவா - 30*

*கனக வேதண்ட திண்புய விதட்சணா - 30*

*வாங்குசிலைக் காமா - 31*

*வசன நெறுபாகா - 31*

*சக்கரவர்த்தி நிகர் உத்தண்டா - 31*

அசையாதயோக - 32

தெட்சணாதிக்க வேந்தா- 32

விசையா - 32

அதிகரிபலவீமா - 32

**கனராச கொலு : 33 - 36**

மாகதர் ஏத்தினர் - 27-33

மறைவல்லோர் ஆசி சொற்றனர் - 33

ஏகதமரானோர் உடன் இருந்தனர் - 33

பெண்கள் இருபுறமும் வெண்சாமரை வீசி நின்றனர்-34

ஆலவட்டம் எடுத்தனர் - 34

ஏவற்றொழிலோர் இசைத்தபணி கேட்டு நின்றனர்-35

காவற்றொழிலோர் வாயில் காத்தனர் - 35

எட்டுத் திக்கும் அடக்கி வெற்றி கொண்ட பெருமிதம் தோன்றக் கொலுவிருந்தான் - 36

**திருமால் பக்தி :**

வானாசல முனியைச் சிந்தித்தல் - 36 - 37

திருஞான தேசிகனாம் சடகோபரின் பாதம் பணிபவன் - 37-40

எதிபதி சித்தாந்தமே முத்திக்கு ஏது என நம்பியவன்-40-41

திருமாலின் அவதாரமாகவே இவனும் கருதப்படுகிறான் - மதயானை சொன்ன மகராசன் - 42

**திருவேங்கட நாதனின் கொடிவழி :**

துரை சுப்பிரமணியனின் மைந்தன் : 42 - 44

துரை மீனாட்சிநாதனின் தம்பி : 45 - 46

சுவாமிநாதேந்திரனின் தமையன் - 47

திருவேங்கடநாதன் : இராமனாயும் கண்ணனாயும் வந்தவன் இவன் : 48 - 50

திருமால் திருவடி பரவுவோன் - 51

சங்கரநாராயணமால் - பெரியதந்தை 52

துரைமாலைப் பிள்ளை, தெய்வநாயக மகீபன், பெரிய திருவடி விபேகன் : மூவரும் உரிமைச் சகோதரர்கள்: 53-54

சங்கரநாராயணன், தையல்பாகமால், சுப்பிரமணிய வேந்தன், சீனிவாசமால்: இந்நால்வருக்கும் மருகன்: 55-57

சங்கரமூர்த்தி, வைகுந்தநாதன் இருவரும் சிவனுடைய மைத்துனர் 58-59

**தசாங்கம் : 59-114**

1. மலை: பொதியப் பொருப்பன் 59-63
   அமரர் சேனாபதியைப் போலும்
   பொதியப் பொருப்பு-சிலேடை
2. ஆறு: பொருனை நதியினான் 63-66
   வேதனைப் போன்றது பொருனை-சிலேடை
2. நாடு: திருவழுதி நாட்டினான் 66-70
   மாலென நாட்டும் திருவழுதிநாடு - சிலேடை
4. ஊர்: திருக்குருகை யூரினான் 70-78
   திருக்குருகை இந்திரனைப்போல
   எழிலோங்கியது 70-73 - சிலேடை
   கல்வியும் செல்வமும் விழாவும்
   ஓங்கிய சிறப்பு 74-78
5. யானை: கும்பவிகடதடக் குஞ்சரத்தான் 78-90
6. குதிரை: பாயு முக்கிரவீரப் பரியினான் 90-108
7. மாலை: வண்டாலறியும் மலர்மாலையான் 108-109
8. கொடி: தினப்பூசை கொண்டருளவைக்கும் கொடியினான் 109-111

9. முரசு: முன்றில் நின்றார்க்கு முரசினான் 111-113

10. ஆணை: குருகை நம்பி மலரடிக்கு
அன்புபெறும் ஆணையான் 113-114

திருவேங்கடநாதன் பட்டத்து யானையைக் கொண்டுவரப் பணித்தல் 114-116

பாகர் யானையை அலங்கரித்துக் கொண்டு வருகை 116-125

திருவேங்கடநாதன் புனலாடி வழிபாடு செய்கை 125-128

கொலுவிருந்து அரசகாரியம் பார்க்கை 128

கொலு முடித்த பின்னர் பல்வேறு வகையான அணி பூண்டு யானைமேல் உலாவருகை 128-136

தீவட்டி பிடித்துவர, பாவாடை வீசிவர, கவரிவீச வந்த வகை 136-139

அரசர் வந்து வணங்கு காட்சி 140

அடப்பம் பிடித்து வருவார், காளாஞ்சி ஏந்துவார் அடுத்து வந்தனர் 141

குதிரை, யானை, பல்லக்குகளில் ஏறித் துரை மக்கள் சூழ்ந்து வருதல் 142-143

| | |
|---|---|
| பல்லாண்டிசைத்தல் | 143 |
| பல்வகை இயங்கள் ஒலித்தல் | 143-147 |
| கட்டியங்கூறுகை : புகழ்பாடிச் சுபமங்களம் எனல் | 147-153 |
| மகளிர் நடனம் ஒருபுறம் | 153-159 |
| ஆயுதபாணியராம் வீரர் முன்னடத்தல் | 159-162 |
| மகளிர் தெருவில் கோலமிட்டும், வீடுகளிலும், வீதிகளிலும் தோரணங்கட்டியும் குலைவாழை நாட்டியும் பூரண கும்பம் வைத்து வரவேற்றல் | 162-165 |
| முதன்முதல் தெற்கு வீதியில் திருவேங்கடநாதன் உலா வருதல் | 165-166 |

சின்னம் ஊதுதல் 166-168

மகளிர் பின்தொடர வள்ளல் திருவீதி வலம் வருகை 168-169

காட்சி:

மகளிர் திருவேங்கடநாதனின் தோற்றப் பொலிவு கண்டு காமுற்று மதிகுலைந்து நிற்றல் 169-172

ஐயம்:

மகளிர் ஐயமுற்றுப் பேசிய உரைகள் 172-177

| | | | |
|---|---|---|---|
| வேளோ! | - | அல்லன் | 172-173 |
| புரந்தரனோ! | - | அல்லன் | 173-174 |
| திருமாலோ! | - | அல்லன் | 174-175 |
| கந்தனோ! | - | அல்லன் | 175-176 |
| தனபதியோ! | - | நேரல்லன் | 176-177 |

தெளிதல் : சுப்பிரமணிய ராசனின் புதல்வனே இவன் 177-178

'யானை பைய நடவாதோ?' - என்று தலைவனின் தன்மை கூறிப் பின் தொடர்தல் 178-183

மகளிர் பல்வகையான அலங்காரத்துடன் ஐயன் முன்னே வருதல் 183-190

திருவேங்கடநாதனின் முகம், மார்பு, தோள், கண், கழுத்து முதலிய மேனி அழகு கண்டு திகைத்துக் கலங்கி மகளிர் காமவெறி கொள்ளுதல் 190-194

காமவெறி கொண்ட மகளிர் செயல் 194-195

மகளொருத்தியின் முறையீடு 195-201

திருவேங்கட நாதன் கண்ணால் அருளுடன் பார்த்து, அரண்மனையுள் போயிருத்தல் 201-203

அவள் இரவெல்லாம் காமன் மலர்க்கணையால் பட்ட துயர் கூறல் 203-220

[மடக்கணி 208-219]

தலைவி சோலையில் புகுந்து மலர்ப்பந்தரிட்டு, மலர்ப் படுக்கையில் கிடத்தல் 220-223

காம விரகாக்கினியால் வெதும்புதல் 223-226

அவள் கண்பொருந்தக் காதலன் வந்து ஆசையூட்டிய வகை 226-227

கனவில் காதலனுடன் கூடிச் சுகித்துப் பூரித்தமை (உச்சித நயக்கலவி) கூறல் 227-244

கண்விழித்து எல்லாம் கனவெனக் கலங்குதல் 244-248

வண்டு ஒன்றைத் தலைவி காணுதல் 248

வண்டின் பெருமை பேசிப்புகழ்தல் 248

1. மதன் போரில் பிறபொருள்களினும் வண்டே அவனுக்கு வெற்றி தேடித் தருகிறது எனல் 250-258
2. வண்டின் பேர் மகிமை சொல்லத்தொலையாது எனல் 258-280
3. மற்றும் வண்டின் செயலால் வந்த வளம் 280-292
4. பாரத - இராமாயண நிகழ்ச்சிகளில் வண்டுதந்த வெற்றி 281-292
5. சீவகனுக்கு வண்டு செய்த உதவி 290-291
6. குமரவேளுக்குத் தந்த மந்திரம் 291-292
7. வண்டு மலரணையில் கண்படுக்கும் காட்சி 292-295
8. வண்டு அணையாப் பூவெடுத்தால் கைவேம் என்றும் வண்டு மோந்த மலர் ஈசர்க்கு உவப்பாம் என்றும் கூறல் 295-298
9. அரி, அளி என்னும் பெயர்களால் அதன் நிலை எடுத்து உரைத்தல் 298-300
10. வண்டே வரையாது எனத் தேறிப் பேசுகை 300-303

மேகம் முதலியவை தூதாகச் செல்வதற்கு இயலாதவை என விலக்கியுரைத்தல் 303-310

| | |
|---|---|
| மேகம் | 303 |
| தென்றல் | 304 |
| கிளி | 305 |
| அன்னப்புள் | 306 |
| புறா | 307 |
| சகி | 308 |
| குயில் | 309 |
| மயில் | 310 |

வண்டு ஒன்றே தூது சென்று மயலாற்றத் தக்கது எனல் 311-324

வண்டின் பெயர்கள் 314-324

[திரிபும் மடக்கும் 312-324]

வண்டை வேண்டுகை :

திருவேங்கடநாதன் இங்கிதமாம் வேளை அறிந்து ஆணை அறிந்து, காதல் எல்லாம் சொல்லி, வண்டே பூந்தார் வாங்கி வா. 325-327

# திருவேங்கடநாதன் வண்டுவிடு தூது

## காப்பு

வின்மத னானதிரு வேங்கடந ரேந்திரன்மேற்
சொன்னதமிழ் வண்டுவிடு தூதுக்கே-முன்னங்
கருடேசன் பாதங் கதித்தகதி மீறுங்
கருடேசன் றாள்மலரே காப்பு.

## நூல்

நீர்கொண்ட வேலை நிலைகொண்ட பார்முழுதும்
பேர்கொண்ட கீர்த்திப் பிறபடிகன்-சீர்கொண்ட 1

செங்கோ லரசன் செயவிசயன் பார்வேந்தர்
நங்கோ னெனத்துதிக்கும் நாகரிகன்-கொங்கேர் 2

குவளைத் தொடையான் குரைகடலோ ரேழுஞ்
சுவறத்தனுவ ளைத்த துங்கன்-நவநீத 3

முண்டபிரான் வாய்மைக் கொருவ னனபாயன்
மண்டலிக னீதி வரராமன்-கொண்டகொடைக் 4

---

காப்பு : வின்மதன் - கரும்பு வில்லையுடையவனான மன்மதன்; திருவேங்கட நரேந்திரன் - இந் நூலின் தலைவன் பெயர்; நரேந்திரன்-மக்களின் தலைவன், அரசன்; கருடேசன் - (கருள் தேசன்) கரிய ஒளி படைத்த திருமால்; கதித்த கதி - எழும்பிச் செல்லுகின்ற வேகம்; மீறும்-அதிகரிக்கும்; கருடேசன்-(கருட ஈசன்) பறவைக்கு அரசனான கருடன், பெரிய திருவடி,

1, வேலை-கடல்; பார்-பூமி; பேர் கொண்ட-புகழ் படைத்த, பெருமை பொருந்திய; பிற படிகன் - பிரசித்தி பெற்றவன்.

2. செங்கோல் - நல்லாட்சி; செயவிசயன் - வெற்றிக்கு விசயனாகிய அருச்சுனனை ஒத்தவன்; வேந்தர் - அரசர்; கோன் - தலைவன்; நாகரிகன் - திறம் பெற்ற சதுரன்; கொங்கேர் - (கொங்கு ஏர்) மணமும் அழகும் கொண்ட.

3. குவளைத் தொடையான்-குவளை மாலையன்; இதனால் இவர் வேளாளர் என்பது போதரும்; குறை - ஒலிக்கின்ற; சுவற - வற்ற; தனு – வில்; துங்கன் - உயர்ந்தவன்; கடல் வற்ற வில் வளைத்து எய்தவன் இராமன்; நவநீதம்-வெண்ணெய்.

4. நவநீதம் உண்ட பிரான்-கண்ணன்; வாய்மை-உண்மை; அனபாயன்-அபாயமில்லாதவன்; மண்டலிகன்-நாட்டுக்குரியோன், அரசன்; வரம்-மேன்மை,

கன்னாவ தாரன் கனகாவியப் பிரசங்கன்
சொன்னா வலர்வழுத்து தோர்த்தண்டன்-நன்னயவேள் 5

வாக்கிலரிச் சந்திரன் மரியாதை ராமனிரை
காக்கவரு முத்தமகங் காகுலத்தான்-பாக்கியவான் 6

மார்க்கண்டன் செந்தமிழ்ப்பா வாணர்கலி யாற்றவொரு
சூற்கொண்ட மேகமெனத் தோன்றினான்-வேற்குவளைக் 7

கண்ணார் மடலெழுது காமன் மதியூகி
பண்ணாரு மின்சொற் பதபாகன்-எண்ணாத 8

வம்பர்க் கிடியேறு மாற்றலர்க்கோர் சிங்கேறு
தம்பமென நம்பினரைத் தாபரிப்போன்-செம்பொன்மக 9

மேருவிலே செண்டடித்த வேந்தர்பெரு மான்புவிக்கைத்
தாருவென வந்துதித்த தாட்டீகன்-சேருமெழில் 10

---

5 கன்னாவதாரன்-கன்னனின் அவதாரமானவன்; கனம்-பெருமை; பிரசங்கன் - சொல்வன்மை படைத்தவன்; நாவலர்-புலவர்; வழுத்துதல்-புகழ்தல்; தோர்த்தண்டன் - புசபலமுடையவன்; நன்னயம் - இன்சொல்லும் செயலும் உடைமை; வேள் - சிறந்த ஆண் மகன்,

6. வாக்கு - சொல்; உண்மை பேசுதலால் இவன் அரிச்சந்திரனுக்கு ஒப்பாயுள்ளவன்; மரியாதைராமன் – மரியாதைக்குரியவன்; அறிவுத்திறனால் புகழ் பெற்றவன் மரியாதைராமன்; இவர் கிருஷ்ணதேவராயர் காலத்து வாழ்ந்தவர். இவனும் அவரைப்போல பிறர்மதிக்க வாழ்ந்தவன் என்றபடி; நிரை – ஆனிரை; பசுக்கூட்டம்: கங்காகுலம் - வேளாளரின் குலம்; இது கங்கை வழிப்பிறந்தது என்பதாம். அதாவது கங்கைவெளியிலிருந்து வந்தவர் என்பது கருத்து. பாக்கியவான் - செல்வம் படைத்தவன்.

7. மார்க்கண்டன்–என்றும் பதினாறு வயதாக இருக்க வரம் பெற்ற மார்க்கண்டனைப் போன்று இளமை வளமுடையவன்; கலி - துன்பம்; சூற்கொண்ட மேகம் - நீரைக் கருவாகப் பெற்ற கார்மேகம்,

8. மடலெழுது காமன் - பெண்கள் இவனை அடைதற்கு மடலேறத் துணியும் படியான பேரழகு படைத்தவன்; மதியூகி - நுட்பமான அறிவுடையான்; அறிவில் உதயணன் மந்திரி யூகியை ஒத்தவன்; பதபாகன் - பக்குவமாக நடந்து கொள்பவன்.

9. வம்பர் - வீண்பழி தூற்றித் திரிவோர்; மாற்றலர் - பகைவர்; சிங்கேறு - ஆண்சிங்கம்; தம்பம் - தூண்; தாபரிப்போன் - நிலைநாட்டுவோன்.

10. மேருவிலே செண்டடித்த வேந்தர் பெருமான் - மேருமலையைத் தன் கைச் செண்டாயுதத்தால் அடித்துத் திருப்பியவன் கரிகாலன்.

கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டங்காவல்
மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன் - கைக்கொண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு. -பெருந்தொகை 777.

TAMIL NADU ... MADRAS- 10978

ஆத்தான போச னபய னகளங்கன்
மாத்தானை சூழும்விக்கிர மாதித்தன்-பூத்தவிசில் 11

வீற்றிருக்கு மட்டலட்சு மீகரப்ர சன்னனரு
ளூற்றிருக்கு மன்புநிறை யுள்ளத்தான்-வேற்றரசர் 12

கப்பங் குவிக்குங் கனசமுக னாற்றிசைக்கு
மொப்பஞ் செலுத்துதிற லுத்தண்டன்-செப்புங் 13

குரகதரே பந்தன்மத குஞ்சர வலாரி
யுரகனைத்தன் பேரறிவுக் கொப்போன்-அருளு 14

மனக னதுல னசல னதிக
சனக விதுர சதுரன்-மனதி 15

னெறியு நியம நிலையு முரிமை
யறிவு முடைய வழகன்-மறுவின் 16

---

இவனும் கரிகாலனைப் போன்ற பெருவன்மை படைத்த புகழாளன் என்றபடி; புவி - பூமி, உலகம்; ஐந்தாரு-தேவலோகத்துள்ளதும் தன்பால் வந்து எண்ணியோர் எண்ணத்தை நிறைவேற்றுவதுமான அரிசந்தானம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்னும் ஐந்து தெய்வ மரங்கள்; தாட்டீகன் - பலவான்.

11. ஆத்தானம் - அத்தாணியாம் கொலுவிருக்கை, அரச சபை; போசன் - போச மகராசன்; அபயன்-பயமற்றவன்; அகளங்கன்-களங்கமில்லாதவன்; இப்பெயர்கள் சோழனைக் குறிக்கும். மாத்தானை-பெரும்படை; விக்கிரமாதித்தன்-அரும்பெருஞ் செயல்கள் செய்த ஓர் அரசன்; பூத்தவிசு - தாமரைப் பூவாகிய இருக்கை.

12. அட்டலட்சுமி-தனலட்சுமி, தானியலட்சுமி, தைரியலட்சுமி, வீரலட்சுமி, வித்தியாலட்சுமி, கீர்த்திலட்சுமி, விசயலட்சுமி, இராச்சியலட்சுமி என எண்மர். பிரசன்னன்-முகமலர்ந்து மகிழ்ச்சியாயிருப்பவன்; அருளூற்றிருக்கும் அன்பு-'அருளென்னும் அன்பீன் குழவி' (குறள்: 757) என்பதனோடு ஒப்பு நோக்குக; வேற்றரசர்-பிற மன்னர்.

13. ஓர் அரசன் தன்னைவிட மேம்பட்ட பேரரசனுக்குச் செலுத்தும் பொன், பொருள் முதலிய திறை; கனசமுகன்-பெருமை படைத்த சன்னிதானமுடையவன்; ஒப்பம்-ஆணை; உத்தண்டன்-அதிகாரமுள்ளவன்.

14. குரகதர்-குதிரையேற்றத்தில் வல்லவர்; குஞ்சரம்-யானை; வலாரி-இந்திரன்; யானையேறி நடத்துவதில் இந்திரனை ஒப்பான்; உரகன்-ஆதிசேடன்.

15. அனகன்-பழியற்றவன்; அதுலன்-ஒப்பற்றவன்; அசலன்-அசைவில்லாதவன்; அதிகன்-மேம்பட்டவன்; சனக விதுர சதுரன்-சனகனையும் விதுரனையும் போன்ற திறமையாளன்; சனகனையும் விதுரனையும் (ராஜரிஷி) பெருஞானி என்பர்.

16. நெறி-நேர்மை பிறழாத திட்பம்; நியமநிலை-செய்யும் கடமையில் நீங்காமை; மறு-குற்றம்.

மதுர மிருது வசன னுசிதன்
முதுமை புதுமை முறைமை-யெதுவுமறி 17

புண்ணியவா னோரும் புருடோத் தமனெனவே
மண்ணுலகி லுற்பவித்த வல்லாளன்-றண்ணிறைந்து 18

மந்தாரங் கண்டுமலர் வாடாதெப் போதுமலர்
செந்தா மரைபோற் றிருமுகத்தா-னந்தம் 19

புடைபரந்து நீண்டமிர்தம் போற்கருணை வெள்ளம்
கடைபரந்த செங்குவளைக் கண்ணான்-கடையாத 20

மந்தரத்தை ரண்டாய் வகிர்ந்துகடைந் திட்டதெனச்
சுந்தரப்பொற் பாரநெடுந் தோளினான்-கந்தரமு 21

மாவுஞ்சிந் தாமணியு மம்புயமுஞ் சங்கமும்வான்
காவுங் குடியிருந்த கையினான் - றாவுதிரை 22

வேலையிட மாயுதித்த மின்னனையாள் நேர்மடவார்
மாலையிட வாகைக்கொளு மார்பினான் - சாலநிதி 23

---

17. மதுரமிருது வசனன் – இனிமையும் மென்மையும் அமைந்த பேச்சுடையவன்; உசிதன் - பொருந்தி நடப்பவன்; முதுமை - பழமை; முறைமை - ஏற்புடைமை; முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்குப் ஏற்ற பெற்றியான்.

18. ஆரும் - எல்லாரும்; புருடோத்தமன் - மனிதரில் சிறந்தவன், திருமால்; வல்லாளன் - வன்மை மிக்கவன்.

19. மந்தாரம் - மேக மூட்டம்; அந்தம் - அழகு.

20. புடை - பக்கம்; கண் - செங்குவளைபோன்று சிவந்து காணப் படினும் கருணை மிகவும் உடையது என்பதாம். இது செம்மை வெகுளிக்கு அறிகுறி என்பதனைக் கருத்தில் கொண்டு கூறியதாம்.

21. கடையாத மந்தரம் - மந்தரமலை; பாற்கடலைக் கடையத் தேவரும் அசுரரும் பயன்படுத்தியது மந்தர மலையாதலின் அதனை விலக்கிப் பழுது படாது முன்னர் இருந்த மந்தர மலையைக் குறிப்பிடுகிறார். வகிர்ந்து - பிளந்து; சுந்தரம் - அழகு; பாரநெடுந்தோள் - பருத்து நீண்ட கை; கந்தரம் - மேகம்.

22. ஆவும் - காமதேனு என்னும் தெய்வப்பசு; சிந்தாமணி - விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்க வல்ல தெய்வமணி; அம்புயம் - பத்மநிதி; சங்கம் - சங்கநிதி; வான்கா - வானுலகிலுள்ள கற்பகம்; மந்தாரம் முதலிய ஐந்தருச் சோலை.

23. வேலையிட மாயுதித்தமின் - இலக்குமி; சாலநிதி - மிகுந்த செல்வம்.

வைத்துப் பரவுமறு மன்னர் மணிமகுடந்
தைத்துச் சிவந்தமலர்த் தாளினான் - முத்தமிழ்ப்பா 24
வேந்தர் கவியுரைப்ப வேல்வேந்தர் கொண்டாட
வேந்தியயாழ் பாண ரிசைபாடப் - போந்தபல 25
சீமைக் கணக்கர்சிலர் சேவித்து நிற்பவுயர்
வாய்மைக் கணக்கர்பலர் வாசிக்கப் - பூமிக்கு 26
ளாக்கினாசுக் கிரீபா வகண்டமண்ட லாதிபசௌ
பாக்கியா திருக்குருகைப் பாண்டியா - யோக்கியபரா 27
கன்னா சமரரண கண்டீர வாகனசம்
பன்னா புவன பரிபாலா - மன்னவா 28
கீர்த்திப் பிரதாபா கிரீடவர்த்த னாபுயத்தி
லேர்த்தவவ னிக்கொருதெய் வேந்திரா - பார்த்திபா 29
கோதண்ட தீட்சா குருராக வாகனக
வேதண்ட திண்புயவி தட்சணா - காதண்ட 30
வாங்குசிலைக் காமா வசன நெறுபாகா
வோங்குசக்ர வத்திநிக ருத்தண்டா - நீங்கி 31

---

24. பரவும் - வணங்கிப் போற்றும்; மறு மன்னர் - வேற்றரசர்.

26. சீமைக் கணக்கர் - நாட்டின் பல பாகத்திலுமுள்ள நிதிக்கணக்கர்; வாய்மைக் கணக்கர் – அரசனுடைய சபையில் அங்கம் வகிக்கும் கணக்கர்.

27, ஆக்கினை - அரசாணை; சுக்ரீவனின் ஆணை மிகவும் கொடிது என்பர்; அகண்ட மண்டலம் - பிளவுபடாத பெருந்தேசம்; ஆதிபன் - தலைவன்; சௌபாக்கியம் - நற்பேறு; திருக்குருகை - ஆழ்வார் திருநகரி என வழங்கும் திருநெல்வேலிச் சீமையில் உள்ள ஓர் ஊர்; திருவேங்கடநாதன் அரசு வீற்றி ருந்த இடம்; குருகை பாண்டி மண்டலத்தைச் சார்ந்தது ஆதலின் பாண்டியா என விளித்தார்; யோக்கியபரன் - நல்லொழுக்கமாகிய பாரத்தைத் தாங்கியவன்.

28. சமரரணம்-யுத்த களம்; கண்டீரவம்-சிங்கம்; சம்பன்னன்-சம்பத்து களை உடையவன்; புவனபரிபாலன் - உலகத்தைக் காப்பவன்;

29. கீர்த்திப் பிரதாபன் - புகழ்விளங்கப் பெற்றவன்; கீர்த்திக்கு வெள்ளை நிறமும் பிரதாபத்துக்குச் செந்நிறமும் கூறுவார்; வர்த்தனன் - வளர்தலை யுடையவன்; ஏர்த்த-பொலிவு பெற்ற; அவனி - பூமி; தெய்வேந்திரன் - தேவேந்திரன்.

30. கோதண்ட தீட்சாகுருவாகிய ராகவன்; கோதண்டம் - ராமன் வில்; கனகவேதண்டம் - பொன் மலையாகிய மேரு; விதட்சணன் – சிறந்த நன்றி யுடையவன்; அண்ட - நெருங்க.

31 வாங்குசிலை - வளைந்த கரும்பு வில்; நெறுபாகன் - நிர்வாகன், நடத்து வோன்; சக்ரவர்த்தி - சக்கரவர்த்தி; அரசர்க்கு அரசன் ; உத்தண்டன் - அதிகாரமுடையவன்.

யசையாத யோகதெட்ச ணாதிக்க வேந்தர்
விசையா வதிகபெல வீமா - விசையமென 32

மாகதர்நின் றேத்தமறை வல்லோர்க ளாசிசொல
வேகதம ரானோ ரினிதிருப்பப் - பாகுமொழி 33

மின்னா ரிருபுறமும் வெண்சா மரையிரட்டப்
பொன்னால வட்டம் புடைதயங்க - முன்னாக 34

வேவற் றொழிலோ ரிசைத்த பணிகேட்பக்
காவற் றொழிலோர் கடைகாப்ப - பூவுலகத் 35

தெண்டிசையு மோர்குடைக்குள் ளேயடக்கி யாண்டுபுகழ்
கொண்ட கனராச கொலுவினா - னண்டர்தொழும் 36

வானா சலமுனியை வந்தித் திருபொழுதுந்
தேனார் மலரடியைச் சிந்திப்போ - னானாத 37

கல்விக் கடலையருட் காரி தருங்கனியைச்
செல்வக் கொழுந்தைத் திரளமுதைச் - சொல்வித்தை 38

---

32. யோக-அண்மை விளி; தெட்சிணாதிக்கம்-கையுற்ற பெறும் அதிகாரம்; வேந்தா - இங்கு தருமன்; விசையன் - அருச்சுனன்; பெலவீமன்-வலிமை மிக்க வீமன்; விசையமென - செய செய என்று சொல்லி.

33. மாகதர் - அரசர் திருமுன் இருந்து அவருடைய புகழைப் பாடுவோர். 'சூதர் மாகதர் வேதாளிகரொடு' (சிலப். இந்திர. 48). சூதர் நின்றேத்துவார் என்றும் மாகதர் இருந்து ஏத்துவார் என்றும் சிலப்பதிகார உரை விளக்கம் உள்ளது. இதற்கு மாறுபட 'மாகதர் நின்று ஏத்த' என்று காணப்படுகிறது. இது காலவகையினால் வந்த மாற்றம் போலும். ஆசி சொல - வாழ்த்துரைக்க. ஏகதமர் - மனமொத்த மந்திரச் சுற்றத்தார். பாகுமொழி - வெல்லப்பாகு போன்ற இனிய சொல்.

34. வெண்சாமரை - கவரிமானின் மயிர்க் கற்றை. இரட்ட - வீச. ஆலவட்டம் - பெருவிசிறி. புடை - பக்கம். தயங்க - அசைய.

35. ஏவற்றொழிலோர். - அரசன் ஏவிய பணியைச் செய்யும் ஏவலாளர். கடை - வாசல். காவற்றொழிலோர் - காவலர்.

36. அண்டர் - தேவர்.

37. வானாசலம் - வானமாமலை; நாங்குனேரி என்னும் ஊர்; வானாசல முனி - வானாசலத்தில் துறவியாய் விளங்கும் திருமாலடியார் (ஜீயர்); வந்தித்து-வணங்கி. ஆனாத-அளவு படாத.

38. காரிதருங்கனி - சடகோபராகிய நம்மாழ்வார். காரி - நம்மாழ்வாரின் தந்தையார். இதுவும் அடுத்த கண்ணியும் நம்மாழ்வாரின் மேன்மை உரைப்பன.

மோனத் திருவுருவை முத்திக்கு வித்தைமலர்த்
தேனைத் திருஞான தேசிகனை - வானவரும் 39

வேதாவுங் காண விரும்பும் பரிபுரப்பொற்
பாதார விந்தம் பணிந்திடுவோன் - பூதூ 40

ரெதிபதிசித் தாந்தமுத்திக் கேதுவென்ற நூலே
யதிகமென்று நம்புநம தையன் - மதயானை 41

சொன்ன மகராச(ன்) துரைசுப் பிரமணிய
மன்ன னருளும் வரபாலன் - றுன்னுபுகழ்க் 42

கொண்ட குருகையினங் கோன்சுப் பிரமணிய
மண்டலிகன் பெற்ற வரபாலன் - மண்டிநறை 43

விள்ளு மலர்க்குவளை வேள்சுப் பிரமணிய
வள்ள லருளும் வரபால - னுள்ளபுவி 44

நம்புதுரை மீனாட்சி நாதமண்ட லாதிபதி
தம்பியென வந்துதித்த சங்கிராமன் - கெம்பீர 45

---

39. திருஞான தேசிகன் - நம்மாழ்வார்.

‘தேனறாமகிழ்த் தொடையலும் மவுலியும் திருக்கிளர் குழைக்காதும
கானறாமலர்த் திருமுகச் சோதியும் கயிரவத் துவர்வாயும்
மோனமாகிய வடிவமும் மார்பமும் முத்திரைத் திருக்கையும்
ஞானதேசிகன் சரணதா மரையும் என்நயனம்விட் டகலாவே’

என வரும் ஆழ்வார்திருநகரி ஏட்டுப் பிரதிகளில் காணும் நம்மாழ்வார் துதிப் பாடல் இங்கு ஒப்புக்காணத்தக்கது,

40. வேதா-பிரமன்; பரிபுரம்-சிலம்பு, கழல்; அரவிந்தம்-தாமரை; பாதார விந்தம்-திருவடித்தாமரை; பூதூர்-ஸ்ரீபெரும்பூதூர்; ஸ்ரீ இராமாநுஜர் அவதாரம் செய்த திருத்தலம்,

41. எதிபதி-யதிபதி (யதிராஜர்), முனிவர்-தலைவர்; இராமாநுசர். எதிபதி சித்தாந்தம்-விசிட்டாத்துவிதம் என வழங்கும் ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தம்; நூல்-இராமாநுச பாஷ்யம்; அதிகம் - உயர்ந்தது; மதயானை-கஜேந்திரன்.

42. மதயானை சொன்ன மகராசன்-கசேந்திரன் என்னும் மதயானை ஆதி மூலமே என்று அழைத்த திருமாலுக்கு ஒப்பானவன்; திருக்குருகூர் இறைவன் பெயர் ஆதிநாதன்; சுப்பிரமணிய மன்னன் - திருவேங்கடநாதனின் தந்தை: 43, 44, ஆம் கண்ணிகளும் இவரைக் குறிப்பிடுகின்றன; வரபாலன்-தெய்வ வரத்தால் பெற்றமகன்.

43. மண்டலிகன் - தேசத்தை ஆள்வோன்.

44. விள்ளுதல் - விரிதல்.

45. மீனாட்சிநாதன் - திருவேங்கடநாதனின் தமையன்; சங்கிராமன்-போர் செய்பவன்.

நன்னயவேள் மீனாட்சி நாததுரைச் சிங்கேறு
முன்னுதிக்கப் பின்னுதித்த மூர்த்தவான் - மன்னு 46

மருத்துன் றியதார்ச் சுவாமிநா தேந்திரன்
றிருத்தமைய னென்னவந்த செல்வன் - பெருத்தநிலைக் 47

கற்றான்பெண் ணாகமலர்க் காலா லுருக்காட்டக்
கற்றான் றிருவேங் கடநாத - னுற்றழகைக் 48

கண்டான் றொடர்ந்துவரக் கண்டானவ் வேலையணை
கண்டான் திருவேங் கடநாதன் - விண்டமலர்க் 49

கண்ணன் கமலமொப்பார் கண்ணனுறி வெண்ணெயுண்ட
கண்ணன் திருவேங் கடநாதன் - விண்ணுலகக் 50

கல்வித் தியாகன் கடந்ததிருத் தாள்பரவுங்
கல்வித் திருவேங் கடநாதன் - செல்வமிகு 51

---

46. மூர்த்தவான் - வடிவழகுடையவன்.

47. மருத்துன்றியதார் - மணம் நிறைந்த மாலை; சுவாமிநாதன் - திருவேங்கடநாதனின் தம்பி.

48. கல் பெண்ணாக உருக்காட்டக் கற்றவன் - இராமன்; கல்லாயிருந்த அகலிகை இராமனுடைய பாததூளியால் பெண்ணுருப் பெற்றது இங்கே குறிக்கப்படுகின்றது. இராமனாகவும், கண்ணனாகவும் வந்தவன் இவனே என இவனைத் திருமாலின் கூறாகக் கொண்டு பேசுகிறார் கவிஞர்.

49. கண்டான் தொடர்ந்து வர - பிறருடைய கண்கள் இவன் அழகினைத் தொடர்ந்து பார்த்துவர; வேலையணைக் கண்டான் - கடலில் அணை கட்டினவனான இராமன்.

50. விண்ட மலர்க்கண் - விரிந்த மலர்களில்; நன்கமலம் ஒப்பார் - பெண்கள்; கண்ணன் - கண்களில் பொருந்தியிருப்பவன் கம்பராமாயண உலாவியற் படலத்தில்' வரும்,

> 'வீதிவாய்ச் செல்கின்றான்போல் விழித்து இமையாது நின்ற
> மாதரார் கண்களூடே வாவு மான்தேரில் செல்வான்
> யாதினும் உயர்ந்தோர் தன்னை யாவர்க்கும் கண்ணன் என்றே
> ஓதிய பெயர்க்குத் தானே உறுபொருள் உணர்த்தி விட்டான்.
>
> -கம்பர் : 1068

என்னும் பாடலுடன் ஒப்பு நோக்குக. வெண்ணெயுண்ட கண்ணன் - கிருட்டிணன்.

51. விண்ணுலகக் கல்வி - மறை, வேதம்; தியாகன் - திருமால்.

நந்தமரான் சங்கரநா ராயணமா லைப்பெரிய
தந்தையெனச் சொல்லுஞ் சவுந்திரவேள் - சுந்தரவி 52

பேக துரைமாலைப் பிள்ளையையு மெங்கடெய்வ
நாயக மகீபனையு நாகரிக - யோகப் 53

பெரிய திருவடிவி பேகனையு நாளு
முரிமைச் சகோதரரா யுள்ளோன் - வரிசைமுகில் 54

பொங்குதவ மீறுசிவ பூசா துரந்தரனாஞ்
சங்கரநா ராயண தயாளுவுக்குந் - தங்குபத 55

பாகுகுண மீறுதையல் பாகமா லுக்குநல்வி
வேகமுகில் சுப்பிரமணிய வேந்தனுக்கும் - வாகு 56

மருமருவு தார்சீனி வாசமா லுக்குந்
திருமருக னெனவந்த தீரன் - முருகலர்தார்ச் 57

சங்கரமூர்த் திக்குஞ் சகோதரராஞ் செங்கமல
நங்கைவளர் வைகுந்த நாதனுக்கு - மிங்கிதஞ்சேர் 58

நன்மைத் துனனா நரபாலன் பாரிலுள்ளோர்
நன்மைத் துரையெனவே நம்புவோன் - பன்னரிய 59

வாறுமுக மெய்திடலா லங்கடர்வே லேந்துதலாற்
கூறு மயிலின்மேற் கொள்ளுதலான் - மாறிவரு 60

---

52. சங்கரநாராயணன் - திருவேங்கட நாதனின் பெரிய தந்தை; சவுந்திரம் - அழகு; சுந்தரவிபேகம் – நல்லறிவு; விபேகம் - விவேகம்.

53-54. துரைமாலைப்பிள்ளை, தெய்வநாயகமகீபன்; பெரிய திருவடி விபேகன் - இம் மூவரும் திருவேங்கடநாதனின் சகோதர உரிமை பெற்றவர்கள்.

55-57. திருவேங்கடநாதனின் மாமன்மார் நால்வர் குறிப்பிடப்படுகின்றனர்: சங்கரநாராயணன், தையல்பாகன், சுப்பிரமணியன், சீனிவாசன். சிவபூசாதுரந்தரன் - விதி முறைப்படி செய்யும் சிவவழிபாட்டில் சிறந்தவன்; தயாளு- கருணையுடையவன், அருளுடையவன்; முருகு - மணம்; பதபாகம் - உம்மைத் தொகை, வாகு - தோள்; மருமருவுதார்-மணம் பொருந்திய பூமாலை.

58-59. திருவேங்கடநாதனின் மைத்துனமார் இருவர் குறிப்பிடப் பட்டுள்ளனர். சங்கரமூர்த்தி, வைகுந்தநாதன். செங்கமல நங்கை-இலக்குமி. இங்கிதம் - இனிமை. நரபாலன் - அரசன். துரை-தலைவன். பன்னரிய-சொல்லுவதற்கு அருமையான.

60-63. இந்நான்கு கண்ணிகளிலும் திருவேங்கடநாதனுக்கு உரிமையான பொதிய மலையை முருகனுக்கு ஒப்பிட்டுச் சிலேடை நயம் தோன்ற ஆசிரியர் பாடும் திறம் பார்க்கத் தக்கது.

வேங்கையுருக் காட்டுதலான் மேவுவள்ளி சேர்ந்திடலாற்
பூங்கடம்பைத் தாராய்ப் பொருந்துதலா - லோங்கிவரு 61

சூரை யடர்துயர்செந் தூரையே மேவுதலாற்
சேரமா யானை செனித்திடலாற் - பாரிலுயர் 62

வாலுஞ் சுடர்வே லமரர்சே னாபதியைப்
போலும் பொதியப் பொருப்பினான் - மேலாங் 63

கமலம் பெறலால்மா கங்கடரு மாற்றா
லமருங் கலைசேர் வதனா - லமையாத 64

வானந் துதித்திடக்க மண்டலமே தாங்குதலாற்
றானந் தவமிரண்டுந் தந்திடலால் - மானிடர்கள் 65

பண்ணும் பவமொழியப் பண்ணுதலால் வேதனைப்போல்
நண்ணும் பொருனை நதியினா - னெண்ணு 66

---

முருகப்பெருமானுக்கு : ஆறுமுகம் அமைந்துள்ளது. அடர்-பகைவரைத் தாக்கும். வேல்-வேலாயுதம். கூறும் - சிறப்பித்துப் பேசப்படும். மயிலின் மேற் கொள்ளுதல்-மயிலின் மேல் ஏறிவருதல். வேங்கையுருக் காட்டுதல் - உருமாறி வேங்கை மரமாய் உருவெடுத்தல். வள்ளி-வள்ளி நாயகி. பூங்கடம்பைத்தார்-அழகிய கடப்ப மாலை. ஓங்கிவருசூர் - செருக்குடன் எதிர்த்து வந்த சூரன். அடர்ந்து - கொன்று. செந்தூர் - திருச்செந்நூர். சேர மா யானை செனித்திடல் - வள்ளியை முருகன் சேரும் வண்ணம் விநாயகர் ஆனை வடிவில் தோன்றுதல். உயர்வு-தெய்வீகப் பெருமை. அமரர் சேனாபதி - தேவர்கள் சேனாபதியாகிய முருகன்.

பொதிய மலைக்கு : ஆறுமுகம் எய்திடலால்-ஆறு தன்னிடத்திலே பொருந்தியிருத்தல். அடர் வேல் ஏந்துதல்-நெருக்கமாக வேல மரங்களைத் தாங்கியிருத்தல். மயின்மேற் கொள்ளுதல்-மயில்களைத் தன்னிடத்திலே பெற்றிருத்தல். மாறிவரு - பருவகாலத்திற்குத் தக்கவாறு மாறுபட்டு வளரும். வேங்கை - வேங்கைப்புலி. உருக் காட்டுதல் - அழகுற அமைதல். வள்ளி-வள்ளிக்கொடி, கடம்பை-கடப்ப மரம். தாராய்-வரிசையாய். சூரை-சூரைச் செடி. செந்தூர் - செம்மையான அடித்தூறு. செந்து ஊர்-ஊரும் பிராணிகள் எனலும் ஆம். சேரமாயானை - சேரநாட்டு யானைகள். செனித்திடல்-யானைகள் பிறத்தல். உயர்வு - மலையின் உயர்ச்சி.

64-66. பொருனை நதியைப் பிரமனுக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார் கவிஞர்.

பிரமனுக்கு : கமலம் பெறல் - தாமரை யாசனத்தைப் பெற்றிருத்தல், மாகங்கள் தருதல் - ஆகாயம், திக்கு முதலியவற்றைப் படைத்தல். அமரும் - விரும்பும். கலை - சாத்திரம். வானம் துதித்திட - வானவர்கள் போற்ற. கமண்டலம் - கமண்டலம் என்னும் நீர்க்குடுவை. தானம் தவம் இரண்டு தந்திடல் - தானத்தையும் தவத்தையும் மேற்கொண்டிருத்தல். பவம் - பிறப்பு, மொழியப் பன்னுதல் - கூறும்படி செய்தல்.

முலகம் பெறலா லுயர்கால் நிறைய
விலகுநதி காட்டு மியல்பாற் - குலவுமெழில் 67

செந்தா மரைத்தடங்கண் சேருதலாற் காவேரி
நந்தாத சீரங்க நண்ணுதலால் - விந்தைபெறு 68

சங்கம் பொருந்துதலாற் றண்குருகூ ரின்பவள
மெங்குஞ் சிறக்க விசைந்திடலால் - மங்கலச்சொற் 69

றீட்டுந் தமிழ்ப்புலவோர் செங்கணெடு மாலெனவே
நாட்டுந் திருவழுதி நாட்டினான் - வாட்டமிலாச் 70

சொற்புலவோர் சூழுதலாற் சுற்றரம்பை மேவுதலாற்
கற்பகஞ்சேர்ந் தின்பநலங் காட்டுதலா - லற்புதஞ்சேர் 71

---

பொருனையாற்றுக்கு : கமலம் பெறல் - தாமரை மலர்களைப் பெற்றிருத்தல். மாகங்கள் தருதல் - வேள்விகளை ஆற்ற உதவுதல். கலை - கலைமான். வால் நந்து உதித்திடல் - வெள்ளிய சங்குகள் தோன்றுதல். கம் மண்தலமே தாங்குதல் - நீரினாலே உலகைக் காப்பாற்றுதல். தானம் தவம் - நீர் பாய்வதனால் விளையும் பொருள்களால் மக்கள் தானம் தவம் புரிய ஏதுவாதல். பவம்-பாவம். பொருனையில் நீராடுவார் பாவம் போகும் என்றபடி.

67-70. திருவேங்கடநாதன் ஆளும் நாடாகிய திருவழுதிநாடு திருமாலுக்கு ஒப்பிடப்படுகிறது.

திருமாலுக்கு : உலகம் பெறலால் - மாவலியிடம் சென்று மூவடி மண் வேண்டி உலகம் எல்லாம் பாதத்தால் அளந்து பெறுதல். கால்நிறைய இலகு நதி காட்டுதல் - திருப்பாதத்திலிருந்து நிறைந்து பெருகி ஓடி விளங்கும் கங்கை நதியைத் தோற்றுவித்தல். குலவுமெழில் - நெருங்கிய அழகு. செந்தாமரைத் தடங்கண் - செந்தாமரைப் பூப்போன்ற பெரிய கண்கள். காவேரி நந்தாத சீரங்கம் நண்ணுதல் - காவேரியாற்றின் கரையில் குறைபடாத சீரங்கம் என்னும் திருப்பதியைச் சேர்ந்திருத்தல். விந்தை-வியப்பு. சங்கம்-பஞ்சசன்னியம். தண் குருகூர் இன்பவளம் எங்கும் சிறக்க. இசைந்திடல்-குளிர்ச்சி பொருந்திய ஆழ்வார் திருநகரியிலே இன்பமாகிய செல்வம் எங்கும் பெருகுமாறு பொருந்தியிருத்தல்.

திருவழுதி நாட்டிற்கு: உலகு அம் பெறலால்-உலகம் அழகைப் பெறுதலாலும். கால்-வாய்க்கால். இலகுநதி காட்டுதல்-விளங்கும் நதிபோல நீரோட்டத்தால் காட்சிதரல். செந்தாமரைத் தடங்கள் - செந்தாமரை மலர் பூத்து விளங்கும் தடாகங்கள். காவேரி நந்தாத-காக்களிலிருந்து தேன்குறைவுபடாது பாய. சீர்அங்கம் நண்ணுதல் - சிறப்புடைத்தான பல உறுப்புகள் பொருந்தியிருத்தல். விந்தை – வியப்பு, உலகோர் அதிசயிக்கும் வியப்பு; சங்கம் - புலவர் கூட்டம். இன்பவளம் சிறக்க - காட்சிக்கு இனிய பவளங்கள் எங்கும் மிகுந்திருப்பதால், மங்கலச் சொல் தீட்டும் புலவர் - மங்கலம் பாடும் புலவர். இவர்கள் மக்களை வாழ்த்தி வாழச் செய்வதால் காத்தற் கடவுளாம் திருமாலுக்கு ஒப்பாகின்றனர்.

71-73. திருக்குருகூர் இந்திரனைப் போல அழகு மிக விளங்கியது என்று இங்கு விவரிக்கிறார்.

கொண்டல்படிந் தேறியவான் கோபுரநின் றோங்குதலால்
விண்டமலர்த் தேவதரு மேவுதலா - லண்டர்தொழுஞ் 72

சிந்தா மணியெனுமத் தெய்வம் வளர்ந்திடலா
லிந்திரனைப் போலே யெழிலோங்கிச் - சந்ததமுங் 73

கல்வியுங் கேள்வியுங் கற்றோரும் வேதியருஞ்
செல்வப் பொருளுந் திருந்திளையார் - பல்விதமா 74

யாடிடமு மேல்முகப்பு மம்பொன்னெடு மாமதிலு
மேடையுடை சூழ்ராச வீதிகளும் - பாடியசொற் 75

கான விசையுங் கவிப்புலவோர் சொற்றமிழும்
வானம்வரை யோங்குமணி மண்டபமும் - ஞானத் 76

திருவாய் மொழியுந் திருமொழியும் வேதத்
துருவாம் விழாவி னுவப்பும் - பெருவாழ்வும் 77

நித்ய கல்யாண நிறையு நிறைந்தளகை
யொத்த திருக்குருகை யூரினா - னெத்தித் 78

---

இந்திரனுக்கு : சொற்புலவோர் - புகழ் வாய்ந்த தேவர்கள். சுற்று அரம்பை மேவுதல் – சுற்றிலும் அரம்பை மாதர் அமர்ந்திருத்தல். கற்பகம் - கற்பக மரம். கொண்டல் - மேகம், ஏறிய - ஊர்தியாகக் கொண்டவன். வான் கோபுரம் - ஒளி பொருந்திய கண்கள் உடல் எங்கும் பொருந்தியிருத்தல். தேவதரு - தேவர் உலகத்திலுள்ள ஐந்து தெய்விக மரங்கள். அண்டர் - தேவர். சிந்தாமணி - சிந்தாமணி என்னும் தெய்வமணி சிறப்புற்றிருத்தல். இந்திரன் - தேவேந்திரன்.

திருக்குருகூருக்கு : சொற்புலவோர் சூழல் - புகழ்படைத்த புலவர்கள் திரண்டிருத்தல். சுற்று அரம்பை - சுற்றிலும் வாழை மரங்கள், கற்பு அகம் சேர்ந்து-கற்பாகிய அருங்குணம் உள்ளத்திலே படிந்து. கொண்டல் படிந்து ஏறியவான் கோபுரம் - மேகங்கள் வந்து தங்கும்படியாக மிக உயர்ந்துள்ள கோபுரம். தேவதரு-தேவதாரு மரங்கள். அண்டர் - தேவர். சிந்தாமணி-அவ்வூரில் விளங்கும் தெய்வம். சந்ததமும்-எப்பொழுதும்.

74-78. திருக்குருகை ஊர்வளம்; வேதியர் - வேதங்களில் தேர்ச்சி பெற்ற அந்தணர். இளையார் - பெண்கள். ஆடிடம் - விளையாடும் இடம். மேல் முகப்பு - மாடங்களின் முற்பகுதி. மேடை - உப்பரிகை. ராசவீதி-அரசர் பவனி வரும் பெருவீதி. கானம்-இசைப்பாட்டு. கவிப்புலவர் - கவி பாடுவதில் வல்ல புலவர். சொற்றமிழ்-புகழ் வாய்ந்த தமிழ் நூல்கள். மணிமண்டபம்-அழகிய பெருமண்டபம், திருக்கோயில் மண்டபம். திருவாய் மொழி திருமொழி விழா - ஆழ்வார் திருநகரி ஆலயத்தில் நடைபெறும் திருவிழா. திருவாய்மொழி எனக்கூட்டி திவ்வியப் பிரபந்தம், வேதம் முழங்கும் திருவிழா என்று கொள்ளலாம். உவப்பு - மகிழ்ச்சி. நித்ய கல்யாணம் - நிரந்தரமான சுகவாழ்வு. அளகை - குபேரனது பட்டணமாகிய அளகாபுரி. எத்தி - எற்றிமோதி.

தறியைத் தகர்த்துருட்டிச் சங்கிலிதூ ளாக்கி
முறியநிக ளந்தெறிக்க மோதிக் - கறுவிச் 79

சினத்துவீ ரிட்டுத் திகழ்மத முற்றிக்
கனத்தமே கத்தைக் கலக்கிப் - பனைக்கையினா 80

லட்டகிரி வெற்புநிர்த் தூளாகப் பிசைந்துதிர்த்து
வட்டநெடு வாரிதியை வாய்மடுத்து - முட்டிமுட்டி 81

யண்டத்தை யுங்குலுக்கி யாக்கிரமித் தாட்சிநவ
கண்டத்தை யும்புரட்டிக் கண்டித்து - விண்டலத்தை 82

யெட்டியெட்டி யெற்றியெற்றி யிட்டகற்ப கச்சினைக்குள்
முட்டியிப்பு றப்படுத்தி மொய்த்துரத்து - வட்டமிட்ட 83

சக்ரவெற்பி னைக்கடக்க சத்தமுழக் கிக்கடற்க
லக்கியுக்ர மத்திருப்பு லக்கையிட்ட - துக்கியக்ர 84

---

79-90, யானையினது இயல்பு கூறப்பட்டுள்ளது. தறி - யானை கட்டும் தறி. தகர்த்து - பெயர்த்து, சிதைத்து. சங்கிலி - யானையைக் கட்டி வைக்கும் சங்கிலி. நிகளம் - யானையின் காற்சங்கிலி. மோதி-தாக்கி. கறுவி-மனவயிரம் கொண்டு.

80. சினத்து - கோபங் கொண்டு. வீரிட்டு - பிளிறி. திகழ்மதம் - மேற்பட்டு விளங்கும் மதம், கனத்த மேகம் - நீர் கொண்டமையினால் பளுவாக இருந்த மேகம். பனைக்கை - பனை போன்று நீண்ட துதிக்கை.

81. அட்டகிரி வெற்பு - எட்டுக்குலமலைகள். அவையாவன; இமயம், மந்தரம், கயிலாயம், விந்தியம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம். நிர்த்தூளாக - முற்றும் நாசமடையும் படி, வாரிதி - கடல். வாய்மடுத்து - குடித்து.

82. அண்டம் - உலகம்., பூமி. ஆக்கிரமித்து - தன் கீழ்ப்படுத்தி, அடக்கி. நவகண்டம் - கீழ்ப்பால் விதேகம், மேல்பால் விதேகம், வடபால் விதேகம், தென்பால் விதேகம், வடபாலிரேபதம், தென்பாலிரேபதம், வடபாற் பரதம், தென்பாற் பரதம், மத்திம கண்டம் எனப் பூமியின் பிரிவால் அமைந்துள்ள ஒன்பது கண்டங்கள், கண்டித்து - துண்டாக்கி, உடைத்து.

83. எட்டி – தொட்டு. எற்றி-உதைத்து, கற்பகச் சினை-தேவருலகிலுள்ள கற்பகமரத்தின் கிளை. மொய்த் துரத்து - திரண்டு வலிமை கொண்டு. வட்டமிட்ட - உலகினைச் சூழ்ந்து வட்டமாய் அமைந்திருக்கிற,

84. சக்கரவெற்பு - சக்கரவாளமலை. சத்த முழக்கி – ஒலியெழுப்பிக் கொண்டிருக்கின்ற. கடல் - வெளிப்புறக்கடல். இருப்புலக்கையிட்டதுக்கி - இரும்பு உலக்கையாற் கலக்கி. உக்கிரமம் - கொடுமை. அக்கிரமத்தர் – தீச்செயல் புரிவோர். மச்சர் - மச்ச நாட்டைச் சார்ந்தவர்.

மத்தரைத்து ரத்தியுற்ற மச்சரைக்கு மட்டிமற்ற
வெத்தரைக்கு டற்கிளப்பி யெக்களித்து - வித்தரித்து 85

மாறுகொண்ட ராசர்மண்டை மார்புசண்சள் கால்கள்சிந்த
வீறுகொண்டு தூளிமண்டி வேகமண்டி - யேறுசண்ட 86

மாருதங்கள் காதினின்று மாறவம்பு மீறுகொங்கர்
சேருமிந்து ளார்கலிங்க தேசரங்க - ராருநின்று 87

கைகுவிக்க வீழ்த்தார் கப்பலே றக்குவளை
மைபிடித்த வேற்கண்மட மாதரொடு - மெய்பதறி 88

வங்கர் குடகர் வடுகர் கருநாடர்
சிங்களர்ம ராடர்சிந்து தேசத்தா - ரங்கங்கே 89

செம்பொன் குவித்துத் திரையளக்க வேற்கபுரி
கும்ப விகடதடக் குஞ்சரத்தான் - சம்பிரம . 90

மாணிக்கக் குப்பியிட்டு வாய்ந்தநெடுங் கேசரியை
வேணிச் சடைதிருத்தி மேன்மைபெறு - மாணப்பொற் 91

பக்கரையிட் டப்பசும்பொற் பாரக் கலணைகட்டி
மிக்கமணி வாலாச மேலணிந்து - தக்க 92

---

85. குமட்டுதல் - அப்புறப்படுத்தல். எத்தர் - ஏமாற்றுக்காரர். எக்களித்து- மிகுந்த செருக்குடன் களிப்பு மிகுந்து. வித்தரித்து - பரந்து விரிந்த.

86. மாறு - பகைமை. சண்டமாருதம் - பெருங்காற்று. தூளி - தூசி, மண்டி - நிறைந்து,

87. மாற-பரிமாற; மாறிமாறி வெளிப்படுத்த. வம்பு-தீமை. மீறு-மிகுந்த. கொங்கர், இந்துளார், (சிந்து நாட்டினர்), கலிங்கதேசர். அங்கர் - இவர் வேற்று நாட்டு மன்னர். ஆரும்-யாரும்.

88. கைகுவிக்க - கைகூப்பி வணங்க. ஈழத்தார் - இலங்கை தேசத்தார்.

89. திறை செலுத்தியோர் இவரிவர் என்பது - வங்கர், குடகர், வடுகர், கருநாடர், சிங்களர், மராடர், சிந்து தேசத்தார்.

90, திறை-கப்பம். அளக்க ஏற்க - பிற மன்னர் திறை அளக்க இவன் ஏற்க. விகடதட - விகடமாய்ச் செல்லும். குஞ்சரத்தான் - யானையை உடையவன். சம்பிரமம் - சிறப்பு.

91. குப்பி - ஓர் ஆபரணம். கேசரி-மயிர். வேணி-பிடரி. சடைதிருத்தி- அலங்கரித்து.

92. பக்கரை-அங்கவடி. கலணை-சேணம், வாலாசம்-வாலிலிருந்து அணியும் அணி,

மணியிட் டிழைத்தமுக மட்டணிந் துச்சிக்குப்
பணியிட்ட வச்சிரமா பட்சிப் - பணவைத்து 93

வீரவெண் டையந்தரித்து மிக்ககன்னச் சல்லிகட்டிச்
சாருமிரு பக்கமும்வெண் சல்லிகட்டிப் - பாரக் 94

கலினங் கொடுத்தக் கலினத் தடங்கா
தொலிதருபா தச்சிலம்பி னோசை - கலகலென 95

கால்மீறிப் பஞ்சகதி கொண்டு தாவிநெடு
வால்வீசிச் சாய்ப்பு வகுப்புவித - மேலான 96

வேடையமுஞ் சோடனையும் வெவ்வேறு கால்காட்ட
வோடியட்ட திக்குநடத் துக்கிரமித்துக் - கோடி 97

மலையைக் கடலாக்கி வன்குரத் தூளாலே
யலைகடலை நீண்ட மலையாக்கிக் - குலையாத 98

சீனத்தையுந் துரத்தித் திக்கதனை யெட்டையும்பாய்ந்
தூனப் படக்குரத்தை யூன்றியே - யானைமத 99

மத்தகத்தி லேநடித்து வாளரவச் சேடன்முடிக்
கொத்தசைத்து மெய்யைக் குலுகுலுக்கித் - தத்தியொரு 100

---

93. முகமட்டு-குதிரை முகத்திலணியும் ஓர் அணிவகை. பணியிட்ட-வேலைப்பாடு அமைந்த. பட்சி-குதிரைக்கு அணியும் ஓர் அணிகலன்.

94. வெண்டையம் – காலணி, கால் தண்டை. கன்னம்–காது. சல்லி-ஆபரணத் தொங்கல்.

95. கலினம்-கடிவாளம்,

96. பஞ்ச கதி-குதிரையின் ஐந்து வகை நடை. மல்ல கதி, மயூரகதி, வானரகதி, சசகதி, சரகதி. சாய்ப்பு வகுப்பு-சாய்வாகவும் வரையறுத்தும் செல்லுகை.

97. வேடையம் - விருப்பமான அணிகள். சோடனை - அலங்காரம். கால் காட்ட–ஒளிவீச. உக்கிரமித்து-வேகம் கொண்டு, சினம் கொண்டு; கோடி-சிகரம்; கொடுமுடி. பல கோடிக்கணக்கான.

98. குரம்-குளம்பு. குலையாத-அசைவு பெறாத, கட்டுக்கோப்பு மாறாத. சீனம் - சீனநாடு. ஊனப்பட - காயமுறும்படி, குற்றப்படும்படி.

100 மத்தகம் - அட்டதிக்கு யானையின் கும்பத்தலம். வாள் அரவம் - கொடிய பாம்பு. சேடன் - ஆதிசேடன். கொத்து - கூட்டம்; தொகுதி, தத்து-தாவி,

சாரிகொண்டு தூள்பறந்து சாடியண்ட கோளமண்ட
வீரதண்டை யோசைகண்டு வேறிருந்த - பேரிரங்க 101

வாலசைத்த காலினின்ற மாதிரங்கள் வேர்பறிந்து
கால்பறந்து நேர்வரும்பிர காசவிம்ப - வாலசந்திர 102

னேர்திரிந்து சூரியன்றன் னேர்மயங்க மாமயங்க
வேர்விரும்பி யோடவந்த வேலையும்பி - னீரெழும்ப 103

வாதாடி நேரோடி மாறாடி வீறாடி
யேதாட சாராள மேதெக்க - ணாதார 104

மானோர மெனாநேரி லாகாத பேரோட
வேனோர்கள் வாழ்வேறி யீடேற - வானாத 105

செல்வத் திரவியமுஞ் செம்பவளக் கொத்தும்ரத்தினக்
கல்வைத் திழைத்த கனபணியும்-பல்விதமாய்ப் 106

பீதாம் பரமும் பெருத்தமுத்துக் கோவையும்பொற்
பாதாம் புயத்திற் பணிந்துவைத்து-நாதாநந் 107

தாயுநீ யென்றரசர் தாள்பரவ வீறுகொண்டு
பாயுமுக்கிர வீரப் பரியினா-னாயிழையார் 108

---

102. மாதிரங்கள்-திசைகள். கால் - காற்று. வால சந்திரன் - பிறைச் சந்திரன்.

101. சாரி - போக்கு, இடசாரி வலசாரியாகச் செலுத்துகை. சாடி-தாவிக் குதித்து. அண்ட கோளம்-உலகமுகடு. அண்ட-நெருங்க. வீரதண்டை - வீரத்தைக் குறிக்க அணியும் வெற்றிக் காலணி. வேறிருந்தபேர்-அண்ட கோளத்துக் கப்பாலிருந்தோர்.

103. சூரியன் தன் ஏர் - சூரியனுடைய ஒளி. மா - சூரியன் தேரில் கட்டிய குதிரை. வேர்பு - வேர்வை. அரும்பி - ஒன்றி. வேலை-கடல். நீரெழும்ப நீர்மேலிட.

104. வாதாடி - பிணங்கி, மோதி. மாறாடி - வேறுபட்டு. வீறாடி - இறுமாப்பு ஒழிந்து. அசாராளம்-ஆசாரம்; திருவோலக்கம். தெக்கண்-தக்கண்-தக்ஷிணம்; தெற்கு.

105. நேரிலாகாதபேர் - பகைத்தவர்கள். ஏனோர்கள்-பிறர். வாழ்வேறி-வாழ்வு பெருகி. ஈடேற - பிழைக்க.

106. திரவியம் - பொன். கொத்து-திரள். கனபணி-பெருமை படைத்த ஆபரணம்.

107. பீதாம்பரம் - பொன்னாடை. பாதாம் புயம் - காலாகிய தாமரை.

108. வீறுகொண்டு - செருக்குக் கொண்டு. உக்கிர வீரம் - பெருவீரம். பரியினான் – குதிரையையுடையவன்,

கண்டார் பறிப்பரிதாங் கண்ணெனவும் போதெனவும்
வண்டா லறியுமலர் மாலையான்-கொண்டாடு 109

மன்னக் கொடிக்குநரை யான்கொடிக்கும் பொற்கருட
வன்னக் கொடிக்கும்வெண் சேவற்கொடிக்குந்-தன்னவரைத் 110

தண்டலைசூழ் பூமித் தலத்திற் றினப்பூசை
கொண்டருள வைக்குங் கொடியினா-னெண்டிசைக்கு 111

மீறுங் கவுசலனும் வெய்யோன் றவச்சேயுங்
கூறு மனுமக் கொடியோனும்-வேறுபிரி 112

வன்றியிங்கே யொன்றா யவதரித்தா னென்னமணி
முன்றினின் றார்க்கு முரசினா-னன்றிபெறு 113

தென்குருகை நம்பி திருத்தா மரையடிக்கே
யன்புபெறு முண்மைவள ராணையான்-றன்பெருமைக் 114

காந்தன் புகழைக் கவிப்புலவோர் சொல்லும்ரதி
காந்தன் றிருவேங் கடநாதன்-சேர்ந்துநின்ற 115

கம்ப வளக்கரடக் கைக்கிம் புரிக்கோட்டுக்
கும்பமத யானை கொணர்கவென்றா-னெம்பெருமா 116

னுத்தார மொன்றுரைத்தா ரோடிப்போய்ப் பாகரும
கத்தான யானை யலங்கரித்தார்-சித்திரமாய் 117

---

109. பறிப்பரிது - மீட்கவரிது. போது - பூ.

110. அன்னக்கொடி - பிரமன். நரை - வெண்மை. ஆன் கொடி-இடபக் கொடியையுடைய சிவன். கருடக்கொடி - திருமால். வன்னம் - அழகு. சேவற் கொடி - முருகன். வரை - மலை,

111. தண்டலை - சோலை.

112. கவுசலன் - கோசலை புதல்வனாகிய இராமன். வெய்யோன்-சூரியன். வெய்யோன் தவச் சேய் - கர்ணன். அனுமக்கொடியோன்-அனுமனைக் கொடி யாகப் படைத்த அருச்சுனன்.

113. இராமன், கண்ணன், அருச்சுனன் மூவரும் முறையே வீரமுரசு, கொடை முரசு, மணமுரசு என்னும் மும்முரசினையும் குறித்தபடியாம். மணி முன்றில் - அழகிய முற்றம். நன்றிபெறு - நன்மை பெறும்.

114. தென்குருகை நம்பி-நம்மாழ்வார்.

115. பெருமைக்கு ஆம் தன் புகழை என்க. ரதிகாந்தன்-மன்மதன் போல் அழகிய திருவேங்கடநாதன்.

116. கம்பம்-அசையும் இயல்பு. யானை கட்டும் தறி எனவும் கொள்ளலாம். கரடக்கை - பதம் பாயும் துதிக்கை. கிம்புரி-கிம்புரி என்னும் ஆபரணம்.

117. உத்தரம் - உத்தரவு. பாகர் - யானை நடத்துவோர், மகத்தான- பெரிய. சித்திரம் - அழகு.

மேலுக்கு வெள்ளையிட்டு வெண்கோட்டிற் கத்திகட்டிக்
காலுக்கு வீரக் கழலணிந்து - பாலுக்கு 118

நேராம் புகர்முகத்தி னெய்யிட்டுச் சாதிலிங்கத்
தேராருந் தொய்யி லெழுதியே - வாராகப் 119

பொன்னுமுத்துங் கோத்த புரசைக் கயிறணிந்து
பன்னுமுகத் தம்பொற் படாஞ்சாத்தி - மின்னொளிசேர் 120

கண்டை கழுத்திலிட்டுக் கட்டியிரு பாரிசமு
மண்டிவரு மோசை மணியணிந்து - விண்டொளிரும் 121

பூம்பட்டணிந் ததின்மேற் பொற்சுழகு மெத்தைவிரித்
தாம்பொற் சகடோ லதிலிருத்தித் - தாம்பணிந்து 122

செம்பவளக் காலிறுத்திச் சேருமணி வச்சிரத்தா
லம்பாரி யேத்தி யருகெல்லாஞ் - செம்பவளக் 123

கொத்துமுத்துக் குச்சுமிட்டுக் கொம்பிலந்தக் குச்சணிந்து
பத்துநகத் தானையொடும் பாகர்வந்தே - யுத்தமனைச் 124

சேவித்தா ரங்கே திருமஞ்சனம் பணிந்து
மேவித் திருத்துகிலான் மெய்புலர்த்தி - பூவிரிந்த 125

---

118. வெள்ளை - வெள்ளை நிறத் துணியாலான மேலங்கி. யானைக் கொம்பில் கத்தி கட்டுவதும், காலில் கழல் என்னும் அணி அணிவதும் குறிக்கப்படுகிறது.

119, புகர்முகம் - வெண்ணிறமான புள்ளிகள் கொண்ட முகம். நெய்யிட்டு- எண்ணெய் தடவி. சாதிலிங்கம் - செந்நிறமுள்ள ஒருவகைச் சாந்து. தொய்யில் - கோலவகை. வாராக - கட்டும் கயிறாக.

120. புரசைக் கயிறு-யானையின் கழுத்திலிடும் கயிறு. அம் பொற்படாம்- அழகிய பொன்னாலாகிய முகபடாம்.

121. கண்டை - கண்டாமணி என்னும் பெருமணி. பாரிசம் - பக்கம். மண்டி - மிகுந்து. ஓசைமணி - ஒலி எழுப்பும் சிறுமணி. விண்டு. வெளிப்பட்டு.

122. பூம்பட்டு - அழகிய பட்டு. சுளகு மெத்தை - சுளகின் வடிவமைந்த ஒரு வகை மெத்தை; யானையின் முதுகின்மேல் இருக்கை இடுவதற்காக அமைக்கப் படுவது. சகடோல் - அம்பாரி.

123. பவளக் கால் கொண்ட மணி பதித்த அம்பாரி என்று அம்பாரியின் அழகு சுட்டப்படுகிறது. அம்பாரியாவது யானைமேல் இடும் பீடம்.

124. குச்சு - சிறு தொங்கல் குஞ்சம். பத்து நகத்து ஆனை என்க. பாகர்- யானையை நடத்துவோர். உத்தமன் - சிறந்தோன்.

125. உத்தமன் - தலைவனாகிய திருவேங்கடநாதன். சேவித்தார்-வணங்கினார். திருமஞ்சனம் பணிந்து - நீராடி. மெய்புலர்த்தி-உடம்பின் ஈரத்தைத் துடைத்து.

பீதாம் பரந்தரித்துப் பீடிகையில் வீற்றிருந்து
வேதாந்த மெய்ப்பொருளை விண்ணவருக் - காதார 126

மான பரம்பொருளை யச்சுதனைச் சிந்தைசெய்து
மோனத் திருஞான முத்திரைக்கைத் - தானவனைக் 127

கும்பிட்டு நாமக் கொலுமுடித்த பின்னர்வைவே
லம்பிட்ட கண்ணா ரடைப்பைகட்டச் - சொம்புபெறு 128

மாணிக்கம் பச்சை வயிரத்தாற் செய்தரசர்
காணிக்கை வைத்த கடுக்கனணிந் - தாணிப்பொற் 129

றும்பிப் பதக்கமிட்டுச் சோதிமுத்துக் கோவையிட்டுக்
கம்பிக்குட் கோத்தரத்தினக் கண்டியிட்டுச் - சொம்புதரு 130

வாகுவல யந்திருத்தி வச்சிராங்கிச் சோடணிந்து
பாகுபெறும் ரத்தினக் கபாயணிந்து - மோகமுறு 131

முன்கை முதாரியிட்டு முற்றும்விர லாழியிட்டு
நன்குபெறு தங்கவரை ஞாணணிந்து - பொன்குலவு 132

தங்கச் சரிகைத் தட்டுரத்தினப் பாகணிந்து
துங்கக் கலிக்கித் துராயமைத்து - தொங்குமுத்துக் 133

---

126. பீதாம்பரம் - பொன்னாடை. பீடிகை - ஆசனம்.

127. அச்சுதன் - அழிவில்லாதவன்; திருமால். சிந்தை செய்து - தியானித்து. திருஞான முத்திரைக் கைத்தானவன் - நம்மாழ்வார்.

128. நாமக்கொலு - பெருமை பெற்ற அத்தாணியாகிய அரசிருக்கை. கொலுமுடித்த பின்னர் - அரசவைக் காரியங்களைக் கவனித்த பின். வைவேல் - கூரிய வேலாயுதம். அம்பிட்ட கண்ணார் - அம்பு போன்ற கண்களையுடைய பெண்கள். அடப்பை கட்ட - வெற்றிலை பாக்கு மடித்துத்தர. சொம்பு - அழகு.

129. மாணிக்கம் - செம்மணி. பச்சை - மரகத மணி. காணிக்கை வைத்தல் - கப்பமாக வைத்தல். ஆணிப்பொன் - மாற்றுயர்ந்த பொன்.

130. தும்பிப் பதக்கம் - வண்டின் வடிவாகச் செய்யப்பட்ட பதக்கம். சோதி - சுவாதி; ஒளி என்றுமாம். முத்துக் கோவை - முத்துவடம். கண்டி - கழுத்தணி வகை. சுவாதி நாளில் கருக்கொள்ளும் முத்து நன்முத்தாக விளையும் என்பர்.

131. வாகுவலையம் - தோளணி. சோடு - காற்கவசம்., காலணி. கபாய் - மெய்ச்சட்டை., நிலையங்கி.

132. முதாரி - முன்கை வளை. ஆழி - மோதிரம். அரைஞாண் - இடுப்பு அணி.

133. பாகு - பாகை; தலைபபாகை. துங்கம் - விளக்கம். துராய் - குல்லாய்த் தொங்கல்.

குச்சணிந்து சந்தனமுங் குங்குமமும் பன்னீரு
மெச்சுசவா தும்புழுகு மேற்றிமிர்ந்து செச்சைவரி 134

வன்னப் பவள மணிலா கடங்கடந்து
தென்னற்குஞ் சோழனுக்குஞ் சேரனுக்கு - மின்ன 135

மிவனே சரியென் றெடுத்தியம்ப வேக
குவநேர் மதமலைமேற் கொண்டு குவலயத்திற் 136

சந்திரருஞ் சூரியருஞ் தக்கவொரு கோடி
யுந்தியொரு போதி லுதித்ததென - வந்தபகல் 137

வத்தியுந்தீ வெட்டியுமிம் மாநிலமெல் லாம்பகற்போன்
மெத்த விகலி வெயிலெறிப்ப - வித்தாரப் 138

பஞ்சவன்னப் பாவாடை பக்கத்தில் வீசிவரக்
குஞ்சம் பலபேர்கைக் கொண்டுவர - ரஞ்சிதமாய் 139

மின்னார்கள் பக்கநின்று வெண்கவரி காலசைப்பத்
தன்னேரி லாவரசர் தாள்பரவத் - துன்னார் 140

அடப்பம் பிடித்துவர வம்பொற்கா ளாஞ்சி
யெடுப்பவர்கள் பின்னேவந் தேக - வடுத்தடுத்து 141

வந்தியர்க ளேத்தெடுப்ப வாம்பரியின் மீதுமத
சிந்துரத்தின் மீதுஞ் சிவிகையினும் - வந்த 142

---

134. குச்சு - சிறுதொங்கல். மெச்சு சவாது - புகழ்ந்து பேசப்படும் சவ்வாது. புழுகு - புனுகு என்னும் வாசனைப் பொருள்.

135. லாகடங்கள் - ஒரு வகை அணி. தென்னன்-பாண்டியன்.

136. சரி-ஒப்பு. எடுத்தியம்பவே ககுவம் நேர் எனப் பிரிக்க. ககுவம்-திசை; ஆகுபெயராய்த் திசையானையைக் குறித்தது. மதமலை - யானை. குவலயம்-பூமி.

137, உந்தி-மேலெழுந்து. போதில் - பொழுதில். பகல்-பகற்பொழுது.

138. வத்தி-தீப்பந்தம். தீவெட்டி-தீவட்டி; நீண்ட கழியில் பலவாகக் கோத்த பெரும்பந்தம். பகல்-சூரியன். இகலி - ஒன்றுடன் ஒன்று மாறுபட்டு. வெயிலெறிப்ப - ஒளிவீச. வித்தாரம்-விரிவு.

139. பஞ்சவன்னம் - ஐவகை நிறம்; பாவாடை - மேலெழ வீசும் ஒருவகை விருதுச் சீலை. குஞ்சம் - ஒருவகை விருதுச்சின்னம். ரஞ்சிதம் - இன்பம்.

140. மின்னார்கள் - பெண்கள்; வெண்கவரி - வெண்சாமரம்; கால்-காற்று. தன்னேரிலா அரசர்-தனக்குக் கீழ்ப்பட்ட குறுநில மன்னர்; தாள்பரவ-பாதத்தைத் துதிக்க.

141. துன்னார்-பகைவர். அடப்பம்-வெற்றிலை பாக்குப்பை; காளாஞ்சி-படிக்கம்.

142. வந்தியர்-புகழ்பாடுவோர்; ஏத்தெடுப்ப-புகழ, வாம்பரி-தாவிச்செல்லுகின்ற குதிரை; மதசிந்துரம்-யானை; சிவிகை-பல்லக்கு.

துரைமக்கள் சூழத் தொழுகுலத்தோர் சூழ்ந்தா
யிரமொய்த்துப் பல்லாண் டிசைப்பத் - திரையொத்துச் 143

சல்லரி பம்பை தடாரி தவில்முழவு
வல்லரி பீலிபண வம்படகஞ் - சொல்லு 144

முருடு துடித்தக்கை மொந்தை பதலை
மருவா னகந்தண்டி மம்பேர் - தருபணை 145

யாகுளி தாள மடற்றுந் துமியுடுக்கை
நாக சுரங்கெவுரி நால்வகையு - மேகமாய்ச் 146

சேகண்டி யும்புவன தேவேந்திர போகமெனப்
பூகண்ட மெங்கும் புடைத்தொலிப்ப – வாகண்டர் 147

சண்டப்பிர சண்டாயுத் தண்டாதோர்த் தண்டாமாற்
கண்டித் திகாந்தசெய காண்டீபா - மண்டலா 148

திக்காதி பாவச் சிரதேகா விபேகதீர
சக்கிராயு தாசுகுண சார்த்தீகா - வுக்கிராண 149

வீரா வுதாசூர விக்கிரமாற் காமதுர
சாரா வதியோக சாம்பிராட்சியா - வாராயும் 150

---

143. துரைமக்கள் - பிரபுக்கள். தொழுகுலத்தோர் – பிராமணர். ஆயிர மொய்த்து-ஆயிரக்கணக்கில் சூழ்ந்து. பல்லாண்டு-நீடுவாழ்க என்னும் வாழ்த்து. திரை - கடல்.

144-147. சல்லரி முதலிய பலவித இசைக்கருவிகள் ஒலி எழுப்பிய வகை பற்றிக் கூறுகின்றன. ஏகமாய்-ஒன்றாய்; ஒன்றுடன் ஒன்று பொருந்த; புவனம்-பூமி. தேவேந்திர போகம்-தேவேந்திரனை ஒத்த இன்பநிலை. பூகண்டம்-பூமிப் பரப்பு. ஆகண்டா-ஆக்கந்தரும் தெய்வம் போன்றவனே,

148. சண்டப் பிரசண்டா - மிகுந்த ஆடம்பரமுடையவனே; உத்தண்டா - இறுமாப்புள்ளவனே; கடுமையானவனே. தோர்த்தண்டா - புசபலமுடையவனே. காண்டீபா - அருச்சுனனை ஒத்தவனே. காண்டீபன் - அருச்சுனன்; மண்டலா–பல மண்டலங்களின் தலைவனே.

149. திக்காதிபா - திக்குகளை ஆள்பவனே. வச்சிரதேகா - உறுதியான உடம்பு உடையவனே. தீர - வலியோனே. சுகுணம்-நற்குணம். சக்கிராயுதா-திருமாலுக்கு நிகரானவனே. உக்கிராணம் - உக்கிரம். சாத்தீகா - சாத்துவிகா. சாந்த குணமுள்ளவனே.

150. விக்கிரமாற்கா-விக்கிரமாதித்தியன். மதுரம்-இனிமை. சாரா-சாரம் போன்றவனே.

விற்பன்ன நீதா விராடாகான நடநய
சற்பன்ன பாஷாவி தட்சணா - விப்புவிக்கு 151

வேந்தாவ சீர்திரு வேங்கடந ரேந்திரதி
காந்தா சுபமங் களமெனவே - சேர்ந்துவரு 152

கட்டியநின் றார்ப்பவொரு கைக்குஞ் சரமுதுகிற்
கொட்டும் ரணபே ரியெங்குங் கோஷிப்ப - நட்டுவரும் 153

பாடகருந் தாளப் பதியுமுக வீணைதித்தி
கூடும்ருத் திரவீணை கொனுகன்முறை - சோடாக 154

மத்தளமு மேகசுதி மாற்கத் தொடுமேள
ரத்திபெறக் கூட்டியயி ராணிநிக - ரொத்தநய 155

மின்னாரை யிட்டு வெகுபாவ ராகமொடு
தன்னேரிற் புட்பாஞ் சலிசெய்த - பின்னாகச் 156

சத்தஞ் சவுந்தருச் சக்கணி சாரி
யொத்த நிலக்கட் டொருபுறத்தில் - வித்தாரத் 157

தேசிகவி சேடசதுர்த் திண்டிகுச்ச ராதிமுறை
யோசை பெறுநடன மோர்புறத்தில் - ராசன்முன்னே 158

நின்று பரத நியம நலங்காட்டத்
துன்று சுரிகைமழுச் சூலம்வேல் - மின்றிகழுந் 159

---

151. விற்பன்னன்-நுண்ணறிவு படைத்தவன். விராடன்-முதலெழு வள்ளல்களுள் ஒருவன். நீதன்-நீதிவழி நடப்பவன். கானம்-இசை-நடம்-கூத்து. நயம்-அபிநயம். சற்பன்னன் - நல்லது மொழிவோன்; பாஷா விதட்சணன் - மொழித் தேர்ச்சி பெற்றவன். புவி-உலகம்.

152. சுபமங்களம்-நற்பேறுகள்; நன்மை பெருகுக என்றபடி.

153. கட்டியம்-புகழ் மொழி. கைக்குஞ்சரம்-யானை. ரணபேரி-யுத்த முரசு. கோஷிப்ப-ஒலிக்க. நட்டுவர்-நாட்டியகாரர்.

154. பாடகர்-இசைப் பாடகர். முகவீணை, ருத்திரவீணை-வீணை வகைகள்; சோடாக-இணையாக, பொருத்தமாக.

155. மத்தளம்-தோற்கருவி. ஏகசுதி-ஒற்றைச்சுரம். ரத்தி-ரக்தி, நாதசுரத்தில் பெரும்பாலும் பாடப்பெறும் ராக விஸ்தாரம். அயிராணி-இந்திராணி.

156. பாவராகம் - இசைக் கூறு. பாவ ராக தாளம் என்பர். இம்மூன்றும் சேர்ந்ததே பரதம் எனப்படும். புட்பாஞ்சலி - நாட்டியக் கைவகையுள் ஒன்று; இரண்டு கையும் வளைத்து ஒன்றாய்க் கூப்பும் நிலை.

157-158. நடனம் நிகழ்ந்த வகை உரைக்கப்படுகிறது.

159. பரத நியம-பரத நியமம்; பரத சாத்திரமுறை.

தண்ட மெழுமுசலஞ் சக்கரம் வில்லம்பு
கொண்ட முசுண்டி குலிசம்வாள் - விண்டொளிருந் 160

தட்டை கழுக்கடையு தண்டங் கணிச்சிகதை
தொட்டகர பத்திரங்கோல் தோமரநே - ரிட்டபல 161

வாயுத பாணியர்முன் னாக நடந்துசெல
மாயிரு ஞால மகிழ்ந்தேத்தச் - சேயிழையார் 162

சாந்தாற் றரைமெழுகிச் சந்தனத்தாற் கோலமிட்டுப்
பூந்தாரை நீராற் புதுக்கியே - மாந்தழையாற் 163

செம்பொன் மறுகிற் றிருத்தோ ரணநிரைத்துப்
பம்புநறைப் பூமலராற் பந்தரிட்டு - வம்பவிழுங் 164

கொத்துச் சரந்தூக்கிக் கும்ப குடமமைத்துச்
சுத்தக் குலைவாழை தூண்சேர்த்து - வைத்ததெற்கு 165

வீதியிலே தென்குருகை வேந்தன்வந்தான் சுப்பிரமண்ணிய
வாதிபதி பெற்றவழ கன்வந்தா-னீதியறி 166

விம்ப வதிரூப மீனாட்சி நாததுரை
தம்பிவந்தான் ராசதுரை சாமிவந்தான்-செம்பொன்மகு 167

---

160-162. ஆயுத பாணியாகச் சென்ற வீரர்கள் எடுத்துச் சென்ற பல்வேறு வகை ஆயுதங்கள் குறிக்கப்பட்டுள்ளன. முசலம்-உலக்கை. கரபத்திரம்-கைவாள். தோமரம் - கைவேல்; ஞாலம் - உலகம்; இங்கு உலகத்தாரைக் குறிக்கிறது. சேயிழையார்-பெண்கள்.

163. சாந்து - சாணம். சந்தனம் - சந்தனக்குழம்பு. மாந்தழை-மாவிலை.

164. மறுகு - தெரு. திரு - அழகு. தோரணம் - தெருவின் குறுக்காகக் கட்டும் அலங்காரத் தொங்கல். நிரைத்து - வரிசையாக அமைத்து. பம்பு - நிறைந்த. நறை - தேன். பந்தர் - பந்தல். வம்பு - மணம்.

165. கொத்துச்சரம் - பூங்கொத்துகளாலாகிய சரமாகிய தூக்குமாலை. கும்பகுடம் - கும்பகலசம்; நூல் சுற்றி நீருடன் மாங்கொத்து, தேங்காய், பூ முதலியவற்றுடன் தானியக் குவியலின் மேல் மந்திரம் கூறி வைக்கப்படுவது.

166-168. சின்னம் ஊதியது பற்றிக் குறிக்கப்படுகிறது. சின்னமாவது எக்காளம். அதிபதி - தலைவன்; விம்பம் - உருவம். ராச துரைசாமி - அரசனாகிய தலைவன். திருவேங்கட நரேந்திரன். இந்நூலின் பாட்டுடைத் தலைவன். இந்திரதாரு - இந்திர லோகத்தில் உள்ள கற்பக விருட்சம் போன்றவனாகிய வள்ளல்.

மேருநிக ரெங்கடிரு வேங்கடந ரேந்திர விந்திர
தாருவந்தா னென்றுசின்னந் தானூதச்-சேருமலர்க் 168

கள்ளவிழுங் கூந்தற் கனிமொழியார் பின்றொடர
வள்ளல் தெருவீதி வலம்வந்தா-னள்ளொளிவாட் 169

கண்ணுக்கு மையெழுதிக் கந்தரத்திற் பூணணிந்து
வண்ணச் சிமிண்முலையில் வாரணிந்து-தண்ணிறைந்த 170

மெய்யயர்ந்தார்மேனி வெதும்பினார் நாவுலர்ந்தார்
கையி லணிந்தவளை காணாரே-அய்யய்யோ 171

சேலை குலைந்தார் செயல்குலைந்தார் கூந்தலிற்பூ
மாலைகு லைந்தார் மதிகுலைந்தா-ராலைமத 172

வேளோவென் றார்மதன வேளுமிவன் காலழகுக்
காளோ விவனவனு மல்லவென்றார்-வேளப் 173

புரந்தரனோ வென்றார் புனிதனுக்குக் கண்ணா
யிரந்தொகையுண் டல்லவிவ னென்றார்-வரந்தருமச் 174

செந்திருமா லென்றார் திருமாலே யாமாகி
லுந்தியிலே பூவொன் றுளதென்றா-ருந்துமயிற் 175

கந்தனென்றார் தந்தையிரு கண்ணிலா வெய்யோன்சேய்க்
கிந்தத் திருவடிவ மேதென்றா-ரந்தத் 176

---

169. கள் - தேன். கனிமொழியார் - இன்பமொழி பேசும் பெண்கள். வீதிவலம் வருதல் - உலா வருதல்.

170. கந்தரம் - கழுத்து. பூண் - ஆபரணம். வண்ணச் சிமிழ் முலை - சிமிழ்போல் அழகிய முலை. வார் - முலைக்கச்சு.

171. அயர்ந்தார் - சோர்ந்தார். வெதும்புதல்-காம உணர்வால் வாடுதல். அய்யய்யோ - உணர்ச்சி வெளிப்பாட்டுச் சொல்.

172. சேலை குலைந்தார் - ஆடை நெகிழ்ந்து அவிழப் பெற்றார். மாலை குலைந்தார் - மாலை அவிழ்ந்து விழப்பெற்றார். மதி குலைந்தார் - அறிவு அழிந்தார். ஆலை - கரும்பு, மன்மதனின் வில்.

173. வேள், மதன வேள்-மன்மதன்; ஆளோ-ஆண் மகனோ.

174. புரந்தரன் - இந்திரன்; இந்திரன் ஆயிரம் கண்ணுடையவன் ஆதலால் இவன் இந்திரன் அல்லன் என விலக்குகின்றனர்.

175. உந்தி-கொப்பூழ்; பூ-தாமரைப்பூ; உந்தித்தாமரை காணப்படாமையால் இவன் திருமால் அல்லன் என விலக்கினர்.

176. கந்தன்-முருகன்; இரு கண்ணிலா வெய்யோன் - இரு கண் நிலா வெய்யோன் என்க. பெரிய கண்ணிலே நிலைபெற்ற நெருப்பையுடையவனான சிவபெருமான்; சேய்-புதல்வன்; திருவடிவம்-அழகிய வடிவம்.

அமரர். ஆர். திருமலை
GIFTED BY
R. TIRUMALAI LAS (Late)
MADRAS

தனபதியென் றாரத் தனபதியோர் கால்வி
தனபதிநேர் சொல்லிற் சரியோ-கனதைபெறு 177

சோதிமக மேருநிகர் சுப்பிரமண்ணிய ராசனரு
ளாதி பதியிவனே யாமென்றா - ராதியிலே 178

நன்ம துரைநகர்க்கு நாயகமாய் வீற்றிருந்த
தன்ம துரையிவனே தானென்றார் - முன்னமந்தக் 179

கோவியரைக் கூறைகொண்ட கோவென்றா லாசைகொண்ட
பாவியரைக் கூறைகொள்ளப் பற்றானோ - தாவுகடி 180

சங்கம் பறித்த சமத்தனுக்கு நாமணிந்த
சங்கம் பறிக்கத் தகவுண்டோ - பொங்கமரில் 181

மையல் கொடுத்தமணி வண்ணனன்றோ மாதருக்கு
மையல்கொ டுக்கும்வித்தை வாராதோ - பைய 182

நடவாதோ யானை நயனத்தா னாலுந்
தொடவாதோ வென்று தொடர்ந்த - மடவாரிற் 183

---

177. தனபதி-குபேரன்; விதனபதி-துன்பங்களுக்குத் தலைவன்; நேர்-ஒப்பு; கனதை-கௌரவம்.

178. சோதி மகமேரு - ஒளிமயமான மகா மேருமலை; ஆதிபதி - அதிபதி, தலைவன்; ஆதியில்-முற்காலத்தில்.

179. மதுரை நகர்க்கு நாயகமாய் வீற்றிருந்த தன்ம துரை-மதுரைமாநகரில் தலைமை பூண்டு விளங்கியிருந்த பாண்டிய மன்னன். முன்னம்-முன்னொரு காலத்தில்.

180. கோவியர் - இடைச்சியர்; கூறை - புடைவை; கோவியரைக் கூறை கொண்ட கோ-கண்ணன்; ஆசை கொண்ட பாவியர் என்றது அவன் மேல் மோக முற்ற மகளிரை; கூறைகொள்ள - ஆடைகளை உரிமையாகக் கொள்ள; பற்றானோ-தகுதியிலனோ; கோவியர்-சினக்கும் குணமுடையவர்; பாவியர்-குறிப்புடையவர்.

181. தாவு கடிசங்கம்-தப்பி ஓடும் கடியத்தக்க பகைவர் கூட்டம்; பறித்த-கைப்படுத்திய; சமத்தன்-சமர்த்தன், ஆற்றல் படைத்தவன்; நாம் அணிந்த சங்கம் என்றது-சங்கினாலாகிய வளையலை; தகவு - தகுதி, முறைமை; பொங்கமரில் - கிளர்ந்து எழுந்த போரில்.

182. மையல் - மயக்கம்: போரில் மையல் கொடுத்த மணிவண்ணன்-பாரதப் போரில் சங்கை முழக்கி எல்லாரையும் மயக்கமுறச் செய்தவனாகிய கண்ணன்; வித்தை - கலை; திருவேங்கடநாதனைக் கண்ணன் அவதாரமாகக் கட்டுரைக்கின்றார்; பைய - மெல்ல.

183. நயனத்தால் நாலும் தொடவாதோ - கண்ணினால் நாலு பக்கமும் பார்க்க என்ன வழக்கோ; மடவார் - பெண்கள்.

சந்திரனுக் குள்ளோர் தபன னுதித்ததெனச்
சிந்துரத்தா னெற்றித் திலகமிட்டு - விந்தைபெறு 184

காதிற்பொன் னோலையிட்டுக் கையிற் கடகமிட்டுச்
சாதிநெடு மூக்குத் தழுக்கிட்டு - மோதிரமுஞ் 185

சூடகமுந் தோள்வளையுஞ் சொன்னச் சிந்தாக்குமணிப்
பாடகமும் பாத பரிபுரமும் - பூடியும்பொன் 186

னொன்னைப்பூத் தொங்கலுமிட் டொல்குகொடிச் சிற்றிடைக்கு
வன்னப்பூம் பட்டு வரிந்துடுத்துக் - துன்னுகருங் 187

கூந்தல் சடைதிருத்திக் குப்பிவைத்துக் குச்சமிட்டுச்
சாந்து தடவிமலர்த் தாரணிந்து - மாந்தளிர்போல் 188

மெய்குழையத் தென்குருகை வேந்தன் பவனிகண்டு
கைதொழுவோம் வாருமென்று காதலா - லையன்முன்னே 189

பண்ணாட்டு மின்சொற் பனிமொழியா ரங்கங்கே
விண்ணாட் டரம்பையர்போல் மேவினார் - தண்ணார் 190

---

184. சந்திரன் மாதர் முகத்துக்கு உவமை; தபனன் - சூரியன்; திலகம்-நெற்றிப்பொட்டு; சந்திரனைப் போன்ற ஒளி படைத்த மாதர் முகத்தில் நெற்றியில் இடப்பட்ட செந்நிறமுள்ள சிந்தூரப் பொட்டு சூரியன் உதித்தது போலக் காட்சி தருகிறது; விந்தை-அழகு.

185. பொன்னோலை - காதணி; கடகம் - காப்பு; தழுக்கு - தளுக்கு, மூக்கணி; மோதிரம் - விரலணி.

186. சூடகம்-கைவளை; சொன்னச் சிந்தாக்கு-தங்க அட்டிகை; பாடகம்-மகளிர் காலணி, தண்டை; பரிபுரம் - சிலம்பு; பூடி-மகளிர் காதின் மேற்புறத்து அணியும் அணிவகை.

187. ஒன்னைப்பூத் தொங்கல்-மாதர் காதில் தொங்கவிடும் அணிவகை; ஒன்னப்பூ என்றும் வழங்கும். ஒங்குதல் - தளர்தல்; கொடிச் சிற்றிடை-பூங்கொடி போன்ற சிறிய இடை; துன்னு - நெருங்கிய.

188. குப்பி - சடையில் அணியும் சடைவில்லை; தலைமயிரோடு பின்னித் தொங்கவிடுவதால் இரண்டு மூன்று குச்சுக்களையுடைய சடைக்குச்சி என்னும் அணி என்றும் கொள்ளலாம்; குச்சம் - அலங்காரக் குஞ்சம்; சாந்து-மயிர்ச் சாந்து; மலர்த்தார் - மலர்மாலை; மாந்தளிர் - மாவின் இளந்தளிரிலை.

189. மெய் குழைய - உடம்பு வாட. தென்குருகை வேந்தன் - அழகிய குருகை நகர் அரசனாகிய திருவேங்கடநாதன். பவனி - வீதி உலா. காதலாய்-விருப்பமுடன். ஐயன் - தலைவன்.

190. பண் நாட்டும் இன்சொல் - இசை கலந்த இனிய சொல். பணிமொழியார் - குளிர்ந்த பேச்சுடைய மாதர். விண்ணாடு - தேவருலகம். அரம்பையர் - தெய்வ மகளிர்.

திருத்தா மரைமுகமுஞ் செம்பவள வாயு
மருத்தார் திளைக்குமணி மார்பும் - பெருத்தவரைப் 191
பாரத் திருப்புயமும் பங்கயத்தில் வண்டிருந்த
நேரொத் திடுங்கருணை நீள்விழியு - மாரத் 192
திருக்கந் தரமுந் திகழ்குவளைத் தாரு
மருக்கந்த வேள்போல் வடிவு - மிருக்குமெழில் 193
கண்டார் திகைத்தார் கலங்கினார் காமவெறி
கொண்டார்தம் முள்ளங் கொதித்தயர்ந்தா-ரண்டியண்டி 194
யோடினா ரோடி யுலைந்தா ருலர்ந்தாகம்
வாடினார் வாடி மருண்டாரே - நாடியெழில் 195
நாளொருத்தி மெல்ல நடந்து நடந்துவர
மேனொருத்தி மேனெஞ் சிரங்காதோ - மேனியெல்லாம் 196
புண்ணாச்சே நெஞ்சம் புழுங்கி யெனக்காறு
கண்ணாச்சே காமங் கடலாச்சே - கண்ணாலே 197

---

191. திரு - அழகு. மருத்தார் - மணம் மிக்க பூமாலை. மணி-அழகு. பெருத்தவரை-பருத்த மலை.

192. பாரத்திருப்புயம்-பருத்த அழகிய தோள்கள், முகத்தைத்தாமரைக்கும் கண்ணை வண்டுக்கும் உவமை கொள்கிறார். பங்கயம் - தாமரை. நீள்விழி - நீண்டகண். ஆரம் - முத்துமாலை.

193. ஆரம் - மாலை. கந்தரம் - கழுத்து. குவளைத்தார் - குவளை மாலை; திருவேங்கடநாதனுக்குரிய மாலை. மருக்கந்தவேள் - மலைதோறும் கோயில் கொண்டருளும் முருகப் பெருமான். மரு - மலை.

194. திருவேங்கடநாதனைக் கண்ட பெண்கள் திகைப்பும், கலக்கமும், அவர் காமவெறி கொண்டு மனம் வருந்தியதும் குறிப்பிட்டுள்ளார், காமவெறி-காமப்பைத்தியம், அதாவது அறிவை அழிக்கும் பெருங்காமம். அண்டி அண்டி - மிக நெருங்கி.

195. உலைந்தார் - வருந்தினார். மருண்டார் - மயங்கினார், திகைத்தார். நாடி - மிக விரும்பி.

196. மேனொருத்தி - மேலே முன்னால் வருகின்ற ஒருத்தி. மேன்-மேல், மேலிடத்தைச் சேர்ந்த ஒருத்தி எனினும் ஆம். மேனி - உடம்பு.

197. நெஞ்சம் புழுங்கி-மனம் வருந்தி; ஆறு கண்ணாச்சே - கண்ணீராகிய ஆறு கண்ணில் இடம் பெற்றது; ஆச்சே-ஆயிற்றே; ஆச்சே என்னும் பேச்சு வழக்கினைக் கவிஞர் பெண்பாலாக பேச்சில் இயல்பாய்ப் பயன்படுத்தியுள்ளார். காமம் கடலாச்சே-காமவுணர்வு கடலைப் போலப் பெரிதாயுள்ளது என்றபடி; 'கடலன்ன காமம் உழந்தும்' என்னும் திருவள்ளுவர் திருவாக்கை (குறள். 1137) நினைவூட்டுகிறது.

பாராயோ வென்னையிந்தப் பாடுகண்டாற் பெண்பழிதான்
வாராதோ மெத்த வருந்தினேன் - சேராயோ 198

தன்னந் தனியாச்சே சாருந் துணைகாணே
னின்னந் தனிமைக் கிரங்காயோ - வென்னென்று 199

சொல்வே னலைவாய்த் துரும்பானேன் கொண்டமயல்
வெல்வேனா னெந்த விதத்தாலே - தொல்லுலகிற் 200

பெண்ணுக் கிரங்காத பேருண்டோ வென்றரசர்
கண்ணுக்கு முன்னே நான் கட்டுரைத்தே-னண்ணலுமோர் 201

செங்கமலப் போதினின்று தேன்வழிந்தாற் போலமல
ரங்கமலக் கண்ணா லருளியே - மங்கலஞ்சேர் 202

மின்னார்குற் றேவல்செய்ய வெள்ளிமலை போலுயர்ந்த
பொன்னா ரரண்மனைக்குட் போயிருந்தா - னந்நேரங் 203

காமனு 'மென்மேலே கனரா சதமாக
நாம விளங்காற்றேர் நடத்தியே - யாமக் 204

---

198. பாடு-துன்பம்; பெண்பழி - பெண்களுக்குச் செய்த குற்றத்தால் நேர்ந்த பழிச்சொல்; மெத்த - மிகவும்.

199. சாரும் துணை-பற்றுக்கோடயுள்ள துணைவர்.

200. அலைவாய்த் துரும்பு - கடலலையில் அகப்பட்ட துரும்பு; அலை-கடல்; 'அலைவாய்த் துரும்பு' என்பது ஒரு பழமொழி. அலைவாய் என்பது திருச்செந்தூர்; குருகைக்கு அணித்தாய ஊர் என்பது தொனி. வெல்வேன்-வெற்றி பெறுவேன். எந்த விதத்தாலே நான் வெல்வேன் என்பது அவளுடைய ஏக்க உணர்வைக்காட்டும். தொல்லுலகு - பழமையான உலகம்.

201. பெண்ணுக்கிரங்காத பேருண்டோ என்பதும் பழமொழி போன்ற தொடரேயாம். 'பெண்ணென்றால் பேயும் இரங்கும்' என்பது ஒரு பழமொழி; கட்டுரைத்தேன்-எடுத்துச் சொன்னேன்; அண்ணல்-பெரியோன்.

202. தலைவன் கண்ணால் மகளிரைப் பார்த்தருளியது குறிக்கப்படுகிறது. அப்பார்வை செந்தாமரைப் பூவிலிருந்து தேன் சிந்தியது போல இருந்ததாம். செங்கமலப் போது-செந்தாமரை மலர்; அங்கமலக்கண் – அழகிய தாமரைப்பூப் போன்ற கண்.

203. மின்னார்-பெண்கள்; குற்றேவல்-ஏவிய சிறுபணிகள்; வெள்ளிமலை கயிலாயம்; பொன்னார் அரண்மனை-செல்வம் நிரம்பிய அரண்மனை.

204. காமன்-மன்மதன்; ராசதமாக - இரசோ குணம் மிகுமாறு; இரசோ குணம் முக்குணத்தில் இடைப்பட்டது. சாத்துவிகம், இரசோகுணம், தாமச குணம், எனக் குணம் மூவகைப்படுமென்பர். நாமம் - பெருமை; இளங் காற்றேர் - தென்றலாகிய தேர்; யாமம் - இரவுப் பொழுது; மென்மேலே எனப் பிரித்து மேலும் மேலும் எனலும் ஆம்.

கரும்பையெல்லாம் வில்லாக்கிக் காமருபூஞ் சோலைச்
சுரும்பையெல்லா நாணாய்த் தொடுத்தங்-கரும்பையெல்லா 205

மம்பாக்கி யென்னை யலங்கோல மாக்கியிந்த
வம்பாக்கி விட்டதென்ன மட்டுண்டோ - வம்பரத்தி 206

லூருமதி யாதனையா லோகோ நலிந்தேனே
யூருமதி யாதனையா லொல்கினே - னேருமதன் 207

காளத்தைக் கேட்டுக் கலங்கினே னென்றமரக்
காளத்தை யித்துயரங் காண்பாரோ - வேளத்தை 208

நத்தமென்று சொல்வார் நலமன்று மாதருக்க
நத்தமென்று சொல்வதுவே ஞாயமன்றோ - தத்து 209

மலையக்கா லாலே வருந்தி யெனதுள்ள
மலையக்கா லங்கருது வாரார் - சிலைமதவேள் 210

சக்கரப்பே ரிக்குமொழித் தையற் பெரும்படைக்குஞ்
சக்கரப் பேரிக்குந் தளர்ந்தேனே - யிக்குவரிக் 211

---

205. கரும்பு - மன்மதனின் வில்; காமருபூஞ்சோலை - அழகிய நந்தவனம்; சுரும்பு - வண்டு; நாண் - வில்லை வளைத்துப் பூட்டுவதற்குரிய கயிறு; மன்மதனுடைய வில்லின் நாண் வண்டுகளே. அரும்பை - பூவரும்பை; மன்மதனின் அம்புகள் பூவரும்புகளே; தாமரை மலர், அசோக மலர், மாமலர், முல்லை மலர், கருங்குவளை மலர் என்னும் ஐந்தும் மன்மதனுடைய அம்புகளாகும். இதனால் மன்மதனுக்கு 'ஐங்கணைக் கிழவன்' என்னும் ஒரு பெயருமுண்டு.

206. அலங்கோலமாக்கி - சீர்கேடாக்கி, விரகத்தால் வாடி அழகிழக்கச் செய்து; வம்பாக்கிவிட்டது - பழிச்சொல்லுக்கு இடமாக்கிவிட்டது; மட்டு - அளவு; அம்பரம் - ஆகாயம்.

207. மதி - சந்திரன்; யாதனை - வேதனை: நலிந்தேன் - வருந்தினேன்; ஒல்கினேன் - தளர்ந்தேன்; ஊரும் - ஊரில் உள்ளவர்கள்; மதியாதனையால்- மதிக்காமையால்.

208. மதன் காளம் - மன்மதனுடைய எக்காளம், குயிலின் குரல்; என் தமர் அக்காள் அத்தை என்க. என் சுற்றத்தாராகிய தமக்கையும் மாமியும் என்றபடி. வேளத்தை - வாழ்விடத்தை.

209. நத்தம் - குடியிருப்பிடம்; அனத்தம் - துன்பிடம், தீங்கு பயப்பது; ஞாயம் - நியாயம், முறை; தத்து - மெல்ல மெல்லத் தவழ்ந்து செல்லுகிற.

210. மலயக்கால்-தென்றல் காற்று; உள்ளம் - மனம்; மலையக் காலம் கருதுவார் ஆர் என்க. சிலைமதவேள் - கரும்பு வில்லையுடைய மன்மதன்.

211. சங்கரப்பேர் இக்குமொழித்தையல் - மிகவும் இனிக்கும் கரும்புபோல் இனிய சொல்லுடைய பெண்; மன்மதனுடைய பெருஞ்சேனை மகளிர்களே. சக்கரப்பேரி-வட்ட வடிவமான முரசு, கடலோசை; மன்மதனுடைய முரசு கடல்; இக்கு-கரும்பு.

கோதண்டம் வாங்கிக் குறுகினா னாணிந்தக்
கோதண்ட மேனி குறுகினேன் - சூதப்பூ 212

வம்பெடுத்த போதி லலக்கணுற்றேன் மட்டலர்க்கண்
ணம்பெடுத்த தந்தோவோ ராறன்றோ - வம்புத் 213

தவளக் கணைதெரிந்தான் சங்கேத மின்னார்
தவளக் கணையாற் சலித்தேன்-றுவளும் 214

சோகம் படைத்தவிறற் றூணிவிட்டு வாங்கவே
சோகம் படைத்தேன் றுடித்தேனே-மோகப் 215

பதுமக் கணையும் படையுங் கொள்ளாதென்
பதுமக் கணைபடுத்தும் பாடே-மதுமலர்ப்பூங் 216

காவிக் கணைதொடுத்தாற் காப்பாரா ரீங்குநமக்
காவிக் கணையொருவர் காணேனே-தாவிவரு 217

---

212. இக்குவரிக் கோதண்டம் - கரும்பாகிய கட்டமைந்த வில்; வாங்கி - வளைத்து: குறுகினான்-அணுகினான்; கோது அண்ட மேனி-உடம்பில் இத்தகைய மெலிவாகிய குற்றம் பொருந்த; குறுகினேன்-இளைத்தேன்; சூதப்பூ-மாம்பூ.

213. சூதப்பூ அம்பு - மாம்பூ ஆகிய அம்பு; மாம்பூ மன்மதனின் ஐந்து அம்புகளில் ஒன்று. 205 ஆம் கண்ணி உரை பார்க்க. அலக்கணுற்றேன்-துன்புற்றேன்; மட்டலர்க்கண் - தேன் பொதுளிய நீல மலர் போன்ற கண்; அம்பு-நீர்; அம்பு எடுத்தது-கண்ணீரைப் பெருக்கியது; ஆறன்றோ-கண்ணீர் ஆறாய் இடையறாது பெருகியது என்றபடி; வம்பு-வாசனை.

214. தவளக்கணை-வெண்ணிறமான அம்பு; அதாவது முல்லைப் பூவரும்பு; கணை-அம்பு; சங்கேதம்-குறி, இலக்கு; தவள் அக்கு அணை என்க. அக்கு-எட்டி; அணை-படுக்கை; சலித்தேன்-மனச் சஞ்சலப்பட்டேன்; துவளும் - மென்மையான; துவளுமசோகம் என அடுத்த கண்ணியோடு சேர்த்துப்படிக்க.

215. துவளும் அசோகம் - மென்மையான அசோக மலர்; விறல் தூணி - வெற்றி பொருந்திய அம்பறாத் தூணி, அம்புக்கூடு; தூணி விட்டு வாங்க - அம்புக் கூட்டிலிருந்து எடுக்க; சோகம் படைத்தேன் - துன்பமடைந்தேன்; துடித்தேன் - துன்பத்தால் தளர்ந்து நடுங்கினேன்.

216. பதுமக்கணை-தாமரை மலரம்பு; இது மோகத்தை விளைப்பது. ஆதலினால் மோகப் பதுமக்கணை என்கிறார். படையுங் கொள்ளாது - கண்ணுறங்க வொட்டாது; படை - கண்படை, துயில்: மது - தேன்.

217. காவிக்கணை-கருங்குவளை மலரம்பு; காப்பார்ஆர்-காப்பாற்றும் தன்மையர் யார்? மன்மதனின் பஞ்ச பாணங்களால் நேரும் அவத்தைகள் சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம் என்பனவாம். இவை முறையே தாமரை, அசோகு, மா, முல்லை, குவளை மலர் அம்புகளால் நேரும்; குவளை மலரம்பு மரணாவத்தை தருவது ஆதலின், காவிக்கணை தொடுத்தால் காப்பார்ஆர் என்கிறார்; ஆவிக்கு அணை ஒருவர் காணேனே என்க; ஆவிக்கு அணை - உயிருக்கு உற்ற துணை; தாவி - தாவிக் குதித்து ஓடிவருகிற.

தத்தைப் பரிநடத்தித் தாக்கும்போ திங்குவந்த
தத்தை சிறிதுசொல்லத் தக்கதோ-வெத்தையென்று 218

சொல்லுவேன் காமத் துரோகிசெய்த மோசமெங்கே
செல்லுவேன் வேறே செயல்காணே-னல்லெல்லாம் 219

நொந்துநொந்து திக்கெல்லா நோக்கினே னெட்டுயிர்த்தே
னுந்துமலர் சோலையங்கே யொன்றுகண்டே-னந்தமலர்ச் 220

சோலையிலே சென்று தொடுத்தமலர்ப் பந்தரிட்டு
மாலையிலே கோத்த மலர்ப்படுத்தே-யாலைமத 221

வேளாலே வந்த விரகாக் கினியுமவன்
கேளாலே வந்த குறைபாடு-மீளாத 222

காமத்தை யுங்கடந்து காண்போமென் றேவிரித்த
பூமெத்தை மீதேநான் போயிருந்தேன்-பூமெத்தை 223

யெல்லாங் கருகிமுன்னி லெண்மடங்கு சூடுகண்ட
தல்லாம லின்ப மதிலுண்டோ-நல்லார் 224

---

218. தத்தை - கிளி; தத்தைப்பரி-கிளியாகிய குதிரை; தத்து - ஆபத்து; துன்பம், எத்தை - எதை.

219. காமத்துரோகி செய்த மோசம் - காமத்திற்கே கைகொடுத்து உதவாது போனமையால் உலாத் தலைவனைக் காமத்துரோகி செய்த மோசம் என்கிறாள்; எங்கே செல்லுவேன், வேறு செயல் காணேன் என்னும் உரைகள் காதல் கொண்ட பெண்ணின் ஆதரவற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றன; அல்-இரவு.

220. நொந்து நொந்து - மிகவருந்தி; திக்கு-எட்டுத் திக்கு; திக்கெல்லாம்-எல்லாத்திசைகளிலும்; நெட்டுயிர்த்தேன்-பெருமூச்சு விட்டேன்: உந்து மலர் - மணம் பரப்பும் மலர்; மலர்ச்சோலை - நந்தவனம்.

221. மலர்ப் பந்தரிட்டு - மலர்ப்பந்தர் அமைத்து; மாலை - மாலைப் பொழுது; கோத்த மலர் - படுக்கையில் பரப்பிய மலர்; ஆலை மதவேள் - மன்மதன்; ஆலை - இங்கே மன்மதனின் கரும்புவில்லைக் குறித்தது.

222. விரகாக்கினி - பிரிவினால் உண்டாகிய வேதனையால் வந்த காம நெருப்பு; கோள் - கொள்கை; குற்றம் எனினும் ஆம்; குறைபாடு - குறைவு; மீளாத - மீண்டுவர இயலாத; தப்பமுடியாத.

223 கடந்து காண்போம் - எதிர் நின்று அழித்து வென்று காண்போம்; பூமெத்தை - மலர்ச்சோலையிலே அமைத்த பூம்பந்தரின் கீழ் இடம் பெற்ற படுக்கை.

224. தலைவிமேல் கனன்று கொண்டிருந்த காமவெப்பத்தால் மலர்ப் படுக்கை மலர்களும் கருகிப்போயின. முன்னை விடவும் எட்டுப் பங்கு வெப்பம் தோன்றியதாம். நல்லார் - நாலடியார் நூலை வழங்கிய நல்லார். நல்லார் என்றது இங்கே சமண முனிவர்களைக் குறித்த படியாம்.

குளிப்பினுங் காமஞ் சுடுமே குன்றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடுமென் - றளித்தவுரை 225

தப்பாதே யந்தத் தளிரணைமே லேகிடந்து
வெப்பாலே மெத்த வெதும்பினே - னப்போதி 226

லேதோ தெரியா திருந்துயர்போய் நன்மைவரும்
போதோ விருகண் பொருந்தினே - னாதரவாய் 227

வந்தானிக் கோலம் வருந்தி யெனக்காசை
தந்தான்கை யாலேமுந் தானைதொட்டான் - விந்தைச் 228

சயனத் திருத்தித் தழுவணையிற் சேர்த்து
நயனத்தா னோக்கி நயமாய்த் - தயவாகக் 229

கையா லணைத்தணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டு
மெய்யாரச் சேர்த்திறுக்கி மென்முலையைப் - பையப் 230

---

225. இக் கண்ணியில் கவிஞர் நாலடியாரில் வரும் 90 ஆம் பாடலின் இறுதி இரண்டு அடிகளை அப்படியே எடுத்தாண்டுள்ளார்.

> 'ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு
> நீருள் குளித்தும் உயலாகும் - நீருள்
> குளிப்பினும் காமம் சுடுமே குன்றேறி
> ஒளிப்பினும் காமம் சுடும்'
>
> —9. பிறர்மனை நயவாமை— 10

காமத்தீயானது நீரினுள்ளே மூழ்கிக் குளித்தாலும் மலை மீது ஏறிச் சோலைகளினிடையே மறைந்து கொண்டாலும் வெதுப்பும் என்பதாம்.

226. தப்பாது - தவறாது. தளிரணை - தளிர்களோடு கூடிய பூம்படுக்கை. வெப்பு-காமநோயாகிய வெம்மை. மெத்த-மிகவும். வெதும்பினேன்-வாடினேன்.

227. கண் பொருந்தினேன் - தூங்கினேன்; தூங்கியது நன்மை வருவதற்குரிய காலம் போலும் என்கிறார். ஏனெனில் அவள் தலைவனைக் கூடி மகிழ்வதாகக் கனவு காண்கிறாள். ஆதரவாய் - அன்புடன்.

228. ஆசை தந்தான் – காம இச்சையை எழுப்பினான். இது முதல் 242 ஆம் கண்ணியளவும் தலைவன் அவளோடு கூடிச் செய்த கலவித் தொழிலை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. முந்தானை - முன்தானை, புடவைத் தலைப்பு; விந்தை - அழகு.

229. சயனம் - படுக்கை; தலைவியை முதலில் இருக்கவைத்துப் பின் அப்படுக்கையில் கிடக்கவைத்தான். நயனம் - கண்; நயமாய் - விருப்புடனே; தயவாக - அன்புடனே.

230. தலைவன் அணைந்த விதமும் முத்தமிட்டு உடன் கலந்த வகையும் பேசுகிறாள்.

பிடித்து நெருடிப் பிசைந்திதழை மெல்லக்
கடித்துச் சுவைத்துநயங் காட்டி - யடித்தொடைமார் 231

புச்சி பிடரிமுலை யோங்குவிலாப் பக்கமெல்லா
முச்சிதமாய் மெல்லநக மூன்றியே - மெச்சு 232

நிதம்பந் தடவியந்த நீணிதம்பத் துள்ளே
விதம்பெறவே நீண்ட விரலா - லிதந்தரவே 233

சுற்றி நடுமணியைத் தொட்டசைத்தா னப்பொழுது
வெற்றி தருமதனா வேசமாய்ப் - பற்றி 234

யிறுக்கினேன் மேற்கொண் டெழும்பினேன் காமம்
பொறுக்குமோ தாமதிக்கப் போமோ - சுறுக்கிலே 235

கால்பிணைந்து மேலிருந்து காமமிஞ்சு போதுபந்து
போலெழும்பி வேகம்வந்த போதிரண்டு - காலணிந்த 236

நூபுரங் கலீரெனும்பொன் னூல்களும் பளீரெனும்பிர
தாபசெங்கை யோசைகொண்ட தானடங்க - ளோபதிந்த 237

---

231- நெருடி - தடவி; இதழ் - உதடு; இதழை மெல்லக் கடித்துச் சுவைத்தமை - அதரபானம் செய்தமை கூறியபடியாம். நயம் - இன்பம்.

‘ எனது அடங்கஇனி வளவ துங்கன்அருள்
எனமகிழ்ந்து இரவு கனவிடைத்
தன்தடங்கள் மிசைநகம் நடந்தகுறி
தடவுவீர் கடைகள் திறமினோ! ’
‘ மதுரமான மொழிபதற, வாள்விழி
சிவப்ப வாயிதழ் வெளிப்பவே
அதரபானம் மதுபானமாக அறிவு
அழியும் மாதர்கடை திறமினோ! ’

எனவரும் கலிங்கத்துப்பரணிக் கடைதிறப்புப் பாடல்களின் (26, 54) கருத்தமைதி மொழிந்துள்ளமை காணலாம்.

232. உச்சிதமாய் - உயர்வாய்; தலைவியின் உடலுறுப்புகளில் நகக்குறி செய்த வகைமையுரைக்கிறது. மெச்சுதல் - புகழ்தல்,

233. நிதம்பம்-அல்குல்; பெண்குறி. இதம்-இன்பம்; நடுமணி-பெண்குறியின் ஓர் உறுப்பு; மதன்-மன்மதன்; மதனாவேசம்-காமவெழுச்சி மிகுகை.

234. மதனாவேசத்தால் தலைவி செயல்கள் அடுத்துக் கூறப்பட்டுள்ளன.

235-242. இக் கண்ணிகளில் இருவரும் பிணைந்து ஒருவர்க்கொருவர் ஈடுகொடுத்து ஒத்தினங்கிக் கலவிசெய்த விதங்கள் கூறப்பட்டுள்ளன; தாமதிக்கப் போமோ-காலம் தாழ்க்க இயலுமோ; சுறுக்கிலே-விரைவாக.

236. மிஞ்சுதல் - அதிகரித்தல்,

237. நூபுரம்-சிலம்பு: பொன்னூல்கள்-பொன்னாபரணங்கள்; கலீரெனல்-ஒலிக்குறிப்பு; பளீரெனல்-ஒளிக்குறிப்பு.

காடைவண்டு கோழிசங்கு காணுமென்பு ளோசைபொங்க
வாடைகொண்ட வோதிசிந்த வாணகங்க - ளூடழுந்த 238

மேனியெங்கும் வேர்வரும்ப வேலெனுங்கண் ணோகலங்க
வானனஞ்ச ரீரமொன்ற தாய்நெருங்க - நானமுஞ்ச 239

வாதுமணம் வீசவிரு வார்குழைக ளோவசைய
வோதுமித ழுவெளிற வோசைபெற - மோதியகை 240

வால்வளைக ளோசிதற வாடுமிடை யோபதற
மாலைமுடி பூவுதிர மாறியளி - யோலமிட 241

வுச்சித நயக்கலவி யொத்தொருவ ருக்கொருவர்
மெச்சிட மதச்சலதி மெத்தையுமி – கச்சளச 242

---

238. கலவியின்போது காடை, வண்டு, கோழி, சங்கு, எண்புள் ஆகியவை செய்யும் ஒலி போன்ற ஓசை மேலெழும். வாடை-வாசனை; ஓதிசிந்த-கூந்தல் அவிழ்ந்து சிதற; வாணகங்கள்-வாள்நகங்கள்; வாள்-கூர்மை; அழுந்த-பதிய.

239. வேர்வு-வேர்வை; அரும்ப-தோன்ற; வேலெனுங் கண்-வேல் போன்ற கூரிய கண்கள்; கண்ணோகலங்க-கண் கலங்குதலாவது கலவி காரணமாகச் சிவத்தலாம்; ஆனனஞ்சரீரம்-முகமும் உடம்பும் ஒன்றென்னும் படியாய்க் கூடிக் கிடந்தனர் என்பதாம்.

'வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு' —திருக்குறள்-1108

என்னும் திருக்குறள் புணர்ச்சியினால் மகிழ்ந்த தலைவனின் உரையாகும். முயக்கத்தின் போது இருவராயில்லை; ஒருவராகவே ஆயினர் என்பதனை இக்குறள் குறிப்பிடுகிறது. நானம்-வாசனைப் பண்டமாகிய கத்தூரி, புழுது ஆகியவற்றைக் குறிக்கும். இக்கண்ணி இறுதியில் வரும் சகரத்தை அடுத்துவரும் கண்ணியுடன் சேர்த்துச் சவாதும் எனக்கூட்டுக; சவாது-சவ்வாது: ஒருவகைப் பூனையிலிருந்து கொள்ளப்படும் வாசனைத் திரவியம்.

'தூமப் பணிகள்ஒன் றித் தோய்ந்தாலென ஒருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து - நாமம்
தொலையாத இன்பமெலாம் துன்னினார் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று,'

எனச் சிலப்பதிகாரம் மனையறம் படுத்த காதையின் ஈற்றில் வரும் வெண்பாவும் கலவியின்பம் துய்த்த வகையினைக் கட்டுரைக்கும்.

240. குழைகள்-குண்டலங்கள், காதணி; இதழே வெளிற-உதடு வெளுக்க.

241. வால்வளைகள்-வெள்ளிய சங்கு வளையல்கள். சிதற - கை மோதியதனால் உடைந்து சிதற. வாடுமிடை-சுருங்கிய இடுப்பு. பதற துடிக்க. மாலை முடிபூ - மாலையாக வைத்துக் கட்டப்பட்ட பூ; அளி - வண்டுகள். ஓலமிட - ரீங்காரம் செய்ய: அணி மாறி ஓலமிடுதலாவது, இருவர் மாலைகளிலும் வந்து மாறி மாறி ஒலி செய்தது என்பதாம்.

242. உச்சித நயக்கலவி - உயர்ந்த இன்பம் அளிக்கும் சேர்க்கை; மெச்சிட – புகழ. மதச்சலதி - மதவெள்ளம். மெத்தையும் சளசளத்து நனைய என வரும் கண்ணியுடன் இயையும்; சள சளத்தல் மதசலம் பாய்ந்தபோது எழுந்த ஒலிக் குறிப்பு.

ளத்துநனை யப்பரிம ளக்கமல புட்பமென
மெத்தவும ணக்கமித மித்தகல - வித்தொழிலே 243

செய்தான் மகிழ்ந்தெனது தேகமெல்லாம் பூரித்தேன்
மெய்தா னெனக்கண் விழித்தேனே - அய்யோ 244

கனவென் றறியேன் கலங்கினேன் சிந்தை
நினைவு மிகமயங்கி னேனே - முனமே 245

'நனவென வொன்றில்லை யாயிற் கனவினாற்
காதலர் நீங்கலர் மன்'னென் - றனுதினமு 246

மாணிலே மிக்கா னணைந்த சுகத்தைவிட்டு
வீணிலே கண்ணை விழித்தேனே - நாணி 247

யிருந்தேன் வருந்தினே னெய்த்தே னிளைத்தேன்
கருந்தேன்வண் டேயுனைநான் கண்டேன் - பெருந்திருவு 248

---

243. பரிமளம் - மிகுமணம். கமலபுட்பம் - தாமரைப் பூ. மிதமித்த கலவித் தொழில் - அளவோடு அமைந்த புணர்ச்சிச் செயல்கள்.

244. பூரித்தேன்-களிப்புற்றேன். மெய் - உண்மை, அய்யோ - ஏமாற்றத் தால் வந்த உணர்ச்சிப் பெருக்கைக் காட்டும் சொல்.

245. தான் அனுபவித்த கலவி இன்பம் உண்மையன்று. கனவுதான் என்பது அவளுக்கு விளங்கியது. முனமே-முன்னமே.

246. 'நனவென ஒன்றில்லை யாயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன்'

என்னும் திருக்குறளை (1216) இக்கவிஞர் அப்படியே எடுத்தமைத்துள்ளார். இக்குறள் கனவு நிலையுரைத்தல் என்னும் அதிகாரத்தின் ஆறாவது பாடலாகும். "நனவு என்று சொல்லப்படுகின்ற ஒரு பாவி இல்லையாயின் கனவின்கண் வந்து கூடிய காதலர் என்னைப் பிரியார்; ஒன்று என்பது அதன் கொடுமையினை விளக்கிநின்றது. அஃது இடையே புகுந்து கனவைப் போக்கி, அவரைப் பிரிவித்தது என்பது பட நின்றமையின், 'மன்' ஒழியிசைக் கண் வந்தது, கனவிற் பெற்று ஆற்றுகின்றமை கூறியவாறு" என்பது இக்குறளுக்குப் பரிமேலழகர் தரும் விளக்கம். அனுதினமும் - எந்நாளும்.

247. மாணிலே மிக்கான் - பெருமையில் சிறந்தோனாகிய திருவேங்கட நாதன். கண்ணை விழித்ததனால் கனவுநிலை மாறி, அதில் அனுபவித்திருந்த இன்பசுகமும் நீங்கியது என்பதாம். நாணி-வெட்கமுற்று.

248. எய்தேனிளைத்தேன்-மிகவும் மெலிவுற்றேன். எய்த்தல் மனத்தின் சோர்வையும் இளைத்தல் உடல்மெலிவையும் குறித்ததாகக் கொள்ளலாம். உள்ளத்தாலும் உடலாலும் வருத்தமுற்றேன் என்பதாம். இச்சமயத்தில் சோலையில் உள்ள வண்டை அவள் காண்கிறாள். அந்த வண்டையே தான் விரும்பிய தலைவனிடம் தூதனுப்பும் நோக்கத்தோடு அந்த வண்டை நோக்கித் தலைவி பேசத்தொடங்குகிறாள். கருந்தேன் வண்டு - கரிய நிறமுடைய தேன் உண்ணும் வண்டு. பெருந்திரு - பெருஞ்செல்வம்.

மாதாவுந் தந்தையுநீ வந்தா யெனதுயிருக்
காதாரம் வேறேநீ யல்லதுண்டோ - போதாதோ 249

வுன்பெருமை யிந்த வுலகமெல்லாம் மன்மதவேள்
தன்பெருமை யுன்பெருமை தானன்றோ - வின்பமத 250

னாக மிழந்தா னருவானான் முன்னிருந்த
வேக மிழந்தான் வெதும்பினான் - றேகமெல்லாம் 251

பேணா தவசமுற்றும் பின்னும்வெற்றி கொள்வதுன்னை
நாணாகப் பெற்ற நலமன்றோ - காணேமோ 252

வம்பா யலர்க்கிடமாய் மட்டுப்பட் டுள்ளடங்கு
மம்பாலே வெற்றி யறியோமோ - வெம்பிமனங் 253

கல்லனங்க வேடகுக் கணையாக வேமுளைத்து
வில்லங்கப் பட்டகன்னல் வெல்லுமோ - மெல்லத் 254

---

249. மாதா - தாய். ஆதாரம் - பற்றுக்கோடு, பிடிப்பு; ஒருவரைப் போற்றிப் புகழும்போது நீயே எனக்குத் தாய் தந்தையாய் இருக்கிறாய் என்பது அவனே புகலிடம் என்று அறிவித்தபடியாம். கண்ணி 108-ல் திருவேங்கடநாதனுக்குக் கீழ்ப்பட்ட மன்னர், 'தாயும் நீ' என்று போற்றுவதாக உள்ளமையும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது; போதாதோ - அமையாதோ, தாய்தந்தையாய் நீ வணங்குவது ஒன்றே உன் பெருமைக்குப் போதுமானது.

250. மன்மதவேளின் பெருமை எல்லாம் வண்டினால் ஏற்பட்ட பெருமையேயாம். வண்டு மன்மதனுடைய வில்லின் நாணாக உள்ளமை ஈண்டுக் கருதத்தகும். இன்பமதான் - இன்பத்தை மிகுவிப்பதற்குக் காரணமான மன்மதன்.

251. ஆகம்-உடம்பு. சிவபெருமானின் நெற்றிக்கண் நெருப்பினால் மன்மதன் எரிந்து சாம்பலாயினமையினால் உடம்பில்லாதவன் ஆனான். ஆயினும் அவன் உருவமற்ற நிலையிலும் அருவமாய் உலவுகிறான். வேகம்-எழுச்சி. வெதும்பினான்-சிறிது வாட்டமுற்றான்.

252. பேணாது - போற்றாது. அவசமுற்றும்-தன் வசம் இழந்தும். வெற்றி கொள்வது-காமமூட்டுவதில் அவன் வெற்றி பெறுவது நலம்-மேன்மை.

253. வம்பாய்-மந்தணமான வம்புப் பேச்சு. அலர்-பழிமொழி. அம்பல்-அலர் என்னும் முன்னை வழக்கும் கருதுக. மட்டுப்பட்டு உள்ளடங்கும் அம்பு-தேன் உன்ளடக்கமான மலராகிய அம்பு. வெம்பி - சினந்து. மனம் கல்லான அனங்கவேள் என அடுத்துவரும் கண்ணியுடன் சேர்த்துக் கூட்டுக.

254. மணம் கல்லாமையினால் இரக்கமின்றிக் காதலர் மேல் அம்பு எய்கிறான் என்பதாம். அனங்கவேள் - மன்மதன். களையாக - வளைந்த வில்லாவதற்காக. வில்லங்கப்பட்டது-தடைப்பட்டது. கன்னல் - கரும்பு.

திரிக்கொளுத்திப் பார்த்தாற் றெரியாத யானை
வரிச்சிலைவேள் போர்க்கு வலுவோ - முருக்கிப் 255

பொரும்போது காற்றேராய்ப் போனபோக் கல்லாற்
றிரும்பாத தேருந் திறமோ - வருங்கா 256

லெலிப்பகை யென்றாலு மெதிராக் குதிரை
கெலிக்குமத வேளமருக் கீடோ - கெலிக்குமத 257

னாதிக்க வாழ்வுமவ னாண்மையும்போர் வீரமுநீ
சாதித்த வல்லமையே தான்கண்டா - யோதுசிலை 258

நாணாக வந்துலகி னாரியர்க்கு மங்கலநாண்
பூணாகச் செய்ததுமுன் புண்ணியமே - நாணாக 259

வண்டேநீ வாராயேல் மாரனெங்கே வில்லெங்கே
கொண்ட கணைபறக்குங் கொள்கையெங்கே - கொண்டமயற் 260

காமமெங்கே யாண்பெண் கலப்பதெங்கே கெற்பமெங்கே
நாம மனுப்பிறக்கு நாடெங்கே - யாமந்தச் 261

---

255. திரிக்கொளுத்தி - விளக்குத்திரியினை ஏற்றி. திரிக்கொளுத்திப் பார்த்தாலும் புலப்படாத யானை என்றது இருள். இருளே மன்மதனுக்குரிய யானை. வலுவோ - பலமுடையதாகுமோ? முருக்கி - நெருங்கி, சினந்து.

256. பொரும்போது - போர் செய்யும் பொழுது. கால்தேர் - தென்றலாகிய தேர். மன்மதன் தேராகிய தென்றல் ஒரே போக்கில் போகுமேயன்றித் திரும்பி வந்து உதவும் தன்மையதன்று என்றபடி.

257. எலிப்பகை - எலிக்குப்பகையாகிய பூனை. எதிராக்குதிரை - கிளி. மன்மதனது குதிரை. பூனைக்கு அஞ்சுவது கிளியின் இயல்பு. கெலிக்கும்-வெல்லும். மதவேள் செருக்குக் கொண்ட மன்மதன். ஈடோ - இணையாக நிற்குமோ?

258. ஆதிக்கவாழ்வு - மேம்பட்ட வாழ்க்கை. ஆண்மை - ஆளும்தன்மை. போர்வீரம்-போர்வலிமை. நீ என்றது வண்டை, சாதித்த-நிறைவேற்றிய. ஓது சிலை-புகழ் பெற்ற வில், கரும்புவில்.

259. நாரியர் - பெண்பாலார். மங்கல நாண் பூண் - மாங்கலிய நாணில் சேர்ந்த மாங்கலியமாக. புண்ணியம்-நற்செயல்.

260. மாரன்-மன்மதன். அவனுடைய கரும்புவில். கொண்டகணை - அவன் கொண்ட மலரம்பு. எங்கே எங்கே என்பதனை 261 ஆம் கண்ணியில் வரும் 'ஆம்' என்பதனோடு இயைத்து எங்கேயாம் என்க. அகாது- பயனின்றி ஒழியும் என்பதாம்; மயல்-மயக்கம்.

261. காமம்-காம உணர்வு. கலப்பது-கூருவது. கெற்பம்-கருப்பம், நாமம்-பெருமை. மனு-மனிதன். மனு ஆகிய ஆதிஅரசர் என்றும் ஆம்.

சிட்டிதிதி சங்காரஞ் செய்வதெங்கே யெல்லாம்பொய்
வெட்ட வெளியாய் விடுமன்றோ-கட்டியநா 262

ணற்றா னடுப்படையா லாவதுண்டோ வுன்வலுவே
மற்றாலே யெல்லாம் வலுவுண்டோ-வெற்றிமதன் 263

வன்போர்க் குறுதி மலர்க்கணையா னாலும்வண்டென்
றுன்பேர் படைத்த வுறுதியே-யுன்பேர் 264

அடையாத பாணமுண்டோ வங்கங்கே வென்ற
படையாவு முன்பேர்ப் பலனே-கிடையாத 265

சங்கந் திருமால் தனிக்கரத்தில் வீற்றிருந்துஞ்
செங்கனிவாய்ச் செம்பவளத் தேனுண்டும்-பொங்கமரி 266

---

262. சிட்டி-சிருஷ்டி, படைப்பு. திதி-காப்பு. சங்காரம்-அழிப்பு. வெட்ட வெளியாய் விடும்-ஒன்று மில்லாததாய்ப் பொய்யாய்ப் போகும். கட்டிய நாண்-வில்லில் பூட்டிய நாண்.

263. நடுப்படை-நடுவிலே பிடித்து எய்யப்படுவதாகிய வில். வலு-வலிமை

264. உறுதி-வல்லமை. மலர்க்கணை-பூ அம்பு. வண்டும் மலர்க்கணை எனப் படும். வண்டு என்று அம்பிற்கும் ஒரு பெயராம்.

'அறுபத ஞிமிறளி யார்பதம் பிரமரஞ்
சிதரந் தேனே மந்தி சிலீமுகம்
தும்பி கரும்புள்சஞ் சாலிகம் கழுது
புண்டரீகஞ் சுரும்புசந் திரகஞ்
சூதங் கேசர மதுகரங்கீத
மாவிரி சஞ்சரிகம் வடுவரி வண்டே.

- பிங்கலம்2382.

இதில் சிலீமுகம் என்பது அம்பு; உன் பேர் என்றது மலர்க்கணை என்னும் உன் பெயர் என்றபடியாம். பேர் - பெயர்.

265. பாணம் - அம்பு; அம்பிற்கும் வண்டு என்னும் பெயர் உண்டு.

'குருநாளுங் குற்றமு மளியுங் கைவளையு
நூலு மம்புஞ் சங்கும் வண்டெனல் - பிங்கலம் 4022

படை - ஆயுதம். கிடையாத என்பது வருங்கண்ணியில் சங்கம் என்பதனோடு இயையும்.

266. கிடையாத சங்கம் - எளிதில் எங்கும் கிட்டாததும் அரிதில் பெறுவது மான வலம்புரிச் சங்கு. திருமால் பஞ்சாயுதங்களில் சங்கும் ஒன்று. அவர்தம் வாயில் வைத்து ஊதும்போது அவருடைய வாய்த்தேனை அருந்தும் பேறு அச்சங்கிற்கு வாய்க்கிறது. செங்கனி - கோவைப்பழம். செம்பவளம் - என்றது சிவந்த பவளம் போன்று காணும் உதடு. பொங்கு அமரில் - கிளர்ந்து எழுந்த யுத்தகளத்தில்.

லாரவா ரித்து மடுத்தோர்க் கருள்புரிந்தும்
பார மகிமைபெற்ற பண்பெல்லாம்-பேருலகிற் 267

றண்டலைப்பூம் பள்ளித் தளிரணைமேல் வீற்றிருக்கும்
வண்டரசே யுன்பேர் மகிமையே-மண்டலத்திற் 268

செய்ய கமலத் திருத்தவிசில் வீற்றிருக்குந்
தையலுமுன் பேர்படைத்த தாலன்றோ-அய்யன்மா 269

றிருமார்பைச் சேர்ந்து செகமெல்லாஞ் செல்வந்
தருமா தெனப்பேர் தரித்தா-ளொருமறையோன் 270

ஆவலுறு முன்பே ரடைந்தநா ளிற்பிறந்து
தேவ குருவாய்ச் செனித்தானே-யாவலுறக் 271

---

267. ஆரவாரித்தும் - ஆரவாரம் செய்தும். திருமால் போர்க்களத்தில் சங்கை முழக்குவாராதலால், அங்கே அந்த வலம்புரிச் சங்கு பேரொலி எழுப்புகிறது. தம்மை அடுத்த பக்தர்களை அவர் சங்கினுல் ஆட்கொள்வார். பார மகிமை - மிகுந்த புகழ். பண்பு - தன்மை.

268. தண்டலை - சோலை. பூம்பள்ளி - பூவாகிய படுக்கை. தளிரணை - தளிராகிய ஆசனம். வண்டரசே - வண்டுகளுக்கு அரசனாக அதனைப் புகழ்ந்து பேசுகிறாள் தலைவி. உன் பேர் மகிமை - சங்கிற்கும் வண்டு என்னும் பெயர் உண்டு. அதனால் திருமால் கைச்சங்கம் பெற்ற பெருமை வண்டின் பெயரால் பெற்ற பெருமையே என்கிறாள்.

'குருநாளுங் குற்றமு மளியுங் கைவளையு
நூலு மம்புஞ் சங்கும் வண்டெனல் —பிங்கலம் - 4022

எனவரும் பிங்கல நூற்பாவினால் வண்டு என்னும் பெயர் பூசநாள், குற்றம், வண்டு, கைவளை நூல், அம்பு, சங்கு என்னும் ஏழு பொருள்களில் வழங்கப் பெறுகை அறியலாம்.

269. செய்ய கமலத்திருத்தவிசு-செந்தாமரைப் பூவாகிய ஆசனம். தாமரையில் வீற்றிருக்கும் தையல் இலக்குமி. மா என்பது இலக்குமிக்கும் வண்டிற்கும் பொதுப் பெயராம்,

'குதிரையும் விலங்கும் திருவும் வனப்பும்
வலியும் வண்டும் பிண்டியும் செல்வமும்
நிறனும் பெருமையு நிலனுமோ ரிலக்கணமும்
மருவிய பெயரும் மாவென வாகும் —பிங்கலம் 3949

அய்யன்மால் - தலைவனாகிய திருமால்,

270. செகம் - உலகம், செல்வம் தரும் மாது - இலக்குமியின் சிறப்புத் தன்மை. இதனால் ஆக்கம், திரு, செல்வமகள் என்னும் பெயர்களும் அவளுக்கு உண்டு. ஒரு மறையோன்-ஒப்பற்ற ஓர் அந்தணன்.

271. வண்டின் பெயர் பெற்ற நாள் - பூசம். பூசத்திற்குக் குருநாள் என்னும் பெயரும் உண்டு.

'குருநாள் காற்குளம் கொடிறு வண்டு
புணர்தை யாகும் பூசநாட் பெயரே' —பிங்கலம் 246

கொண்டநா ளந்தக் கொழுநனுக்கல் லால்வளர்த்துக்
கண்டபிதா வுக்குமலர்க் கைநீட்டா-வொண்டொடியார் 272

ஏதிலர்ன் பக்க லிருந்துமலர்க் கைகொடுத்துச்
சோதிவளை கொள்ளுந் தொடர்பெல்லா-நீதிக் 273

கிளையுள்ள மின்னார்க் கியல்பன்றே யந்த
வளையுன்பேர் பெற்ற வளமாமே - யளியின்மேற் 274

றொல்லுலகி லுன்பேர் சுமந்தபெரி யோருக்
கல்லலுண்டோ வேறே யலைவுண்டோ - நல்லதது 275

கண்டோமே வாவிக் கறையிற்கோட் பட்டானை
விண்டோல மிட்டழைத்த வேலைவாய் - விண்டுவிரு 276

கால்சடைக்க வோடிக் கராமடியச் சக்கரந்தொட்
டாலமெனச் சீறி யடர்ந்துபோய் - மூலமென்ற 277

---

தேவகுருவாய்ச் சிறந்தவன் பிரகசுபதி என்னும் வியாழ பகவான். செனித்தான்-பிறந்தான். ஆவல் - விருப்பம்.

272. கொண்டநாள்-தன்னைத் திருமணம் செய்து கொண்ட நாள். கொழுநன்-கணவன். கணவன் ஒருவனுக்கன்றி வளர்த்த தந்தைக்கும் கையை நீட்டிக் காட்ட மாட்டார்கள் பெண்கள். ஒண்டோடியார் பெண்கள்.

273. ஏதிலான் - அயலான், வளையல்செட்டி. பக்கல் - அண்மையில். மலர்க்கை - மலர் போன்ற மெல்லிய கை, அழகிய கை. சோதி வளை - ஒளி படைத்த வளையல்,

274. கிளை - சுற்றம். மின்னார் - பெண்கள். இயல்பு - இயற்கை. கணவனுக்கன்றி வேறு யாருக்கும் தம் கையை நீட்டாத பெண்கள் வளையல் செட்டிபக்கத்திலிருந்து வளையலிடுவதற்காகத் தம் கையை நீட்டுவர் என்பதாம். காரணம் வளையலுக்கும் வண்டு என்னும் பெயர் இருக்கும் சிறப்பாலேயாம் என வண்டின் பெருமை பேசுகிறார். வளையலுக்கு வண்டு என்னும் பெயர் உண்டு என பிங்கலம் 4022 ஆம் நூற்பாக் கூறும், கண்ணி 268 உரை பார்க்க.

275. வண்டின் பேர் சுமந்த பெரியோர் – வியாழன், பிருகு முனிவர். அல்லல்-துன்பம். அலைவு - சஞ்சலம்.

276. கண்டோம் - அறிந்துள்ளோம். வாவி - குளம். கோட்பட்டானை - முதலையால் பற்றப்பட்ட கசேந்திரன் என்னும் யானை. விண்டு-வாய்திறந்து. ஓலமிட்டு - அபயக்குரலிட்டு. வேலைவாய் - பொழுதில். விண்டு - விட்டுணு, திருமால்.

277. கால் சடைக்க-கால் நோவ, கால் இளைக்க. கராம் - முதலை. சக்கரம் தொட்டு-தனது சக்கராயுதத்தை விடுத்து. ஆலம் - ஆலகாலம் என்னும் கொடிய நஞ்சு. சீறி - மிகச் சினந்து. அடர்ந்துபோய் - விரைந்து சென்று, மூலம் - ஆதிமூலம்.

காரானை காத்த கடவுள்செய்த செய்கையெல்லா
மாராலுன் பேர்மகிமைக் கல்லவோ - நேராய்க் 278

கடைக்கலியிற் சீதரனார் கற்கி யவதார
மெடுப்பதுமுன் பேர்மகிமைக் கேகா - ணெடுத்தெடுத்துச் 279

சொன்னாலுஞ் சொல்லத் தொலையாதுன் பேர்மகிமை
யென்னாலே சொல்லு மியல்பன்றே - யந்நாளிற் 280

கஞ்சத் தடத்திற் கழுவுண் டெனக்காட்டிப்
பஞ்சவர்க்கு நீகொடுத்த பட்டமே - வஞ்சகத்தால் 281

மாயச் சனகி வகுத்தனுமன் முன்னெறிந்து
தாயைத் தமரைத்தன் றம்பிதனை - யாயத்தைக் 282

---

278. காரானை - கரிய யானையாகிய கசேந்திரன். காரானை காத்த கடவுள் - திருமால். ஆரால் - யாரால். உன் பேர் மகிமை - உன் பேரின் பெருமை. அரி என்னும் பெயர் வண்டிற்கும் திருமாலுக்கும் பொதுவாகும். பிங்கலம் 3085 நூற்பா காண்க.

279. கடைக் கலியில் - கலியுகத்தின் முடிவில். சீதரனார் - திருமால். கற்கியவதாரம் - கல்கியவதாரம் திருமால் எடுக்கப்போகும் இறுதி அவதாரம். இந்த அவதாரத்தில் குதிரையாக வருவார். குதிரைக்கும் வண்டிற்கும் 'அரி' என்னும் பெயர் பொதுவாகும். எடுத்துச் சொல்லுதல்-மேன்மேலும் விளக்கப் பேசுதல்.

280. சொல்லித் தொலையாது - சொல்லி முடியாது. சொல்லுக்கு அடங்காதது உன் பேர் மகிமை. அந்நாளில் - முன்னாளில், பாரத காலத்தில்.

281, கஞ்சத்தடம் - தாமரைத்தடாகம். கழு-கழுமரம். பஞ்சவர்-பஞ்ச பாண்டவர். துரியோதனன் சூழ்ச்சியாய்த் தடாக நீருள் கழுமரத்தை மறைத்து வைத்து வீமனை அத்தடாக நீரில் குதிக்குமாறு சொன்னதும், அவன் குதிக்கும் போது கழுமரத்தின் நேராகிவண்டு சுழல, அவன் தாண்டிக் குதித்ததனால் உயிர் தப்பியதும் பாரதக் கதையிலுள்ள செய்திகளாகும்.

282-299. இராமாயணம் யுத்த காண்டத்திலே வரும் மாயா சீதைப்படலம், நிகும்பலை யாகப் படலங்களின் செய்தி இங்கு கூறப்படுகிறது. விபீடணன் ஒரு வண்டின் உருவுடன் இலங்கை சென்று நிகும்பலையில் இந்திரசித்தன் செய்யும் யாகத்தையும் பிற நிகழ்ச்சிகளையும் கண்டு வந்து இராமனுக்கு உண்மையை விளக்கினான்.

282. மாயச் சானகி - மாயாசீதை. அனுமன் முன்னெறிந்து - அனுமன் கண்ணெதிரே வெட்டியெறிந்து பின், இராமனுடைய தாயையும் சுற்றத்தார் முதலியோரையும் கொன்று, கோசல நாட்டைக் கலக்கிப் பரதனையும் போரில் வென்று வருவேன் என்று உரைத்து விமானத்தில் வடக்கு நோக்கிச் செல்வது போலப் போக்குக்காட்டினான். தமர்-சுற்றம். ஆயம்-பசுத்திரள்.

கோசல நாட்டைக் குமட்டிப் பரதனையும்
பூசலிடை வீழப் புரட்டியே - யாசையறச் 283

செய்வே னெனவரக்கன் றென்றிசைவிட் டுத்தரத்தில்
செவ்வேவி மானஞ் செலுத்தவே - செய்கையெல்லாங் 284

கண்டா னுமன் கலங்கினா னாயகற்கு
விண்டா னவனும் வெதும்பியே - கண்டநெடு 285

மூச்சடங்கி செய்யு முறையடங்கி நாவுலர்ந்து
பேச்சடங்கித் துன்பம் பெரிதாக - வாச்சுதினி 286

யெங்கே கதியென் றிருந்தோரெல் லாமயங்க
வங்கே யிலங்கைக் கணுகியே - மங்கையொரு 287

மாயவுரு வென்றுமந்த வாளரக்க னோர்யாக
மாய நிகும்பலையா னாமென்று - மாயமெல்லாஞ் 288

சொல்லி யிராவணனைச் சூழுங் கிளையோடே
வெல்வதுவு நீகொடுத்த வீரமே - நல்லவெழிற் 289

சீவகனா ருக்குஞ் சிறந்தத்தை யாருக்கு
மாவலுற வேமனதொன் றாக்கியே - மேவுசுண்ண 290

---

283. கோசல நாடு - இராமனுக்குரிய நாடு. குமட்டி - கலக்கி. புரட்டி- மண்ணில் புரளும்படி செய்து.

284. அரக்கன்-இந்திரசித்தன், உத்தரம்-வடக்கு.

285. நாயகன் - தலைவனாகிய இராமன். விண்டான் - விரித்துரைத்தான். வெதும்பி-மனம் மிக வருந்தி.

285. மூச்சடங்கி - மூச்சில்லாமல். செய்யுமுறை மயங்கி - செயலற்று. நாவுலர்ந்து-நாக்கு வறண்டு.

287. எங்கே கதி-பிழைக்கும் வழி எப்படி, மங்கை-சீதை.

288. மாயவுரு-பொய்யுருவம். வாளரக்கன் - கொடிய அரக்கனாகிய இந்திர சித்தன். நிகும்பலையான் - நிகும்பலை என்னும் இடத்தில் உள்ளான். மாயம் - வஞ்சகச் சூழ்ச்சி.

289. கிளை-சுற்றத்தார்; நீ கொடுத்த வீரம் என்றது விபீடணன் வண்டுருக் கொண்டு இலங்கை சென்று வந்து உண்மை நிலை விளக்கியதால்தான் பின் தொடர்ந்து இராமன் போர் செய்து இராவணன் முதலியோரை மாய்த்து வெற்றி கொள்ள இயன்றது. எனவே, இராமன் பெற்ற வெற்றி விபீடணன் கொண்ட வண்டுருவினால் வந்தது என்று வண்டின் ஏற்றமுரைக்கிறாள்.

290. சீவகனார் - சீவகசிந்தாமணிக் காவியத்தின் தலைவனாகிய சீவகன். தத்தை-காந்தருவதத்தை. சுண்ணம் - வாசனைப்பொடி.

நன்றுதீ தென்று நலங்காட்டிப் பாருலகி
லன்றுநீ செய்தகலி யாணமே - யன்றயனைக் 291
குட்டிச் சிறையிற் குமரவேள் வைத்ததுநீ
விட்டுக் கொடுத்தமந்திர மேன்மையே - மட்டவிழுஞ் 292

செந்தா மரைப்பூந் திருக்கோயில் மண்டபத்தில்
மந்தா நிலக்கால் மருங்கசைப்பக் - கொந்தாருங் 293

கொம்பினா றூற்றக் குளிர்தண் டலைவீச
வம்பறாத் தாது மணங்கொள்ள - வம்பறாத் 294

தண்டலைசேர் வாவித் தளிரணைமேற் கண்படுக்கும்
வண்டரசே யுன்பெருமை மட்டுண்டோ - விண்டமலர் 295

வாங்குகொம்பி லாரெனும் வண்டணையாப் பூவெடுத்தால்
வேங்கையென்று சொல்வதுவு மெய்யன்றோ - வோங்குபிற 296

வீசனை யர்ச்சிக்க வெடுத்தமலர் மற்றொருவர்
வாசனை கொள்ள வழக்கன்றே - யீசனுநீ 297

---

291. வாசனைப் பொடியின் நன்றும் தீதும் வண்டினால் பெறவைத்தான் சீவகன். சுரமஞ்சரிக்கும் குணமாலைக்கும் சுண்ணப் பொடியால் வந்த மாறு பாட்டில் சீவகனிடம் சுண்ணத்தைக் காட்ட, அவன் அதனைத் தூவி வண்டு மொய்த்த சுண்ணப் பொடியே -.குணமாலையின் சுண்ணமே-நல்லது என்றான். இச்செய்தியைச் சீவகசிந்தாமணி குணமாலையாரிலம்பகத்தில் (874-896) காண லாம். அயன் - பிரமன்.

292. குமரவேள் - முருகன். மந்திரம் - ஓம் என்னும் பிரணவ மந்திரம். இங்கே வண்டின் ஒலியைக் குறித்தபடி. மட்டவிழும் - தேன் சிந்தும்.

293. மந்தா நிலம் - தென்றல் காற்று. கொந்து - கொத்து.

294. கொம்பினால் - மரக்கொம்பிலுள்ள தேனினால். தூற்ற - தேனைத் துளிக்க. குளிர் தண்டலை வீச - குளிர்ச்சி பொருந்திய சோலைகள் மரக்கொம்பு களினால் காற்று வீச. வம்பு - வாசனை. தாது - மகரந்தம். அம்பு அறா - நீர் வற்றாத.

295. தண்டலை - தண்டு அலை, தாவி வரும் நீரலைகள். வாவி - குளம். தளிரணை - தளிராலாகிய படுக்கை. கண் படுக்கும் - உறங்கும். வண்டரசே – தான் கண்ட வண்டைத் தலைவி அரசாகப் பெருமைப் படுத்திக் கூறுகிறாள். மட்டு - அளவு. விண்ட - விரிந்த.

296. வாங்கு கொம்பு - வளைந்த கிளை. வண்டு அணையாப்பூ - வண்டு மொய்க்காத மலர். சண்பகம் வேங்கை. 'சண்பகமும் வேங்கையும் வண்டுணா மலர் மரம்' – பிங்கலம் 2767, வேங்கை - வேம்கை. கைவேகும் என்றபடி. மெய் - உண்மை.

297. ஈசனை அர்ச்சிக்க எடுத்த மலர் - இறைவனுக்கு அருச்சனை செய்வதற் காகக் கொய்து வந்த மலர். மற்றொருவர் மோந்துஅளித்தல் முறையன்று. நீ-நீ என்றது வண்டை,

மோந்து கொடுத்தமலர் முக்கியமென் றேபுனைந்தா
லேந்துலகி லுன்பெருமைக் கெல்லையுண்டோ - சாந்த 298

அரியென்று பேர்படைத் தாசைகொண்ட மாதர்
பிரிவகற்றிக் காக்கும் பெயரே - யருமை 289

யளியென்று பேர்கொண் டதனாலே யானுங்
களிகொண்டே னென்னுயிரைக் காப்பாய் - தெளியுமிரு 300

தேவியரு நீளைத் திருவு மிருக்கமின்னா
ராவியனையவெண்ம ரங்கிருக்கக் - கோவியர்க்காய் 301

வண்டுவரை யாதெனப்பேர் மாயோன் செயல்கேட்டு
வண்டுவரை யாதெனநான் வாய்விட்டேன் - கொண்டல் 302

அலைவாய்ப் பயங்கொ டவனியெல்லாந் தூற்ற
மலைவா யிருப்பவற்கோர் வாயோ - குலவும் 303

அறுகாலே நீயலதென் னாதரவு சொல்லச்
சிறுகால் நடந்து செலுமோ - முறுகுமதன் 304

---

298. வண்டு மோந்த மலரை ஈசனும் எற்றுக் கொள்கிறான். அதனால் வண்டின் பெருமைக்கு அளவில்லை என்று ஏதுவுடன் எடுத்துக் கூறுகிறாள்.

299. அரி - வண்டிற்குரிய ஒரு பெயர். அரி - நீக்கு என்பதையும் குறிப்பதால் பிரிவை நீக்கி என்றாம்.

300. அளி - வண்டின் பெயர்களுள் ஒன்று. அளி என்பது கருணைக்குப் பெயர். களி கொண்டேன்-மகிழ்ந்தேன். இரு தேவியரும் என வருங் கண்ணியோடு கூட்டுக.

301. இரு தேவியர்-சீதேவி, பூதேவி. நீளைத்திரு-நீளாதேவி, திருமால்-தேவியருள் ஒருத்தி. ஆவி - உயிர். ஆவியனைய எண்மர் - அட்ட லட்சுமியர்; தனலட்சுமி, தானியலட்சுமி, தைரியலட்சுமி, வீரலட்சுமி, வித்யாலட்சுமி, கீர்த்திலட்சுமி, விசயலட்சுமி. கோபியர் - இடைப்பெண்கள்.

302. வண்டுவரையாது - வண் துவரை யாது. துவரை - துவாரகை, மாயோன்-கண்ணன். வண்டுவரையாது-வண்டு தவறாது. வாய்விட்டேன்-வாய்விட்டு உரைத்தேன். கொண்டல்-மேகம்.

303. அலைவாய் - கடலிடத்தில், பயம் கொண்டு - நீரை மொண்டு கொண்டு. அவனி - உலகம். மலைவாய்-மலையிடமாக. மாறுபாடாய் என்றும் ஆம். வாயோ - வாயிலாக உதவுமோ ? மேகம் வேறு பணியில் ஈடுபட்டிருப்பதால் அது தூது செல்லத்தக்கது அன்று என்றான்.

304. அறுகால் - வண்டு. ஆதரவு - அன்பு. சிறுகால்-தென்றல். தென்றலும் தூது செல்லத்தக்கதன்று என்பதாம்,

எத்தையார் முன்னே யெடுத்துரைப்பேன் கேசரமே
தத்தையார் சொன்னாலுந் தள்ளுவரே -மெத்த 305

மதிவச மல்லவென்றால் வாய்ந்தவன் னப்புள்ளும்
விதிவசமென் றோடி விடுமே - பதிவாய்நீ 306

யன்புறா யாகி லறுபதமே யன்பர்பக்க
லின்புறா வார்த்தை யியல்பன்றே - யின்ப 307

முகியாப் பிரமரமே மோகத் துயிரைச்
சகியார்சோன் னாலார் சகிப்பார் - வகையா 308

யருங்கோடை வாய்திறப்ப தல்லாற் குயிற்கு
மருங்கோடே பேச வருமோ - கருங்குவளைத் 309

தூளைமணங் கொள்ளுஞ் சுரும்பே மயிற்குரைத்தால்
வேளையறி யாதேபோய் விள்ளுமோ - நாளை 310

மடலவிழும் பூவை மலர்த்தித்தே னுண்ணு
மடலறியுஞ் சீர்வண் டரசே - கடவதுனக் 311

கல்லாம லென்மயலை யாற்றுவா ருண்டோநீ
சொல்லா திருந்தாற் றுயர்போமோ - நல்லதொரு 312

---

305. முறுகுமதன் - மாறுபட்டுள்ள மன்மதன். எத்தை - வஞ்சத்தை, ஏமாற்றை. கேசரம் - வண்டு. தத்தையார் - கிளி. தத்தை யார் சொன்னாலும் தள்ளுவர் - ஆபத்தை யார் சொன்னாலும் நீக்குவர் என்று வேறொரு பொருளும் தொனிக்கும்,

306. மதி - அறிவு. அன்னப்புள் - அன்னப்பறவை . விதிவசம்-விதியினால் விளைந்தது. பதிவாய் - ஊரிடத்தில், தலைவனிடத்தில். விதி - பிரமன்.

307. அன்புறாயாகில் - அன்பு கொள்ளா விட்டால். அறுபதம் - வண்டு இன்புறா - இனிய புறாவானது.

308. முகியா - முடியாத. பிரமரம் - வண்டு: சகியார் - தோழிமார். சகிப்பார் - பொறுப்பார். எற்றுக் கொள்ளுவார்.

309. கோடை - கோடைக்காலம். வாய் திறப்பது - வாய்திறந்து கூவுவது. குயில் - கோடையிலன்றிப் பிறபருவங்களில் கூவாது என்றபடி. மருங்கோடே - பக்கத்திலிருந்து.

310. தூள் மகரந்தம். சுரும்பு - வண்டு. மயிற்குரைத்தால் - மயிலுக்குச் சொன்னால், வேளையறியாது - சமயம் தெரியாமல், வேளாகிய முருகனுக்குத் தெரியாமல்; விள்ளுமோ - உரைக்குமோ?

311. மடல் - இதழ். தேனுண்ணும் அடல் - தேன் உண்ணுகிற ஆற்றல், வண்டரசே - 295ஆம் கண்ணியில் கூறியாங்கு இங்கும் புகழ்ந்து பேசுகிறாள், கடவது - செய்யத் தகுவது. கடமையாக உள்ளது.

312. மயல் - காமநோயை. துயர் - துன்பம்.

கீத மொழிவிரும்பிக் கேளாத பேருண்டோ
சூதமொழி யென்றாருஞ் சொல்வாரே - யேதோ 313

பிரமரமே நானிந்தப் பேய்கொண்டே னந்தப்
பிரமரமே செய்த பிழையே - விரையாருங் 314

கேசரமே மையற் கிறக்கமுற்றே னப்பொழுதுங்
கேசரமே திந்திக் கிறக்கமென்றா - ரோசைபெறு 315

தும்பியே காமத் துயராலே நொந்துடல்வெ
தும்பியே மெத்தத் துளங்கினேன் - கெம்பீரப் 316

பூம்பிரச மேமதனன் போராலே நொந்துடலந்
தேம்பிரச மேநாவிற் றீர்ந்தேனே - பூம்பொன் 317

னளியேநான் கொண்டமய லாற்றுவா ராருன்
னளியே யலதொன் றறியேன் - களிகூர் 318

மதுகரமே பெய்த வளையிழந்த திங்கே
மதுகரமே கொண்ட மயலால் - மதுவார் 319

சுரும்பினமே யென்மேற் றொடுத்த மதவேளுங்
கரும்பினமே தங்கைவிடக் காணேன் - விரும்பும் 320

வரிக்கடையே கொண்ட மயலா லவர
வரிக்கடையே சொல்ல வழக்கே - விரிக்கு 321

---

313. கீதமொழி - இனியசொல், இசைச்சொல். சூதமொழி - சூதான பேச்சு. வஞ்சகப் பேச்சு.

314. இந்தப் பேய் என்றது காமநோயை. பிரமரம் - மயக்கம். விரை - வாசனை.

315. மையல் கிறக்கம் - காம மயக்கம். ஏது இந்தக் கிறக்கம் என்றார் என்க.

316. தும்பி - வண்டு. வெதும்பியே - வாடி. துளங்கினேன் - மெலிந்தேன், கெம்பீரம் - கம்பீரம். பெருமிதத் தோற்றம்.

317. பூம்பிரசம் - அழகிய வண்டு; தேம்பிரசமே நாவில் தீர்ந்தேன் என்க, ரசம் - சுவை.

318. அளி-வண்டு, கருணை.

319. மதுரம்-வண்டு. பெய்தவளை-அணிந்த வளையல். மதுகரமே கொண்ட மயலால் என்க. மது - தேன்.

320. சுரும்பினம் - வண்டு. மதவேள்-மன்மதன். கரும்பு இனம் ஏதம் விடக் காணேன் - கரும்பு-கரும்புவில். இனம்-இன்னம். ஏதம்-வில்லால் அவன் எய்யும் காம பாணத்தால் வரும் துயர்.

321. வரிக்கடை - வண்டு. அவர - அவருடைய. வரிக்கடை - அழகிய வாயில். வழக்கு - முறைமையாம்'

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY,
MADRAS-

மறுகாலே நீபோயென் னாசைசொன்னா லப்பா
லறுகாலே போற்றி யணைப்பேன் - சிறியசிறைத் 322

தேனே ஞிமிறே சிறுபறவாய் நம்பியிருந்
தேனே மயலாற் றிகைத்தேனே - தேனருந்து 323

மாவே யளியே வரியே யரியேகா
மாவேக மாச்சென் மயனோயே - பூவாகுஞ் 324

செங்கமல மேவு திருவேங் கடநாத
துங்கன் ராச துரந்தரவேள் - ளிங்கிதமாம் 325

வேளை யறிந்து விதமறிந்து சூழ்ந்திருக்கு
மாளை யறிந்தங் கடைவறிந்து - தாள்வணங்கிக் 326

கண்டேநான் கொண்டமயற் காதலெல்லாஞ் சொல்லிமலர்
வண்டேபூந் தார்வாங்கி வா, 327

திருவேங்கடநாதன் வண்டுவிடு தூது முற்றிற்று.

---

322. ஆசை - விருப்பம். அறுகால் - பொருளற்ற வறுமைக் காலத்தில் போற்றி யணைப்பேன். பாதுகாப்பேன். அறுகம் புல்லினால் அருச்சித்து எனலுமாம். சிறிய சிறை - சின்னஞ்சிறிய இறகு, வண்டு. உள் - சிறகு கொண்டது என்னும் கருத்தால், 'அஞ்சிறைத் தும்பி' என்பார்.

323. தேன், ஞிமிறு, சிறு பறவை என்பன வண்டின் பெயர்கள். நம்பி யிருந்தேன் - உன்னையே நம்பியிருக்கிறேன்.

324. மா, அளி, வரி, அரி என்பன வண்டின் பெயர்கள்; கா - காப்பாற்று; மா வேகமாச் சென்றது - மிகுந்த தாபத்தை ஆக்குகின்றது என் மயல்நோய்.

325. துங்கன் - உயர்ந்தோன். ராசதுரந்தரன் - அரசர்களை நெறிமுறை யில் நடத்திச் செல்லுவோன். இங்கிதமாம் வேளை என அடுத்த கண்ணியுடன் இயைக்க; இங்கிதம் - இனிமை.

366. வேளை - சமயம். விதம் - சொல்லும் முறை. சூழ்ந்திருக்கும் - சுற்றி யிருக்கும். ஆள் - மனிதர். அடைவு - அங்குள்ள முறைமை. தாள்வணங்கி - காலில் விழுந்து வணங்கி.

327. கண்டு - நேரில் பார்த்து; பூந்தார் - பூமாலை,

*பின்னிணைப்பு — 2*

# திருவேங்கட நாதன் மேல் தனிப்பாடல்கள்

## கட்டளைக் கலித்துறை

முதல் ஏழு பாடல்கள் கிடைக்கவில்லை.

8 ... ... ... ...
... ... ... ...
... சுரும்பென்ப ரென்னைக் கனிரச
மென்பர்நின் சொற்சுவையே. 1

9 கற்பன யாவையும் கற்றுணர் செஞ்சொற் கவிப்புலவீர்
பற்பன சாஷிதன் சுப்பிரமண்ய தயாபரன்சொல்
விற்பன னந்திரு வேங்கட நாதசெய் வேந்திரனன்பாய்
உற்பன மாகப் பகர்வசனந் தவறா னுண்மையே 2

10 கருணைக் கடலெங்கள் சுப்பிரம ணியன்சொற் காதலென
தருணத் தினானு முபகாரஞ் செய்வோன் முத்தமிழ்க்கங்கை
வருணத்து மாதிரு வேங்கட நாதன் வதனமதிக்
கிரணத்தி னாலென் கலியிருள் தான்விட்ட கேட்டதுவே 3

## வெண்பா

1 பூசர் பலன்செய் புரவலரெ லாந்துதிக்கத்
தேசா பதியத் திறம்பெற்றாய்-மாசறுசன்
மானியபி மானிகவி வாணர்புக ழட்டாவ
தானிதிரு வேங்கடநா தா. 4

2 சிந்தை கனிந்து செகதலத்தோர் வாழ்த்தியநின்
தந்தை மகிழத் தகுதிபெற்றாய்-விந்தைபெறு
வாலி முதுகுருவ வாளிதொடு மதிட்ட
சாலிதிரு வேங்கடநா தா. 5

3 உன்னுடைய தந்தை யுளமகிழ்ந்து பூச்சியஞ்செ
யென்னுடைய யோகநீ யிங்குவந்தாய்-நன்னயமாய்ப்
பாரரசு செய்பிர பலயோகர் பாவலர்க்கு
தாரதிரு வேங்கடநா தா. 6

4 சிங்காரம் பாராய் திருவேங் கடநாத
துங்கவிக ளங்கா துரந்தரா-தங்கப்
பருப்பதச்சிறப் பினைப் பழித்தெதிர்த்து வேழ
மருப்பெனப்ப ணைத்தசொற்க மான் 7

5 மற்றிவளோ மோகி மதனரதி யாவுங்
கற்றதிரு வேங்கட நாதா-கொற்றவரை
யேவல்கொண்டு லாட்சிங்கி யேபுனைந்த வாலமங்கை
யாவல்கொண்டுன் மேல்விரும்பி னாள் 8

## கட்டளைக் கலித்துறை

1 நல்லவன் செல்வத் துரைதிரு வேங்கட நாதனெல்லாம்
வல்லவ னிங்கு வரக்காண்கி லேன்மட வார்பகையெனச்
சொல்லவன்கண்மை துலையா தினிய சுவைக்கரும்பு
வில்லவன் வாரிமுர சார்க்கக் கட்டிய மீனத்தையே. 9

2 மாமன் மருகன் பெயர்பெற்ற சுப்ர மணியனருள்
சோமன் புகழ்த்திரு வேங்கட நாத துரந்தரனைக்
காமனென் பார்சிலர் வீமனென் பார்சிலர் கார்க்குவளைத்
தாமனென் பார்சிலர் காமனென் றேசொலத் தக்கவனே. 10

3 நரவா கனாதிப னாந்திரு வேங்கட நாதனடி
பரவா தவர்தலை கீழாய் விழுந்து பணிந்துகப்பந்
தரவாச லுக்கிப் புறநின்று தூங்கிச் சடைப்பர்பண்டை
யிரவாள ரிங்கிவன் பேர்பாடி மேன்மைபெற்
றேமென்பரே. 11

4 பொன்னா பரணப் புயாசலன் கல்விப் புலவர்புகழ்
நன்னா கரி கதுரைதிரு வேங்கட நாததுங்கன்
முன்னாகச் சென்றென் மனக்குறை யாவு மொழிந்தவதன்
பின்னாக வாசலில் மட்டிட்ட காரியம் பேசுமின்னே. 12

5 படித்தவன் கல்வி கவியா வையும்படப் பாந்தளின்மே
னடித்தவன் தென்குரு கூர்த்திரு வேங்கட நாதனன்கை
பிடித்தவன் விட்டுப் பிரிந்தான் பொருளை யபேட்
சித்ததில்
முடித்தவன் கண்மை யன்றோயா னிடர்க்கடல்
மூழ்கியதே. 13

6 சிங்கா சனமுடி வேந்தர் புகழுந் திருக்குருகூர்க்
கங்கா குலாதி பதிதிரு வேங்கட நாதசெய
துங்கா விலங்கும் பரங்கா கருணை சுரந்தவக
ளங்கா விசேஷப் பிரசங்கா புவிமண்ட லாதிபனே. 14

7 படைக்கிணை கூறிய பார்வை நவரத்தினப்
பைந்தொடிமின்
னிடைக்கிணை மாதர் வசீகர மோக னிளமையின்
னடைக்கிணை வாலிப மாந்திரு வேங்கட
நாதன்செங்கைக்
கொடைக்கிணை யற்றந் தரப்பட்டு மேகங் குமுறுவதே. 15

8 அரும்பவிழ்ந் துட்கருத் தொன்றி மனத்து பிஞ்சர்
முன்னுள்ளம்
விரும்பவந் தக்கனிபோற் றோற்றமாஞ் சக்கிர வேந்தவனை
வரும்புக ழுந்திரு வேங்கட நாத வரோதயபொற்
... ... ... ... 16

## திருவேங்கடம்பிள்ளை பேரில் இன்னிசை

1 பொன்னா பரண புயபூ தராகமல
மின்னா ளகலாத மீனாட்சி நாத துங்கன்
பின்னாக வந்துதித்துப் பேர்படைத்துக் கீர்த்திபெற்ற
கன்னா திருவேங்க டநாத பூப்தியே. 17

2 தென்னாகை யூரானாந் தென்குருகூர் மாலைமனத்
துன்னா விசேடவறி வுள்ளமதி மந்திரிநீ
யின்னா மிடியென் றிரவலர்கண் பார்த்ததுவுங்
கன்னா திருவேங் கடநாத பூபதியே. 18

3 சொன்னா வலர்புகழுஞ் சுப்பிர மணியசிங்க
முன்னாளிற் செய்தபலன் முற்றுநின்னாற் கண்டதய்யா
நன்னாக ரிகமதனா கலியுகா தியில்வாழ்
கன்னா திருவேங் கடநாத பூபதியே. 20

4. என்னாசை வீணாசை யென்று மறுத்துவிட்ட
நின்னாசை பொன்னாசை நேரிட்ட தாமலவோ
சன்னா சியர்முதலாந் தாபதர்க் கெலாம்வழங்குங்
கன்னா திருவேங் கடநாத பூபதியே.

5 மன்னா ரெனச்சிறந்த மாதவனைச் சிந்தைசெய்விற்
பன்னா சுபசோ பனயோக தாட்டீகா
பொன்னா டளித்த புரவலனின் மிக்கான்
கன்னா திருவேங் கடநாத பூபதியே. 21

6 உன்னா தரவுநட்பு முற்பனமுஞ் சற்குணமும்
என்னா லுரைத்தற் கெளிதோபூ சக்கிரதர
மன்னாசம் பன்னா மறுமண்ட லீகர்புகழ்
கன்னா திருவேங் கடநாத பூபதியே. 22

7. கன்னா ருரிப்பாருங் கார்மே னடப்பாருங்
கன்னா வமிர்த கவிபாட வல்லவரோ
கன்னாடர் மாறாடர் காதலிக்கக் கீர்த்திபெற்ற
கன்னா திருவேங் கடநாத பூபதியே. 23

8 துன்னார்பின் னாகமுன்செல் சூரா சுயம்புத்தி
தன்னாற் குவலயத்தைத் தாங்குமுழு வல்லவனீ
தின்னார் வெம்பொறை முன்னோர் செப்புமொழி
கேட்டுவந்த
கன்னா திருவேங் கடநாத பூபதியே. 24

9. புன்னாக மேற்றோனைப் போலிரவா நானதிக
மென்னாது யாசகனென் றெண்ணுவது நீதியன்றே
வன்னா சிரமத்தோர் மாதவத்தோர் வாழ்த்தநல்குங்
கன்னா திருவேங் கடநாத பூபதியே. 25

10 என்னாளு முன்னைமனத் தெண்ணியெண்ணி
நான்மருண்ட
பின்னா கிலுமடுத்துப் பேசவிடங் கண்டிலனே
யொன்னார் பரவுமதி யூகியென வந்தகொடைக்
கன்னா திருவேங் கடநாத பூபதியே. 26

1 மெலியாது சந்தம் வெளிறாது வாரம் விடாதுளஞ்சஞ்
சலியாது செஞ்சொற் கலையகலாது தபனனுக்கு
நலியாது சுப்பிர மணியனந் தா...மின்ப
முலிபாடல் மன்மதன் மீனாட்சி நாதன் மதிமுகமே. 27

2 பங்கப் படாது பயத்துட் படாது பனிபடர்த்த
கங்குற் பொழுது குவியாது வண்ட....திலங்கு
மங்கத்தில் வாட்ட முறாது குருகைக் கதிபதிபிற்
சங்கத் தமிழ்க்குள மீனாட்சி நாதன்கைத் தாமரையே. 28

3 மறுவுட் கொள்ளாது சுடர்மழுங் காதுசெவ் வான்மையுறா
தறுக்க் கரணை யணுகாது செவ்விகுன் றாதுகனத்
துறுமந் தரத்திற் சுழலாது தென்குரு கூரன்கற்றோர்
முறுவற் குறிப்புணர் மீனாட்சி நாதன் முகமதியே, 29

4 மன்னுதொளா யிரத்தறுபத் தய்யா மாண்டு
மாசிமதி மேவுபதி னோராந் தெய்தி
பன்னு சுக்கிர வாரமசு பதிநன் னாளிற்
(பங்க)யக்கண் மாயர்திரு வுளத்துக் கேற்கச்
சொன்னவடி வாற்கருடே சனைமிக் காகத்
தொல்லுல கினிற்பிர திட்டை தோன்றச் செய்தான்
நன்னயவான் புகழ்வளஞ்சேர் குருகை மாறன்
னகர்த்திருவேங் கடநாத ராசன் றானே. 30

5 அருடவா கனமாரி யருள்சுப்பிர மணியதுங்க
னருமைப் பாலன்
புருடவா கனராதி பதிதிரு வேங்கட
பூபன் விண்ணோர்
வருடவா கனமூர்த்தி மணியணிகள் மாறனுள
மலர்ச்சி கூரக்
கருடவா கனம் பிரதிட்டைசெய் தளவிலாகீர்த்தி 31
கட்டினானே.

# திருவேங்கடநாதன் கொடிவழி

**துரை சுப்பிரமணிய மன்னன் (தந்தை) 42 – 43**

- மீனாட்சிநாதன் **(தமையன்)** 45-46
- திருவேங்கடநாதன்
- சுவாமிநாதன் **(தம்பி)** 47

**திருவேங்கடநாதன்**

- **பெரிய தந்தை**
  - சங்கரநாராயணன் 52
- **உரிமைச் சகோதரர்**
  1. துரைமாலைப் பிள்ளை
  2. தெய்வநாயக மகீபன்
  3. பெரியதிருவடி விபேகன்
  
  53 - 54
- **மாமன்மார்**
  1. சங்கரநாராயணன்
  2. தையல்பாகன்
  3. சுப்பிரமணியன்
  4. சீனிவாசன்
  
  55 - 57
- **மைத்துனன்**
  1. சங்கரமூர்த்தி
  2. வைகுந்தநாதன்
  
  58

# சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி

[எண்: கண்ணி எண்]


அகண்ட மண்டலாதிபன் 27
அகளங்கன் 11
அங்கர் 87
அச்சுதன் 127
அசலன் 15
அட்டகிரி 81
அட்டலட்சுமி 12
அட்டலட்சுமிப்
பிரசன்னன் 12
அடப்பம் 141
அடைப்பை 128
அடைவறிதல் 326
அபயன் 11
அம்பாரி 123
அமரர் சேனாபதி 63
அயன் 291
அயிராணி 155
அரக்கன் (இந்திரசித்து) 284
அரண்மனை 203
அரம்பையர் 190
அரி 324
அரிச்சந்திரன் 6
அரியென்று பேர்-வண்டு 299
அருளுற்றிருக்கும் அன்பு
நிறை உள்ளத்தான் 12
அரைஞாண் 132
அலைவாய்த் துரும்பு 200
அளகை 78
அளி 318, 324
அளியென்று பேர்-வண்டு 300
அறுகால் 304, 322
அறுமதம் 307
அன்னக்கொடி 110
அன்னப்புள் 306
அனகன் 15
அனபாயன் 4
அனுமக்கொடியோன் 112
அனுமன் 282, 285
ஆக்கினாசுக்கிரீபன் 27
ஆகுளி 146
ஆணிலே மிக்கான் 247
ஆணை (தசாங்கம்) 114
ஆத்தானபோசன் 11
ஆயுதபாணியர் 162
ஆலவட்டம் 34
ஆன்கொடி 110
ஆனகம் 145
இக்குவரிக்கோதண்டம் 212
இடியேறு 9
இந்திரன் 73
இந்துளார் 87
இராவணன் 289

இலங்கை 287
இளங்காற்றேர் 204
ஈசன் 297
ஈசனை அர்ச்சிக்க
எடுத்த மலர் 297
ஈழத்தார் 88
உச்சித நயக்கலவி 228 - 242
உசிதன் 17
உடுக்கை 146
உரகன் 14
உரிமைச் சகோதரர் 54
உரிமையறிவு 16
எண்புள் 238
எதிபதி சித்தாந்தம் 41
ஏககுதி 155
ஏகதமரானோர் 33
ஏவற்றொழிலோர் 35
ஐந்தாரு 10
ஒப்பஞ்செலுத்துதிறலுத்
தண்டன் 13
ஒன்னைப்பூ 187
கங்காகுலத்தான் 6
கட்டியம் 153
கடகம் 185
கடுக்கன் 129
கண்டி 130
கண்ணன் 150
கந்தவேள் 193
கந்தன் 176
கப்பம் 13
கபாய் 131
கமலத்தவிசில் வீற்றி
ருக்கும் தையல் 269
கராம் 277
கருடக்கொடி 110
கருடேசன் காப்பு
கருநாடர் 89
கல்விக்கடல் 38
கல்வித்தியாகன் 51
கல்வி திருவேங்கடநாதன் 51
கல்வியும் கேள்வியும் 74
கலவித்தொழில் 243
கலிங்கதேசர் 87
கலியாணம் 291
கவரி 140
கவிப்புலவோர் 76,115
கவுசலின் 112
கற்கியவதாரம் 279
கற்றான் பெண்ணாக
மலர்க்காலால் உருக்
காட்டக் கற்றான் 48
கன்னன் 28
கன்னாவதாரன் 5
கனகவேதண்டம் 30
கனவு 245
காடை 238
காதல் 327
காரிதருங்கனி 36
காவற்றொழிலோர் 35
காவிக்கணை 217
காவியப்பிரசங்கன் 5
காவேரி 68
காளாஞ்சி 141
கீதமொழி 313
கீர்த்திப்பிரதாபா 29
குச்சம் 188
குச்சு 134
குஞ்சம் 139
குஞ்சரவலாரி 14
குஞ்சரம் (தசாங்கம்) 90
குடகர் 89
குப்பி 188

கும்பகுடம் 165
குமரவேள் 292
குயில் 309
குரகதரேபந்தன் 14
குருகூர் 69
குருகை 43, 114, 166, 189
குருகைநம்பி 114
குருகைவேந்தன் 166, 189
குவளைத்தார் 193
குவளைத்தொடையான் 3
குளிப்பினும் காமம்
சுடுமே (நாலடியார்) 225
கெவுரி 146
கேசரம் 315
கொங்கர் 87
கொடி (தசாங்கம்) 111
கொத்துச்சரம் 165
கொலு 36, 128
கோசலநாடு 283
கோதண்ட தீட்சாகுரு
ராகவன் 30
கோவியர் 301
கோழி 238
சக்கரவர்த்தி 31
சக்கரவெற்பு 84
சகடோல் 122
சகியார் 308
சங்கரநாராயணதயாளு 55
சங்கரநாராயணமால் 52
சங்கரமூர்த்தி 58
சங்கிராமன் 45
சங்கு 238
சம்பன்னன் 28
சமரரணகண்டீரவன் 28
சல்லரி 144
சல்லி 94
சவுந்திரவேள் 52
சனகவிதுரசதுரன் 15
சனகி 282
சாதிலிங்கம் 119
சாய்ப்புவகுப்பு 96
சிங்களர் 89
சிங்கேறு 9
சிட்டிதிசிங்காரம் 262
சிந்தாக்கு 186
சிந்தாமணி 22, 73
சிந்து தேசத்தார் 89
சிலம்பு 95
சிவிகை 142
சிறுகால் 304
சின்னம் 168
சீதரனார் 279
சீமைக் கணக்கர் 26
சீரங்கம் 68
சீவகனார் 290
சீனம் 99
சீனிவாசமால் 57
சுக்கிரீவன் 27
சுண்ணம் 290
சுப்பிரமணியமண்டலீகன் 43
சுப்ரமணிய மன்னன் 42
சுப்பிரமணியராசன் 178
சுப்பிரமணிய வள்ளல் 44
சுப்பிரமணிய வாதிபதி 166
சுப்பிரமணிய வேந்தன் 56
சுபமங்களம் 152
சுரும்பினம் 320
சுரும்பு 310
சுவாமி நாதேந்திரன் 47
சுழுகுமெத்தை 122
சூடகம் 186
சூதப்பூவம்பு 212,213

சூர் 62
செங்கமல நங்கை 58
செங்குவளைக்கண்ணார் 20
செந்தமிழ்ப்பாவாணர் 7
செந்தாமரைபோல்
திருமுகத்தான் 19
செந்தூர் 62
செயவிசயன் 2
செல்வக்கொழுந்து 38
சேகண்டி 147
சேடன் 100
சேரமாயானை 62
சேரன் 135
சேவற்கொடி 110
சொற்புலவோர் 71
சோடனை 97
சோடு 131
சோழன் 135
சௌபாக்கியன் 27
தக்கை 145
தடாரி 144
தண்டிமம் 145
தத்தைப்பரி 218
தத்தையார் (காந்தருவ
தத்தை) 290
தத்தையார் 305
தமிழ் காப்பு, 76
தமிழ்ப்புலவோர் 70
தவளக்கணை 214
தவில் 144
தழுக்கு 185
தளிரணை 226
தனபதி 177
தாட்டீகன் 10
தாளம் 146
தானம் தவம் 65
திரளமுது 38
திருக்குருகை 78
திருக்குருகைப்
பாண்டியன் 27
திருஞானதேசிகன் 39
திருஞானமுத்திரைக்கைத்
தானவன் 127
திருமஞ்சனம் 125
திருமால் 175, 266
திருமால் சங்க மகிமை 266
திருமொழி 77
திருவழுதிநாடு 70
திருவாய்மொழி 77
திருவாய்மொழி
திருமொழி விழா 77
திருவேங்கட நரேந்திரன்
காப்பு, 152, 168
திருவேங்கடநாதன் 48, 49,
50, 51, 115, 325
தினப்பூசை 111
தீவட்டி 138
துங்கன் 3
துடி 145
துந்துமி 146
தும்பி 316
தும்பிப்பதக்கம் 130
துராய் 133
துரை 42
துரைசாமி 167
துரைமக்கள் 143
துரைமாலைப்பிள்ளை 53
துவரை 302
தெக்கணாதாரம் 104
தெய்வநாயகமகீபன் 53
தெய்வேந்திரன் 29
தெருவீதிவலம் 169

| | |
|---|---|
| தென்னன் | 135 |
| தேவகுரு | 271 |
| தேவதரு | 72 |
| தேவேந்திரபோகம் | 147 |
| தேன் (வண்டு) | 323 |
| தையல்பாகமால் | 56 |
| தொழுகுலத்தோர் | 143 |
| தோரணம் | 164 |
| தோள்வளை | 186 |
| நகமூன்றல் | 232 |
| நட்டுவர் | 153 |
| நடனம் | 156 |
| நம்பினரைத்தாபரிப் போன் | 9 |
| நவகண்டம் | 82 |
| நவநீதமுண்டபிரான் | 3,4 |
| நனவெனவொன்றில்லை (குறள்) | 246 |
| நாகசுரம் | 146 |
| நாகரிகன் | 2 |
| நாவலர் | 5 |
| நிகும்பலை | 288 |
| நிதம்ப நடுமணி | 233,234 |
| நியமநிலை | 16 |
| நீதிவரராமன் | 4 |
| நீளைத்திரு | 301 |
| நூபுரம் | 237 |
| நெடுமால் | 70 |
| நெற்றித்திலதம் | 184 |
| நெறி | 16 |
| பஞ்சகதி | 96 |
| பஞ்சவர் | 281 |
| படகம் | 144 |
| பணவம் | 144 |
| பணை | 145 |
| பதக்கம் | 130 |
| பதலை | 145 |
| பதபாகன் | 8 |
| பதுமக்கணை | 216 |
| பந்தர் | 164 |
| பம்பை | 144 |
| பரதநிலமநலம் | 159 |
| பரதன் | 283 |
| பரி (தசாங்கம்) | 108 |
| பரிபுரம் | 186 |
| பல்லாண்டு | 143 |
| பவனி | 189 |
| பாக்கியவான் | 6 |
| பாகர் | 117, 124 |
| பாகு | 133 |
| பாகுமொழி | 33 |
| பாடகம் | 186 |
| பாடகர் | 154 |
| பாவராகம் | 156 |
| பாவாடை | 139 |
| பிரசம் | 317 |
| பிரமம் | 308 |
| பிரமரம் | 314 |
| பிறபடிகன் | 1 |
| பீடிகை | 126 |
| பீதாம்பரம் | 126 |
| பீலி | 144 |
| புட்பாஞ்சலி | 156 |
| புதுமையறி புண்ணியவான் | 17,18 |
| புரந்தரன் | 174 |
| புருடோத்தமன் | 18 |
| புவனபரிபாலன் | 28 |
| பூடி | 186 |
| பூதூர் எதிபதி | 40,41 |
| பூமெத்தை | 223 |
| பெரியதந்தை | 52 |

பெரியதிருவடிவிபேகன் 54
பெலவீமன் 32
பொதியப்பொருப்பு 63
பொருனைநதி 66
பொன்னோலை 185
போசன் 11
மகமேருவிலே செண்டடித்த
வேந்தர் பெருமான் 9, 10
மங்கலநாண் 259
மடலெழுதுகாமன் 8
மணிமகுடம் 24
மணிவண்ணன் 182
மத்தளம் 155
மதமலை 136
மதவேள் 221, 222
மதன் எத்து 304, 305
மதன் காளம் 207
மதனாதிக்கவாழ்வு 258
மதனாவேசம் 234
மதியூகி 8
மதுகரம் 319
மதுர மிருது வசனன் 17
மதுரைநகர் 179
மந்தரம் 21
மந்திரமேன்மை 292
மயில் 310
மராடர் 89
மரியாதைராமன் 6
மருகன் 57
மலர்ச்சோலை 220, 221
மலர்ப்பந்தர் 221
மலையக்கால் 210
மறுமன்னர் 24
மறைவல்லோர்கள் 33
மா (வண்டு) 324
மாகதர் 33
மாயச்சனகி 282
மார்க்கண்டன் 7
மாலை (தசாங்கம்) 109
மிருதுவசனன் 17
மீனாட்சிநாதத்துரை 46, 167
மீனாட்சிநாதமண்ட
லாதிபதி 45
முகமட்டம் 93
முகவீணை 154
முத்தமிழ்ப்பாவேந்தர் 25
முத்துக்கோவை 130
முதாரி 132
முதுமையறிபுண்ணியவான்
17-18
முந்தானைதொடல் 228
முரசு (தசாங்கம்) 113
முருடு 145
முழவு 144
முறைமையெதுவுமறி
புண்ணியவான் 17,18
மூலமென்ற காராளை 278
மைத்துனர் 59
மொந்தை 145
மோதிரம் 185
மோனத்திருவுருவு 39
யாழ்ப்பாணர் 25
யோக்கியபரன் 27
யோகதெட்சணாதிக்க
வேந்தர் 32
ரணபேரி 153
ராசவீதி 75
ருத்திரவீணை 154
லாகடம் 135
வங்கர் 89
வசனநெறுபாகன் 31
வடுகர் 89

வண்டரசு 268, 295, 311
வண்டின்பெருமை 250
வண்டு 238
வண்டுகாணல் 248
வண்டுவிடுதூது காப்பு
வத்தி 138
வந்தியர்கள் 142
வரராமன் 4
வரி 324
வரிக்கடை 321
வல்லரி 144
வல்லாளன் 18
வலாரி 14
வளைபெற்றவளம் 272,274
வாகுவலயம் 131
வாய்மைக்கணக்கர் 26
வான்கா 22
வானாசலமுனி 37
விக்கிரமாதித்தன் 11
விக்கிரமாற்கன் 150
விசயன் 2
விசையன் 32
விதிவசம் 306
விமானம் 284
விரலாழி 132
வீரக்கழல் 118
வீமன் 32
வீரத்தண்டை 101
வெண்சாமரை 34
வெண்டையம் 94
வெண்ணையுண்ட கண்ணன் 50
வெய்யோன்தவச்செயல் 112
வேங்கை 296
வேடையம் 97
வேதன் 66
வேதா 40
வேதாந்தமெய்ப்பொருள் 126
வேலையணை கண்டான் 49
வேலையிடமாயுதித்தமின் 23
வேள் 5, 44, 46, 173
வேள் (செவ்வேள்) 310
வைகுந்தநாதன் 58